# உதயன்

கூ.வெ. 31°C
கு.வெ. 26°C
மேகமூட்டம், மழை

சுடர் 30 | கதிர் 159 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 22. செவ்வாய்க்கிழமை 05.05.2015


## நிறுவனங்களில் இனி இலவச 'வை–பை'

கொழும்பு, மே 5
அரச நிறுவனங்களில் இலவச 'வை–பை' வலயங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.
மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இலவச 'வை–பை' வலயங்களை அமைப்பதற்குதிட்டமிடப்பட்டுள்ளது என அதன் திட்ட முகாமையாளர் கவாஸ்கர் சுப்ரமணியம் சுட்டிக்காட்டியுள்ளார்.
(விரிவு 21ஆம் பக்கத்தில்)

# மின் பாய்ந்து தந்தை, மகன் துடிதுடித்து சாவு

## மல்லாகத்தில் நேற்று பரிதாபச் சம்பவம். மின்கம்பி அறுந்து விழுந்ததால் விபரீதம்

யாழ்ப்பாணம், மே 5
மழை நேரம் மின்கம்பி-அறுந்து வெள்ள வாய்க்காலில் விழுந்து மின் பாய்ந்து கொண்டிருந்த சமயம், வெள்ளவாய்க்காலைக் கடந்த தந்தையும் மகனும் தண்ணீர் மூலமாக மின் தாக்குதலுக்கு உள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.
இந்தப் பரிதாபகரமான சம்பவம் சுன்னாகம் ஐயனார் கோயில் முன்பாகவுள்ள வெள்ள வாய்க்கால் வீதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 அளவில் நடந்தது.
கல்லாரை மல்லாகத்தைச் சேர்ந்த 30 வயதுடைய பாலச்சந்திரன் ரஜீவன் மற்றும் அவரது 9 வயது மகனான நிருஜன் ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.
ரஜீவன் மகனுக்கு தலைமுடியை வெட்டுவதற்காக சிகை அலங்கரிப்பு நிலையத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார். அந்தச் சமயம் இடி முழக்கத்தோடும், காற்றோடும் கடும் மழை பெய்துள்ளது.
பக்.02

## வாக்காளர் பட்டியல் தயாரிப்பு 15ஆம் திகதி முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 5
நடப்பு ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.
அத்துடன் புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் ஒக்ரோபர் 31 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஒக்ரோபர் 31 ஆம் திகதிக்கு முன்னதாக, நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படுமாக இருந்தால், 2014 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலே பயன்படுத்தப்படும் என்றும்
பக்.02

## மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், மே 5
ஆனைக்கோட்டையில் நேற்று முன்தினம் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். முருகமூர்த்தி வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தியாகராசா சசிகுமார் (வயது–39) என்பவரே உயிரிழந்தவராவார்.
இவர் ஆனைக்கோட்டையிலிருந்து யாழ்.நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு தூக்கி வீசப்பட்டார் என்று கூறப்படுகின்றது.
பக்.02

## தேர்தல் முறை மாற்றம் குறித்து ஆராயக் குழு

### தமிழரசுக் கட்சி நியமித்தது

யாழ்ப்பாணம், மே 5
தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் இரு வாரங்களுக்குள் ஆராய்ந்து முடிவெடுப்பதற்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு, குழு ஒன்றை நியமித்துள்ளது. இந்தக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே, 20 ஆவது திருத்தச் சட்டம் மீதான நிலைப்பாட்டை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று
பக்.02

## அருவி ஆற்றில் மூழ்கி சகோதரர் இருவர் சாவு

### மன்னாரில் நேற்றுச் சம்பவம்

மன்னார், மே 5
மன்னார், அருவி ஆற்றில் குளிக்கச் சென்ற சகோதரர்கள் இருவர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. மன்னார் தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த என்.எம்.சிபான் (வயது–32) மற்றும் என்.எம்.முபாஸ் (வயது–18) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.
மன்னார், தாராபுரத்தைச் சேர்ந்த இவர்கள் நேற்றுக் காலை குடும்ப உறவினர்களுடன் சிலாபத்தில் உள்ள வெசாக்நிகழ்வுகளைப்பார்ப்பதற்காகச் சென்றிருந்தனர். மதிய உணவுவேளை அவர்கள் அருவி ஆற்றுப் பகுதிக்குச் சென்றுள்ளனர்.
அப்போது முபாஸ் ஆற்றில் இறங்கிக் குளிக்க முற்பட்டுள்ளார். அப்போது அவர் ஆற்றில் மூழ்கத் தொடங்கியதை அடுத்துத் தன்னைக் காப்பாற்றுமாறு கத்தியுள்ளார்.
பக்.02

## ஜோன் கெரியின் கூற்றுக்கு சொல்ஹெய்ம் வரவேற்பு




கொழும்பு, மே 5
இலங்கையில் உண்மையான நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுக்கு அமெரிக்க இராஜாங்கச் செயலர் உறுதியளித்தமையை வரவேற்றுள்ளார் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.
போர்க் குற்ற விசாரணைகளுக்கு
பக்.02

## ஈகச் சுடர் விவகாரம்: ரவிகரனுக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம், மே 5
கடந்த வருடம் மாவீரர் நாளன்று ஈகச்சுடரேற்றியமை தொடர்பில், விசாரணைக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுக்கு பொலிஸார் அழைப்பாணை அனுப்பியுள்ளனர். முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் இன்று காலை விசாரணை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பால் கடைப்பிடிக்கப்படும் மாவீரர் நாள் நிகழ்வுகள், 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கை அரசால் தடை செய்யப்பட்ட ஒன்றாக இருந்து வருகின்றது. இந்த நிலையில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி, மாவீரர் நாள் அன்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஈகச் சுடரேற்றி அஞ்சலி செய்ததாகத் தெரிவித்து, அவரை விசாரணைக்கு வருமாறு பொலிஸார் அழைத்துள்ளனர்.
முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரிகள் இருவர், மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின்
பக்.02

## மைத்திரி - மஹிந்த சந்திப்பு நாளை?

கொழும்பு, மே 5
முன்னாள் மற்றும் தற்போதைய ஜனாதிபதிகளின் ஒத்திவைக்கப்பட்ட சந்திப்பு, நாளை புதன்கிழமை, முன்னாள் ஜனாதிபதியின் சகோதரரும் சபாநாயகருமான சமல் ராஜபக்ஷவின் இல்லத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்திப்பு திட்டமிட்டபடி நடைபெறும் பட்சத்தில் இருவரும் ஆறு மாதங்களின் பின்னர் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ளவுள்ளனர்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா, மகிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன ஆகியோர், கடந்த சனிக்கிழமை-ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து மஹிந்தவுடனான சந்திப்புக் குறித்துக் கலந்துரையாடியுள்ளனர். கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க இருவரும் சந்திக்க வேண்டியது அவசியம் என்றும் இவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.
எதிர்க்கட்சித் தலைவர் அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலரை அனுப்பி, மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்புக்கு அழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.
பக்.02

## யாழ்.பொலிஸ் நிலைய காணியை சுவீகரிக்கும் முயற்சிகள் மும்முரம்

யாழ்ப்பாணம், மே 5
யாழ்.பொலிஸ் நிலையம் தற்போதுஅமைந்துள்ளகாணியை சுவீகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. துரையப்பா விளையாட்டரங்குக்கு அண்மையில் புதிய பொலிஸ் நிலையம் அமைக்கப்படும் நிலையில், தற்போதுள்ள பொலிஸ் நிலையக் காணியைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
யாழ்.நகரில் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அண்மையில் யாழ்பொலிஸ்நிலையம்அமைந்துள்ளது. பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணி தனியாருக்குச் சொந்தமானதாகும். ஆனாலும், யாழ்.குடா நாட்டை இராணுவத்தினர் கைப்பற்றியதிலிருந்து, குறித்த காணி இராணுவத்தினர்
பக்.02

### பொலநறுவை மைந்தன் மைத்திரி அரசியல் வானில் ஜொலிப்பு

பக்கம் 17

### சாது மிரண்டால் காடு கொள்ளாது!

பக்கம் 16

## மெனிக்பாம் காணி இராணுவத்துக்கு இல்லை

### மீள்குடியேற்றம் தொடர்பான கூட்டத்தில் முடிவு

வவுனியா, மே 5
வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவிலுள்ள ஆறாயிரம் ஏக்கர் காணி இராணுவத்தினரின் தேவைக்கு என பிரதேச செயலாளரிடம் அனுமதி கோரப்பட்டுள்ள நிலையில் அதற்கு அனுமதி வழங்குவதில்லை என வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மீள் குடியேற்றம் தொடர்பான கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.
கடந்த வாரம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மீள் குடியேற்ற அமைச்சின் உயரதிகாரிகளுடனான
பக்.02

## நாரந்தனையில் வீடு புகுந்து நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், மே 5
நாரந்தனை தெற்கு சூரியாவத்தையில் வீட்டில் ஆள்களற்ற நேரம் உட்புகுந்த திருடர் 2 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2 ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வீட்டிலுள்ளவர்கள் யாழ்.நகருக்குச் சென்றிருந்த போது இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக முறையிடப்பட்டுள் ளது.

இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

## வெலிக்கடை கொலை: விசாரணை கோரி பிரதமரிடம் மனு

கொழும்பு, மே 5
2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற வன்முறையில் கொல்லப்பட்ட 27 கைதிகளின் பெற்றோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவுள்ளனர்.

மே 15ஆம் திகதிக்கு பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதன்போது கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் நியாயம் பெற்றுத்தருமாறு பெற்றோர் உறவினர்கள் கோரிக்கை மனு ஒன்றை ரணிலிடம் கையளிக்கவுள்ளனர்.

ஏற்கனவே இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்ட போதும் எவரும் கைது செய்யப்படவில்லை.

இந்தநிலையிலேயே கொல்லப்பட்ட சிறைக் கைதிகளின் பெற்றோரும் உறவினர்களும் நீதி கேட்டு மனுவைக் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் பொரள்ளையில் பேரணி ஒன்றையும் அவர்கள் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 22ஆவது அமர்வு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 5
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 22 ஆவது அமர்வு இன்று ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 3 நாள்களுக்கு இந்த அமர்வு இடம்பெறும். ஆரம்ப நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறுகிறது. சங்கத் தலைவர் பேராசிரியர் திருமதி சி.குகநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும். ஆரம்ப அமர்வில் களனி பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் நிலாந்தி டிசில்வா கலந்துகொள்வார். பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் தங்கப் பதக்க விருதை இந்த வருடம் பெற்றுக்கொள்ளவுள்ளார். இந்தப் பதக்கத்துக்கான விரிவுரையை 'குடற்புழுக்களும் மனிதனின் நிலையும்' எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார். பிரிவு 'பி' இன் சஞ்சிகை வெளியீடும் இடம்பெறும்.

இதேவேளை தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞாக சங்கம் கடந்த காலங்களில் நடத்தி வந்தது போன்று வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையயான விஞ்ஞானப் போட்டி நிகழ்ச்சிகளை நடத்தியது.

அதில் வெற்றி பெற்றவருக்களுக்கான பரிசளிப்பு 7 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பரிசுபெறும் மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறும் சங்கச் செயலாளர் கலாநிதி ப.செவ்வேள் கேட்டுக்கொண்டுள்ளார். (ற-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## மின் பாய்ந்து தந்தை, மகன் துடிதுடித்து சாவு

சிகை அலங்கரிப்பு நிலையத்துக்குச் சென்றுவிட்டு அவர்கள் வீடு திரும்பியபோது குறித்த வெள்ள வாய்க்காலைக் கடந்தனர். கடுமையான மழையால் அறுந்த மின்கம்பி ஒன்று அந்த வெள்ள வாய்க்காலில் விழுந்திருந்ததை அவர்கள் கவனிக்கவில்லை.

சைக்கிளில் வந்த அவர்கள் வெள்ள வாய்க்காலைக் கடப்பதற்காகத் தண்ணீரில் இறங்கியவுடன் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

மின் தாக்குதலுக்கு உள்ளாகியதை உணர்ந்த ரஜீவன் அந்த இடத்தில் நின்றிருந்தவர்களுக்கு சைகை மூலம் காண்பித்தவாறு தண்ணீரில் விழுந்து உயிரிழந்துள்ளார். அவரது மகனும் உயிரிழந்தார். சில நொடிகளில் இவை நடந்து முடிந்துவிட்டன.

அங்கு நின்றிருந்தவர்கள் இதன் பின்னரே மின்சாரக் கம்பி அறுந்து விழுந்துள்ளதை அவதானித்தனர்.

உடனடியாக தண்ணீரில் இறங்கி மின்தாக்குதலுக்கு உள்ளானவர்களைக் காப்பாற்றுவது சாத்தியமில்லாது போனது. மின்சாரசபைக்கு அறிவிக்கப்பட்டு அதிகாரிகள் வந்து மின்சாரத்தை நிறுத்தியே உயிரிழந்தவர்களது உடல்கள் மீட்கப்பட்டன.

தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு அறிவிக்கப்பட்டு அங்கிருந்து வந்த அம்புலன்ஸ் மூலம் அவர்களின் உடல்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

சுன்னாகம் மற்றும் தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்தப் பகுதியில் மின்சார திருத்த வேலைகள் இடம்பெற்று பல ஆண்டுகளாகிவிட்டன என்று மின்சார சபையின் அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்தச் சம்பவம் அந்தப் பகுதி எங்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (ற-4,36,86)

### வாக்காளர்

தேர்தல்கள் திணைக்கள வட் டாரங்கள் தெரிவித்தன.

வாக்காளர் பெயர்ப் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் தேர்தல்கள் திணைக்களத்தால் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. வடக்கு மாகாணத்தில் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வு இடம்பெறுகின்றது.

அதனடிப்படையில் எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதி வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவுக்குரிய 'பிசி' படிவம் கிராம சேவையாளர்களால் வீடு வீடாக விநியோகிக்கப்படவுள்ளது. எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் இந்த மாதம் 31 ஆம் திகதிக்குள் கிராம சேவையாளர்களால் இவை வீடு வீடாக விநியோகித்து முடிக்க வேண்டும்.

ஜுன் மாதம் முதலாம் திகதி வாக்காளர் தினமாகும். ஜுன் மாதம் முதலாம் திகதியிலிருந்து ஜுன் மாதம் 15 ஆம் திகதி வரையில், விநியோகிக்கப்பட்ட 'பிசி' படிவங்கள் மீளவும் கிராம சேவையாளர்களால் பெற்றுக் கொள்ளப்படும். பின்னர் அவை பரிசீலிக்கப்பட்டு, புதிய பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டு, மீளாய்வுக்கு சந்தர்ப்பம் வழங்கி அதன் பின்னர், வாக்காளர் பெயர்ப் பட்டியல் இறுதி செய்யப்படும்.

இறுதி செய்யப்பட்ட வாக்காளர் பெயர்ப் பட்டியல் ஒக்ரோபர் 31 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். அதன் பின்னர் நடைபெறும் சகல தேர்தல்களிலும், 2015 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலே பயன்படுத்தப்படும். (ற-5)

### மோ.சைக்கிள்

அவ்வாறு தூக்கி வீசப்பட்டவர் வீதியோரமாக விழுந்து கிடந்துள்ளார். அவரது கால் மாத்திரம் வீதியில் கிடந்துள்ளது. அந்த வழியே சென்ற கார் ஒன்று அவரது கால் மேலாக ஏறிச் சென்றுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

அவர் பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது 2 மணித்தியாலங்கள் கழித்து உயிரிழந்தார். விபத்தில் காயமடைந்த மற்றையவரான நவாலி தெற்கு மானிப்பாயைச் சேர்ந்த மாசிலாமணி மதிராஜ் (வயது - 23) என்பவர் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ற-4)

### அருவி

அதையடுத்து அவரது சகோதரனான சிபான் ஆற்றில் பாய்ந்துள்ளார். ஆயினும் இருவரும் ஆற்றில் மூழ்கிக் காணாமல் போயினர்.

உடனடியாகக் கிராம மக்களும் கடற்படையினரும் இணைந்து ஆற்றில் தேடுதல் நடத்தினர். பிற்பகல் 3 மணியில் இருந்து தேடுதல் நடத்தப்பட்ட நிலையில் மாலை 6.30 மணியளவில் இருவரும் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டனர். இருவரில் உடல்களும் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-56)

### ஜோன்

இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கெரி வலியுறுத்தியமையை வரவேற்பதாகவும் அவர் தனது 'ருவிட்டர்' பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச் செயலர், கொழும்பில் உரையாற்றிய போது, ஐ.நா.வின் போர்க் குற்ற விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

இது குறித்து ருவிட்டரில் தனது கருத்தைப் பதிவு செய்துள்ள, இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், "ஐ.நா.வின் போர்க்குற்ற விசாரணைகளுக்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், எஞ்சியுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றும், ஜோன் கெரி கேட்டுக்கொண்டுள்ளார். நல்லது'"- என்று குறிப்பிட்டுள்ளார்.

அதே போன்று கூட்டமைப்புடனான சந்திப்பில், இலங்கையில் உண்மையான நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அமெரிக்கா உதவி வழங்கும் என்று கெரி உறுதியளித்திருப்பதையும் வரவேற்று, எரிக் சொல்ஹெய்ம் 'ருவிட்டர்' பக்கத்தில் பதிவு செய்துள்ளார். (ற-5)

### தேர்தல்

இடம்பெற்றது. கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசா மற்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். காலையிலிருந்து மாலை வரையில் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பிலான தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும் அது தொடர்பில் எந்தவொரு விடயமும் இடம்பெறவில்லை.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியுடனான சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. 19 ஆவது திருத்தச் சட்டத்தைப் பற்றிய விளக்கம் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் மக்களை கிராமம் கிராமமாகச் சந்தித்து, 19 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலான விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை விட ஊடகங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்பில் வெளிவரும் செய்திகளுக்கு, மத்திய குழு உறுப்பினர்கள் பதில் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்காக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் மூவர் கொண்ட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது. (ற-5)

### ஈகச் சுடர்

வீட்டுக்கு நேற்று மாலை நேரில் சென்று, நாளை (இன்று) காலை 10 மணிக்கு விசாரணைக்கு வருமாறு அழைத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-5)

### மைத்திரி

அதே வேளை, குமார வெல்கம, பந்துல குணவர்த்தன, மகிந்தானந்த அளுத்கமகே, ரி.பி.எக்கநாயக்க, காமினி லொக்குகே ஆகியோர் நாளைய சந்திப்புக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்திருந்தனர்.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிடையில் சந்திப்பு ஏதும் இருப்பதாக தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் தர்மசிறி பண்டார ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரி மற்றும் முன்னாள் ஜனாதிபதிக்கும் இடையில் கடந்த வாரம் சந்திப்பு இடம்பெற ஏற்பாடாகியிருந்தது. இறுதி நேரத்தில் அது ரத்துச் செய்யப்பட்டது. தற்போது இந்தச் சந்திப்புக்கு மீண்டும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கலின் போது, மஹிந்த – மைத்திரி இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர். இதன் பின்னர் இவர்கள் இருவரும் நேருக்கு நேர்சந்தித்துக்கொள்ளவில்லை(ற-5)

### யாழ்.

வசமும் பின்னர் பொலிஸார் வசமும் உள்ளது.

யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு துரையப்பா விளையாட்டரங்குக்கு அண்மையில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது. குறித்த கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்தநிலையில், தற்போது பொலிஸ் நிலையம் அமைந்துள்ள காணியையும் சுவீகரிப்பதற்கு வேகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறித்த காணியை சுவீகரிப்பதற்கான அளவீட்டு நடவடிக்கைகள் நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

### மெனிக்பாம்

கூட்டத்தில் மேற்படி முடிவு எட்டப்பட்டுள்ளது என்றுவடக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சரின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த வாரம் வவுனியா மாவட்ட செயலகத்தில் சிதம்பரபுரம், பூந்தோட்டம் நலன்புரி நிலையங்களிலுள்ள குடும்பங்களின் மீள்குடியேற்றம் தொடர்பான முக்கிய கூட்டமொன்று நடைபெற்றது.

அதில் வடக்கு மாகாண சுகாதார மற்றும் புனர்வாழ்வு அமைச்சரின் சார்பில் அமைச்சரின் பிரத்தியேக செய லாளரால் மெனிக்பாம் பகுதியில் ஆறாயிரம் ஏக்கர் காணி இராணு வத்தினரின் தேவைக்கு சுவீகரிக்கப்பட வுள்ளமை பற்றித் தெரிவிக்கப்பட் டது.

இதன்போது கருத்துதெரிவித்த மத்திய மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளை புதிதாக இராணுவத் தேவைக்கு காணி வழங்குவது பொருத்தமற்றதென்றும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சால் அமைச்சரவைப் பத்திரமொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். – என்றுள்ளது. (ற)

# சேமிப்பு வாரத்தில் ரூ.174.7 மில்லியன்

## வாழ்வின் எழுச்சித் திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர் மகேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 5

யாழ்.மாவட்டத்தில் வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால், புத்தாண்டு சேமிப்பு வாரத்தில் 174.7 மில்லியன் ரூபா பணம் சேமிப்புச் செய்யப்பட்டுள்ளதாக வாழ்வின் எழுச்சித் திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் தெரிவித்தார்.

வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தால், வருடந்தோறும் புத்தாண்டு சேமிப்பு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இந்த வருடம் ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம், 20 ஆம் திகதி வரையில் புத்தாண்டு சேமிப்பு வாரம் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்தக் காலப் பகுதியில் யாழ்ப்பாணத்திலுள்ள வாழ்வின் எழுச்சி சமுதாய வங்கிச் சங்கங்களால் சேமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. அதனூடாக யாழ்.மாவட்டத்தில் மாத்திரம் 174.7 மில்லியன் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நெல்லியடி சமுர்த்தி வங்கி ஒரு கோடியே 55 லட்சம் ரூபாவும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சாவகச்சேரி சமுர்த்தி வங்கி ஒரு கோடியே 50 லட்சத்து 56 ஆயிரம் ரூபாவும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மானிப்பாய் சமுர்த்தி வங்கி ஒரு கோடியே 34 லட்சம் ரூபாவும், அதே பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பண் டத்தரிப்பு சமுர்த்தி வங்கி ஒரு கோடியே 20 லட்சம் ரூபாவும், கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட உடுப்பிட்டி சமுர்த்தி வங்கி ஒரு கோடியே 5 லட்சம் ரூபாவும் சேமித்துள்ளன.

அதேவேளை, இவ்வாறு சேமிக்கப்பட்ட பணம், அந்தப் பகுதி மக்களின் தேவைகளுக்கே பயன்படுத்தப்படவுள்ளன. (ற-5)

# ஹலோ ட்ரஸ்ட் பணியாளர்கள் மீண்டும் நேற்று ஆர்ப்பாட்டம்

பணியில் தம்மை மீள இணைக்குமாறு கோரி



யாழ்ப்பாணம், மே 5

கிளிநொச்சி மாவட்ட கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் மூன்றாவது தடவையாக நேற்று ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

ஒப்பந்த காலம் முடியும் வரை அனைத்து பணியாளர்களையும் வேலையில் அமர்த்துங்கள் என்று கோரியே ஹலோ ட்ரஸ்ட் பணியாளர்கள் 450 பேர் கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் முன்னால் மூன்றாவது தடவையாகவும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தில் ஒப்பந்த அடிப்படையில் வேலையில் ஈடுபட்ட பணியாளர்கள் 750 பேரில் 450 பணியாளர்கள் தற்போது பணியில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறு பணியில் இருந்து நிறுத்தப்பட்ட 450 பணியாளர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் திடீர் என ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தால் செய்யப்பட்ட ஆள்குறைப்பு தனக்கு மன வருத்தத்தை தருவதாகவும், எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன்னர் இப்பிரச்சினை சம்பந்தமான தீர்க்கமான முடிவை கூறுவதாகவும் இதற்காக பல தரப்பினருடன் பேச வேண்டி இருப்பதாகவும் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தைக் கைவிடுமாறு கோரினார்.

அதையடுத்து ஆர்ப்பாட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதாக கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் தெரிவித்தனர். (ற-21)

## வியாபாரிகளுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 5

ஒப்பனைச் சாதனங்கள் இறக்குமதியாளர்கள், சில்லறை வியாபாரிகள் மற்றும் மொத்த வியாபாரிகளுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. இல. 165,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள யாழ்.வணிகர் கழக மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 3.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலானது யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினராலும் யாழ். வணிகர் கழகத்தினராலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ற-4)

## போதைப்பொருள் சந்தேகநபர்களின்

# பிணையை ஆட்சேபிக்காத பொலிஸ் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 5

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபர்களுக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்காத குற்றத்தடுப்பு பொலிஸ் பரிசோதகர் தற்காலிகமாகபணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள் ளார்.

யாழ்.பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொலிஸ் பரிசோதகர் சிசேர என்பவரே இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைக்காகஅவர்தற்காலிகமாகஇடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் யாழ். நகரப்பகுதியில் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குப் பிணை வழங்கப் பொலிஸார் ஆட்சேபம் தெரிவிக்காததை அடுத்து யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் பிணை வழங்கியதுடன், வழக்கையும் ஒத்திவைத்தார்.

பின்னர் அந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் பிணை அனுமதியை இரத்துச் செய்ததுடன், குறித்த இரு இளைஞர்களையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன், பிணை வழங்குவதற்கு பொலிஸார் ஆட்சேபிக்காததையும், அதேவேளை ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் தமிழ் இளைஞர் ஒருவருக்கு இந்தோனேசியாவில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டதனையும் சுட்டிக் காட்டி, பொலிஸாரின் நடவடிக்கையில் அதிருப்தியையும் வெளியிட்டிருந்தார்.

ஹெரோயின் வழக்கில் பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவிக்காத பொலிஸ் அதிகாரி குறித்த பதவிக்குப் பொருத்தமானவரா என்பதைத் தெளிவுபடுத்தும் அறிக்கை ஒன்றினை நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கு மாறும் யாழ்.மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபருக்கு கட்டளையிட்டார். அதன் பிரகாரம் குறித்த பொலிஸ் பரிசோதகர் நேற்று முன்தினம் பொலிஸ் திணைக்களத்தால் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4,106)

# மீண்டும் கலந்துரையாடவுள்ள இ.போ.ச., தனியார் சங்கங்கள்

யாழ்ப்பாணம், மே 5

யாழ்.மாவட்ட தனியார், தூர சேவைகள் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினருக்கும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையினருக்கும் இடையில் பயணிகள் சேவை தொடர்பில் இடம்பெறுகின்ற முரண்பாடுகள் தொடர்பில் அண்மையில் மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் சுமுகமான தீர்வுகள் எவையும் எட்டப்படாத நிலையில் வடக் கில் உள்ள ஏனைய மாவட்ட தூரசேவைகள் பஸ் உரிமை யாளர் சங்கங்களையும் இணைத்து எதிர்வரும் 8ஆம் திகதி மீண்டும் ஓர் கலந்துரையாடல் இடம்பெற இருப்பதாக யாழ். மாவட்ட தனியார் தூரசேவைகள் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சிவகரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி இடம்பெறவுள்ள கூட்டத்திலும் சுமுகமான தீர்வு எட்டப்படவில்லையாயின் எதிர்வரும் 11ஆம் திகதி தாம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## கொழும்புத்துறையில் யாழ். ப.நோ.கூ.ச. கிளை விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 5

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேலும் ஒரு கிளை விற்பனைநிலையம் ஒன்றைகொழும்புத்துறை கிழக்கில் திறக்கவுள்ளது என்று சங்கத்தின் தலைவர் மு.ஜெ. சுஜிந்திரன் தெரிவித்தார்.

கொழும்புத்துறை சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள கட்டடம் ஒன்றில் இந்தக் கிளை விற்பனை நிலையம் இந்த மாத இறுதிக்குள் திறந்து வைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

"இந்தப் பிரதேச மக்கள் சகல விதமான பொருள்களையும் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் இந்தக் கிளை நிலையம் அமைக்கப்படும். கொழும்புத்துறை பிரதேசத்தில் முன்னர் இரண்டு விற்பனை நிலையங்கள் செயற்பட்டு வந்தன. தற்போது கொழும்புத்துறை மேற்கில் மட்டுமே கிளை நிலையம் செயற்பட்டு வரும் நிலையில் கிழக்குப் பிரதேச மக்களின் வசதி கருதி இந்தப் புதிய விற்பனை நிலையம் மாத இறுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது."– என்று தெரிவித்தார்.

அதேவேளை, மேற்படி சங்கம் நல்லூரில் கடந்த மாத நடுப்பகுதியில் தனது கிளை ஒன்றைத் திறந்து வைத்திருந்தது. (ற-17)

# திடீரென இறந்தன 12 மாடுகள்; வைத்தியர்கள் அசமந்தம் என உரிமையாளர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 5

முல்லைத்தீவு, இந்துபுரம் பகுதியில் கூலித் தொழிலாளியான நா.பாலேந்திரன் என்பவரால் வளர்க்கப்பட்ட 12 கறவை மாடுகள் திடீரென உயிரிழந்துள்ளன. மாடுகள் உயிரிழந்தமைக்கு வைத்தியர்களின் அசமந்தப் போக்கே காரணம் என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

குறித்த மாடுகளால் ஈட்டப்பட்ட வருமானத்தைக் கொண்டே குடும்பத்தை நகர்த்தி வந்ததாகக் குறிப்பிட்ட நான்கு பிள்ளைகளின் தந்தையான பாலேந்திரன், தற்போது மாடுகள் உயிரிழந்துள்ளதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:–

மாடுகள் நோய்வாய்ப்பட்டு சோர்வாகக் காணப்பட்டதை அவதானித்து முல்லைத்தீவு கால்நடை வைத்திய அதிகாரிக்கு தகவல் கொடுத்தேன்.



மருத்துவர்களும், ஊழியர்களும் வந்து பார்வையிட்டு சிகிச்சைகள் வழங்கிவிட்டுச் சென்றனர்.

மறுநாள் காலையும் மாடுகள் சோர்வாகக் காணப்பட்டன. மீண்டும் கால்நடை வைத்தியசாலையைத் தொடர்புகொண்டேன். அங்கிருந்த ஊழியர்கள் ஒவ்வொரு நாளும் வந்து செல்வது சிரமம். அதற்கான போக்குவரத்து வசதிகள் இல்லை. கிளிநொச்சியில் இருந்து வைத்தியர்களை அழைத்துச்சிகிச்சை மேற்கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

அதன்பின்னர் 11 மாடுகளும் உயிரிழந்துவிட்டன. மீதியாக இருந்த ஒரு மாடு இறக்கும் தறுவாயில் இருந்தது. அதையாவது வந்து காப்பாற்றித் தாருங்கள் என்று கேட்ட போது நோய்க்கான சிகிச்சைகள் நேற்றே வழங்கப்பட்டு விட்டன என்று தெரிவித்தனர். – என்று கூறினார்.

இறந்த மாடுகளில் மூன்று கன்று ஈனும் பருவத்தில் இருந்தன. 8 மாடுகள் கன்று ஈன்ற மாடுகள். முட்டு நோயால் பாதிக்கப்பட்ட நான் இந்த மாடுகள் மூலம் ஒரு நாளைக்கு 15 லீற்றர் பால் கறந்து விற்றே எனது பிள்ளைகளை வளர்ந்து வந்தேன். வைத்தியர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்திருந்தால் எனது மாடுகளைக் காப்பாற்றியிருக்க முடியும்– என்றும் அவர் மேலும் கூறினார்.

இதுகுறித்து முல்லைத்தீவு– ஒட்டுசுட்டான் கால்நடை வைத்திய அதிகாரியைத் தொடர்புகொண்டு கேட்டோம். எமது ஊழியர்கள் நேற்று முன்தினம் விடுமுறைநாள் என்று கூடப் பாராது அங்கு சென்று சிகிச்சைகளை வழங்கியுள்ளனர். அவருடைய மாடுகளுக்குக் கிருமித் தொற்று ஏற்பட்டதாகத் தெரியவில்லை. நாங்கள் மறுநாள் சென்று பார்த்திருந்தாலும் மாடுகள் இறந்துதான் போயிருக்கும். மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்படவுள்ளது.

எங்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன. ஒட்டுசுட்டானில் இருந்து முறிகண்டி சற்றுத் தூரமே. எங்களிடம் நான்கு வாகனங்கள் உள்ளன. சாரதி ஒருவரே உள்ளார். அதனால் சாரதியை மாற்றி மாற்றிப் பயன்படுத்துவதில் பிரச்சினை உள்ளது. அதையே எமது ஊழியர்கள் கூறியிருப்பார்கள். – என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-21)

# சமுர்த்தி மீளாய்வு முறைகேடு: அரச அதிபரிடம் முறையிடலாம்

**மீளாய்வுக்காகச் சென்ற பெண்களிடம், பாலியல் ரீதியாக துன்புறுத்தும் கேள்விகளை, மன உளைச்சலை உருவாக்கும் கேள்விகளை, சமுர்த்தி மீளாய்வு செய்த உத்தியோகத்தர் கேட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.**

யாழ்ப்பாணம், மே 5

சமுர்த்தி மீளாய்வு முறைகேடு தொடர்பில் மீளவும் மீளாய்வு நடத்துவதற்கும் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும், யாழ்ப் பாண பிரதேச செயலாளர் மறுத்தால், தன்னிடம் வந்து முறையிடுமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் சமுர்த்தி முத்திரை மீளாய்வு கடந்த மாதம் இடம்பெற்றது. அதன் போது பல்வேறு முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக, மீளாய் வுக்காகச் சென்ற பெண்களிடம், பாலியல் ரீதியாக துன்புறுத்தும் கேள்விகளை – மன உளைச்சலை உருவாக்கும் கேள்விகளை, சமுர்த்தி மீளாய்வு செய்த உத்தியோகத்தர் கேட்டுள்ளார் என்று கூறப்படுகின் றது. அத்துடன் மீளாய்வுக்காக மக் கள் காலையில் அழைத்து மாலை வரையில் அலைக்கழிக்கப்பட்ட னர் என்றும், மீளாய்வின்போது, விதவைகள், கைவிடப்பட்டவர் கள், கூலி வேலைகள் செய்வோர் எனப் பலரது சமுர்த்தி நிவாரண மும் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்த முறைகேடு தொடர்பில், பாதிக் கப்பட்ட மக்களால் யாழ்.மாவட்ட அரச அதிபருக்குத் தெரியப்படுத் தப்பட்டது. இதனையடுத்து, குறித்த முறைகேடுகள் தொடர்பில் விசா ரணை நடத்த அரச அதிபர் பிரதேச செயலருக்குப் பணித்திருந்தார்.

ஆனாலும், பிரதேச செயலாளர் மீளாய்வு முறைகேடு தொடர்பில் மீளவும் விசாரணை மேற்கொள்ள வில்லை என்று பாதிக்கப்பட்ட மக் கள் 'உதயனுக்குத்' தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாய கனிடம் கேட்ட போது; பிரதேச செயலாளர் விசாரணை மேற் கொள்ளவில்லையாயின் தன்னி டம் வந்து அது தொடர்பில் பொது மக்கள் முறையிட முடியும்– என்று தெரிவித்தார். (ற–5)

## பலசரக்குக் கடைகளில் மரக்கறி விற்க எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மே 5

கிளிநொச்சி, கண்டாவளை பிர தேசத்தில் பொதுச் சந்தைகளுக்கு அண்மித்த பகுதிகளிலுள்ள பல சரக்கு கடைகளில் மரக்கறி விற் பனை செய்யப்படுவதால் தாங்கள் பாதிக்கப்படுவதாக சந்தைகளின் மரக்கறி வியாபாரிகள் தெரிவித் தனர். இதனைத் தடை செய்யுமாறு பிரதேச செயலகம் மற்றும் கரைச்சி பிரதேச சபையிடம் கோரிக்கை முன்வைத்துள்ளதாகவும் அவர் கள் கூறினர்.

கண்டாவளை பிரதேசத்துக்குட் பட்ட கல்லாறு, தர்மபுரம், பரந்தன், முரசுமோட்டை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பொதுச் சந்தை களை அண்மித்த பகுதிகளிலுள்ள கடைகளில் மரக்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. அதனால் பொதுச்சந்தை மரக்கறி வியாபாரி கள் தமது வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் இத னால் தாம் நாளாந்த வருமானத் தைக்கூட பெற முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் தெரி விக்கின்றனர். தாங்கள் பல்வேறு இடங்களில் இருந்து மரக்கறி களைக் கொண்டு வந்து விற்பனை செய்யும் போது அவற்றை விற் பனை செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது என்றும் கூறி னர். (ற)

## பரந்தனில் புதிய பாலம்



கொழும்பு, மே 5

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் 3 மில்லியன் ரூபா செலவில் பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப் பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்தார்.

பரந்தன் முதலாம் ஒழுங்கைக் கிராம மக்கள் பயன்படுத்தும் இந் தப் பாலம் கடந்த முறை இரணை மடு வான் கதவுகள் திறக்கும் போது நீர்பாய்ந்து சேதமடைந்தது. அதனால் இந்த வீதியூடாக மக்கள் பயணிக்க முடியாத நிலையேற் பட்டது.

இதனை கருத்திற்கொண்டு நீர்ப் பாசனத் திணைக்களத்தால் விரை வாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்தப் பாலம் மீண்டும் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது என்று பணிப்பாளர் கூறினார். (ற)

## தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் இணைய வேண்டும்

### வட பிராந்திய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கோரிக்கை

தென்மராட்சி, மே 5

வடபகுதியில் மக்கள் மயப்படுத் தப்பட்ட பொலிஸ் சேவையை கட்டி யெழுப்ப பெருமளவு தமிழ் இளை ஞர், யுவதிகளை பொலிஸ் சேவை யில் இணைக்க மக்கள் பிரதிநிதி கள் ஊக்குவிக்க வேண்டும். – இவ் வாறு வட பிராந்திய சிரேஷ்ட பிர திப் பொலிஸ்மா அதிபர் லலித் விஜய சிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற மக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தமிழ்ப் பொலிஸார் சேவையில் இல்லாததால் தமிழ் மக்கள் பொலிஸ் நிலையங்களில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். பொலிஸ் சேவையில் இணைய தமிழ் இளை ஞர், யுவதிகள் பின்னடித்து வருவ தால் தமிழ் மக்களுக்கு உரிய சேவையை வழங்க முடியாத நிலையில் பொலிஸ் நிலையங்கள் காணப்படுகின்றன.

தமிழ் பிரதேசங்களில் தமிழ் பொலி ஸார் கடமையாற்றும்போது தாமத மடையும் பல பிரச்சினைகள் உட னுக்குடன் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு, அவற்றைத் தீர்த்து வைக்க முடியும். மொழிப் பிரச்சினையால் பொலிஸாருக்கும் பொது மக்க ளுக்குமிடையிலான நல்லுறவு களை மேற்கொள்ள முடியாதுள் ளது.

மக்கள் பிரதிநிதிகளான நீங்கள் உங் கள் பகுதியில் க.பொ.த. சாதாரண தரம் வரை கற்று விட்டு வேலை வாய்ப்பில்லாத இளைஞர், யுவதி களை பொலிஸ் சேவையில் இணைக்க ஊக்குவிக்க வேண்டும். பெருமளவு தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவையில் இணையும் பட்சத்தில் வட பகுதி யில் மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு பொலிஸ் சேவையை கட்டியெ ழுப்ப முடியுமென எதிர்பார்க்கி றேன்."– என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் வட மாகாண சபை உறுப்பினர் கேச வன் சயந்தன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் போன் றோர் கலந்து கொண்டனர். (ற–9)

## நேபாள மக்களுக்கு நிதி சேகரிக்கிறது கரித்தாஸ்

குருநகர், மே 5

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட நேபாள மக்களுக்கு உதவுவதற் காக யாழ்.கரித்தாஸ் – கியூடெக் நிறுவனம் நிதி சேகரிப்பில் ஈடுபட் டுள்ளது.

மறைமாவட்டங்கள்தோறும் திரட் டப்படும் உதவிகள் இலங்கை கரித் தாஸ் நிறுவனக் கிளை மூலம் நேபா ளத்தில் நிர்க்கதியாகியுள்ள மக்க ளுக்கு வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கென அனைத்து ஆலயங்களிலும் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஞாயிறு திருப்பலிகளில் விசேட காணிக்கை சேகரிப்புகள் இடம்பெற்றன. இந்த மனிதாபிமான உதவிகளில் எவ ரும் தமது பங்களிப்பை வழங்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட் டது. (ற–135)

## மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் 433 பெண் தலைமை குடும்பங்கள்

யாழ்ப்பாணம், மே 5

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் 433 பெண் தலைமைத்துவ குடும்பங் கள் உள்ளன என்று மாந்தை கிழக் குப் பிரதேச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலா ளர் பிரிவின் கீழுள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் தற்போது சுமார் 2 ஆயிரத்து 700 குடும்பங்க ளைச் சேர்ந்த 8 ஆயிரத்து 500 பேர் வாழ்ந்து வருகின்றனர். போர் காரணமாகவும் ஏனைய இடர்கள் காரணமாகவும் குடும்ப பிணக்கு கள் காரணமாகவும் 433 குடும் பங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

குடும்பத்தலைவர்களை இழந்த நிலையில் 352 குடும்பங்களும் பொருளாதார நெருக்கடிகள் குடும்ப வன்முறைகள் போன்றவற்றால் கணவனைப் பிரிந்த 81 குடும்பங் களுமாக 433 பெண் தலைமைத் துவ குடும்பங்கள் வாழ்ந்து வருகின் றன என்றும் தெரிவிக்கப்படுகின் றது.

பெண் தலைமைத்துவக் குடும்பங் கள் தமது வாழ்வாதாரம் அவர்க ளின் கீழ் தங்கி வாழும் குழந்தை களின்கல்வி, சுகாதாரம், போஷாக்கு போன்ற விடயங்களில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வரு கின்றனர். பல்வேறு திட்டங்களின் கீழ் அவர்களுக்கான முன்னேற்ற கரமான நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன என்றும் பிரதேச செய லக வட்டாரங்கள் குறிப்பிடுகின் றன. (ற)

## தனங்களப்பில் மீள்குடியமர்ந்தோர் வீட்டுத் திட்டம் வழங்கக் கோரிக்கை

தென்மராட்சி, மே 5

தென்மராட்சி தனங்களப்பு பகுதி யில் மீளக் குடியமர்ந்துள்ள 32 குடும்பங்கள் பல ஆண்டுகளாக வீட்டுத் திட்டத்துக்காகக் காத்திருக் கின்றன. அந்தக் குடும்பங்கள் ஓலைக் கொட்டில்களில் பலத்த சிரமங்க ளுக்கு மத்தியில் தற்போது வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் அந்தப் பகுதியைச் சேர்ந்த 41 குடும்பங்கள் தமது காணிகளில் ஓலைக் கொட் டில்கள் கூட அமைக்க வசதியில் லாது உறவினர் வீடுகளில் வசிக் கின்றனர் என்றும் தெரிவிக்கப்படு கின்றது.

அண்மையில் பெய்த பெருமழையை அடுத்து அந்தக் குடும்பங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றால் தறப்பாள்கள் வழங்கப்பட்டன. அதன்போது குறித்த குடும்பங்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் தெரிய வந்தன.

1999ஆம் ஆண்டு அந்தப் பகுதி யில் இருந்து 145 குடும்பங்கள் அந் தப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந் திருந்தன. 2011ஆம் ஆண்டு மீள் குடியமர்வு இடம்பெற்றவேளை யில் அனைத்துக் குடும்பங்களும் அங்கு சென்று தமது காணிகளைத் துப்புரவு செய்து கொட்டில்களை அமைத்துக் குடியமர்ந்தனர்.

சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப் புக்குமான நிறுவனம் மீளக்குடிய மர்ந்த 72 குடும்பங்களுக்கு வீடு கள் அமைத்துக் கொடுத்தது. தற் போதுள்ள 32 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படவில்லை. அடுத்த கட்டமாக 73 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத் துக்கொடுக்கப்படும் என்று கூறப் பட்டது.

ஆயினும் இதுவரை தமக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படவில்லை என்று அந்த மக்கள் கூறுகின்றனர். உரிய அதிகாரிகளிடம் கேட்டபோது தனங்களப்புப் பகுதிக்கான வீட்டுத் திட்டம் முடிவடைந்துவிட்டது என்று தெரிவித்தனர் என்றும் அவர்கள் கூறினார்கள்.

பெரும் சிரமத்தின் மத்தியில் ஓலைக் கொட்டில்களில் தாம் வாழ்ந்து வருவதாகக் கூறிய அந்தக் குடும் பத்தவர்கள், வீட்டுத் திட்டம் மூலம் தமக்கு வீடுகள் வழங்க உரிய தரப் பினர் முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். (ற–9)

## சட்டங்களின் அடிப்படையிலேயே வேள்விக்கு அனுமதி வழங்கப்படும்

### வலி.தென்மேற்குப் பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

மானிப்பாய், மே 5

பிரதேச சபைச் சட்டத்தில் உள்ள அதிகாரங்களின்படியே மிருக பலி யிடலுக்கான அனுமதி வழங்கப்படு கின்றது. அதன்பிரகாரம் மிருகபலி யிடல் வேள்வி யாகம் செய்யும் ஆல யங்கள் முறைப்படி விண்ணப்பித் தால் மட்டுமே அனுமதி வழங் கப்படும்.– இவ்வாறு வலி.தென் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் சி.சி.மகேந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது:–

வலி.தென்மேற்கில் மூன்றுக்கு மேற் பட்ட கோயில்களில் நூற்றாண்டுகால மாக மிருக பலியிடல் வேள்வி யாகம் நடத்தப்பட்டு வருகின்றது. அது மதம் சார்ந்த நம்பிக்கையாக மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கு பிரதேச சபையினராகிய நாம் சட்டத்தில் உள்ள அதிகாரங்களின் படி அனுமதி வழங்குகின்றோம்.

அதற்காக ஆலயங்களை கொல் களமாக மாற்ற அனுமதிக்க முடி யாது. பலியிடப்படும் இடங்கள் குறிப் பிட்ட நேரத்தில் அங்கிருந்து சுகா தாரமான முறையில் அகற்றப்பட வேண்டும் என்று ஆலய நிர்வாகங் களைப் பணிந்துள்ளேன். மிருக பலியிடல் என்பதில் முரண்பாடான கருத்துக்கள் உண்டு. இவ் வாறான வேள்விகள், பலியிடல் களை இல் லாது செய்வது தொடர்பில் உள்ளூ ராட்சி மன்றங்கள் தீர்மானம் செய்ய முடியாது.

இறுதித் தீர்மானம் எடுக்க வேண் டிய பொறுப்பு மத்திய அரசின் கீழ் உள்ள உள்ளூராட்சி அமைச்சு, இந்துக் கலாசார அமைச்சையே சாரும். வடமாகாண சபையும் இந்த விடயத்தில் தீர்மானம் செய்ய லாம்.

எனவே இந்து சார்பு நிறுவனங்கள், அமைப்புக்கள் பிரதேச சபைகளு டன் பேசுவது அர்த்தமற்றது. இந்து மத அமைப்புகளால் கூறும் விடயங் களை கேட்கலாமே தவிர இந்த விடயத்தில் சபை ஒன்றும் செய்து விட முடியாது"– என்று தெரிவித் தார். (ற–50)

# வெளிநாட்டுக்கு தப்பியவர் 4 வருடங்களின் பின் கைது

கொழும்பு, மே 05

வெளிநாட்டுக்கு சென்று நான்கு வருடங்களுக்கு பின்னர் நாடு திரும்பிய ஒருவரை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அவரை, தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். கட்டுகஸ்தோட்டைப் பிரதேசத்தில் நான்கு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டுகஸ்தோட்டை ஹமன்கொடை எனுமிடத்தில் 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் போது இந்திக்க சதுரங்க என்பவர் உயிரிழந்தார்.

இந்தக் கொலைச் சம்பவத்தின் சந்தேக நபர்களில் ஒருவரான இவர், வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுள்ளார். இவர் இல்லாமல் வழக்கு விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோதும் இவரை கைது செய்வதற்குச் சர்வதேசப் பொலிஸாரின் உதவியும் கோரப்பட்டிருந்தது.

இந்தநிலையில், வெளிநாட்டிலிருந்து கடந்த சனிக்கிழமை, இலங்கைக்குத் திரும்பிய சந்தேக நபர், கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வெளியேற முயற்சித்தபோது அவரைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சந்தேக நபரை, கண்டி நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முன்னிலைப்படுத்தவுள்ளதாக கட்டுகஸ்தோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# தமிழ்-முஸ்லிம் ஒற்றுமையை தக்க வைப்பது அவசியமானது

## கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் அழைப்பு

அம்பாறை, மே 05

தமிழ், முஸ்லிம் ஒற்றுமையைத் தக்கவைப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் உறுதியுடன் நாம் செயற்பட வேண்டும். இதன் மூலம் முழு இலங்கைக்கு மட்டுமல்ல, சர்வதேசத்துக்கும் கிழக்கு மாகாணத்தை உதாரணமான மாகாணமாகக் காட்டவும், திகழச் செய்யவும் முடியும். இவ்வாறு கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் எம்.ஐ.எம். மன்சூர் கூறினார்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் நடத்திய மே தினக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த மேதின கூட்டம் சங்கத் தலைவரும் தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் தலைமையில் கல்முனை வை.எம். சீ.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது.

மாகாண சுகாதார அமைச்சர் மன்சூர் தொடர்ந்து உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்.

கடந்த 30 வருடகாலபோர் சூழ் நிலையில் வடக்கு–கிழக்கு மக்கள் பெரும் நிம்மதியற்ற சூழலில் வாழ வேண்டிய துன்ப நிலை இருந்துவந்தது.

இந்தச் சூழலில் நமக்குள் நாம் குழப்படைந்திருந்தோம். குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களாகிய நாம் ஒருவரையயாருவர் சந்தேகத்துடன் பார்த்தோம். மிகக்கேவலமாக நம்மை நாம் நடத்தினோம்.

ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை நம்புவதற்கு மறுத்திருக்கின்றோம். ஆனால் இன்று இவ்வாறான காலம் நீங்கி ஒற்றுமையான, பரஸ்பரம் நம்பிக்கை கொண்ட சூழலுக்கு நாம் வந்துள்ளோம்.

இன்று தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள இந்த ஒற்றுமையும், நம்பிக்கையான சூழலும் மிக முக்கியமானதாகும். இந்த ஒற்றுமை, நம்பிக்கை உறுதியானதாக மிளிர நாம் அனைவரும் பங்களிப்பு நல்க வேண்டும். இத்தகைய நல்ல சூழலும், நிலைப்பாடும் தொடருமானால் முழு நாட்டுக்கு மட்டுமல்ல சர்வதேசத்துக்கும் உதாரணமானதொரு நிலையில் கிழக்கு மாகாணம் திகழுமென்பது திண்ணமாகும்.

> ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை நம்புவதற்கு மறுத்திருக்கின்றோம். ஆனால் இன்று இவ்வாறான காலம் நீங்கி ஒற்றுமையான, பரஸ்பரம் நம்பிக்கை கொண்ட சூழலுக்கு நாம் வந்துள்ளோம்.

தமிழர்களும், முஸ்லிம்களும் எமக்குள் நாம் பேசாமல் நமக்குள் நாம் முடிவு காணாமலே ஒற்றுமைப்பாட்டிருக்கின்ற ஒரு வரலாறு உண்டு. எமக்குள் நாம் பேசாமலே, உடன்படிக்கை செய்யாமலே எமது தலைமைகள், பேச்சு நடத்தாமலேயே நாம் ஒற்றுமைப்பட்டிருக்கின்றோம். அதுதான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அராஜகம் புரிந்த சிறுபான்மை சமூகங்களை நசுக்கி இம்சைப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவைத் தோற்கடித்த வரலாறாகும்.

இத்தகைய கொடூர ஆட்சியை மாற்றிய பெருமூச்சை விட்டவர்களாக, பெருமிதம் அடைகின்றவர்களாக இன்று நாம் மாறியுள்ளோம். எமக்குள் நாம் பேசிக்கொள்ளாமல் அந்த ஆட்சியை மாற்றும் விடயத்தில் நாம் ஒற்றுமைப்பட்டிருக்கின்றோம். இவ்வாறு எங்களால் ஒற்றுமைப்பட முடியுமாக இருந்தால் நாம் சாதிக்க வேண்டிய எத்தனை விடயங்களையும் மிகச் சுலபமாக சாதிக்க முடியும்.

நண்பர், மாகாணசபை உறுப்பினர் இராஜேஸ்வரன் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக இங்கு பிரஸ்தாபித்தார். தமிழர்களுக்கான இந்தப் பிரதேச செயலகம் பற்றி எடுத்துக் கூறினார். தமிழர்களுக்கென்றும், முஸ்லிம்களுக்கென்றும் தனித்தனியாகப் பிரிந்த நிறுவனங்களெனப் பார்ப்பது ஆரோக்கியமான விடயமல்லவென்பது என் தனிப்பட்ட கருத்தாகும்.

எம்மொழி தமிழ் எனக்கூறிக் கொண்டும், தமிழைப் பேசிக்கொண்டும், தமிழர்களும், முஸ்லிம்களும் இரண்டறக் கலந்தவர்களாக வாழ்ந்து கொண்டு எமக்கு இவ்வாறான இன ரீதியான பிரிவினைகள், நியாயமானதாகுமா? எனக்கேட்க விரும்புகின்றேன்.

இத்தகைய சிந்தனை முட்டாள்தனமானதும் எனக்குள் உடன்பாடில்லாத விடயமும்ாகும்.

நிரந்தரமாக தமிழர்களும், முஸ்லிம்களும் மோதிக்கொள்ள வேண்டும் என்பதே இத்தகைய பிரிவினைகளின் நோக்கமாகும்.

தமிழர்களும், முஸ்லிம்களும் கிழக்கில் ஒற்றுமைப்பட்டால் அது ஆரோக்கியமானதாக சிலவேளை அமைந்துவிடாது எனப் பயந்தவர்கள், முஸ்லிம்களையும் தமிழர்களையும் நிரந்தரமாகப் பிரித்து அதில் இன்பம் காணவேண்டுமென்று செய்த ஏற்பாடுதான் இனரீதியான நிர்வாகக் கட்டமைப்பு விடயங்களாகும்.

எனினும் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள ஏற்பாட்டில் இருக்கும் குழப்பங்களை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைமைகளும் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைகளும் மிகப் புரிந்துணர்வுடன் பேசித் தீர்க்க வேண்டும்–என்றார். (த–30)

# விகாரைகளில் மோசடி சிக்கிக்கொண்டார் பெண்

கொழும்பு, மே 05

தானம் வ்ழங்குபவர் எனத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு கிராமங்களில் உள்ள விகாரைகளில் மோசடியாக நிதி சேகரிப்பில் ஈடுபட்ட பெண்ணை எதிர்வரும் 6ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு ஹற்றன் பதில் நீதிவான் எஸ்.இராஜேந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட அந்தப் பெண்ணை, பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னிலைப்படுத்தியபோதே பதில் நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

விகாரைகளில் நிதி மோசடிகளில் ஈடுபடுகின்றார் என்ற குற்றச்சாட்டில் அந்த பெண், ஹற்றன் – நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமை மாலை நோட்டன் பிரிஜ் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் தமக்கு நிதி தொடர்பான வழக்கொன்று இருப்பதாகவும் அதில் தாம் வெற்றியடைந்தால் பெருந்தொகை நிதி கிடைக்கும் எனவும் குறித்த பெண் தெரிவித்துள்ளார். அவ்வாறு கிடைக்கும் நிதியை விகாரைகளுக்கு வழங்குவதற்கு எண்ணியுள்ளதாவும் சந்தேக நபரான பெண் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, சட்டத்தரணிக்கு வழங்க வேண்டிய நிதியையே தாம் சேகரிப்பதாகக் கூறி அவர் விகாரைகளில் மோசடியான வகையில் நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.

சில விகாரைகளில் சுமார் ரூபா 10 இலட்சத்துக்கும் அதிகமான பணம் அந்தப் பெண்ணுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ஈரியகொல்ல பேராதனைப் பிரதேசத்தைச் சேர்ந்த பி.டபிள்யூ. சுவர்ணா புஞ்சிகுமாரி ஹாமி என அடையாளம் காணப்பட்டுள்ளார். சந்தேகநபரான அந்த பெண்ணுடன் இருந்த பிள்ளைகளை அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.(த)

# நேபாளத்தில் 2,000 பேருக்கு இலங்கைக் குழுவினர் சிகிச்சை

கொழும்பு, மே 05

நேபாளத்தில் உள்ள இலங்கைப் படையினர் அங்கு நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட சுமார் 2000 பேருக்குச் சிகிச்சை அளித்துள்ளதாக நிவாரணக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் மைத்திரி டயஸ் தெரிவித்துள்ளார்.

நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீதிகளைச் சரி செய்து கிராமங்கள் நோக்கித் தமது குழு சென்றுகொண்டிருப்பதாக அவர் கூறினார்.


பொறியியலாளர் குழுவொன்று நேபாளம் வந்துள்ளதால் தமது நிவாரணப் பணி மேலும் விரிவடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நேபாளம் நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவை சங்கமும் உதவி அளித்து வருகிறது. (த)

# இலங்கை- பாக். இடையே வலுவான பொருளாதார உறவு

## பாகிஸ்தான் பிரதமர் விருப்பம்

கராச்சி, மே 05



இலங்கை மக்களின் நலன்களுக்காக இலங்கையுடனான பொருளாதார மற்றும் தொழில் சம்பந்தமான உறவுகளை மேலும் வலுப்படுத்தவேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான புதிய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட் டுள்ள மேஜர் ஜெனரல் ஷகீல் உசேன் பிரதமர் மாளிகையில், பிரதமர் நவாஸ் ஷெரீப்பை சந்தித்தபோதே பிரதமர் இதனை கூறியுள்ளதாகப் பாகிஸ்தான் டெய்லி டைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது. (த)

# பேராசிரியர்கள் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

கொழும்பு, மே 05

பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி மற்றும் ஒரு பேராசிரியரும் தாக்கப்பட்டமை தொடர்பில், பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து ஒன்றியத்தின் தலைவர் பிரபாத் ஜயசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 8ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் நிலவிய அரசியல் கலாசாரத்தை நினைவூட்டும் வகையில் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் பல்கலைக்கழகஆசிரியர்ஒன்றியம்கோரியுள்ளது.

கடந்த முதலாம் திகதி கிருலப்பனையில் இடம்பெற்ற மே தின நிகழ்வொன்றின்போது, பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி மீது தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

# பொலிஸ் அதிகாரியாக வேஷமிட்டவர் கைது

கொழும்பு, மே 05

உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக வேஷமிட்டு, வெசாக் விசேட கடமைகளில் ஈடுபட்டிருந்த ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ள சம்பவமொன்று பதுளையில் இடம்பெற்றுள்ளது.

கடமையிலிருந்துநீக்கப்பட்டபொலிஸ் கான்ஸ்டபிளே கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை,கந்தேகெதரையை வசிப்பிடமாக கொண்ட சந்தேகநபர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு உரிய சீருடையை ஒத்த சீருடையை அணிந்து, பதுளை கம்மானந்தகட விஹாரையின் வெசாக் பணியில் ஈடுபட்டிருந்துள்ளார்.

எனினும், அவர் அணிந்திருந்த தொப்பி மற்றும் சீருடை தொடர்பில் சந்தேகம் கொண்ட உப–பொலிஸ்பரிசோதகர்கள்இது தொடர்பில் பதுளை உதவி பொலிஸ் அதிகாரியின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

இதனையடுத்து, விரைந்து செயற்பட்ட குழு, அவரை, பதுளை வாடி வீட்டுக்கு அருகில் வைத்து கைது செய்தது.

இந்த சந்தேகநபர், பொலிஸ் விசேட அதிரடிப்படையில் பயிற்சி பெற்றவர் என்பதுடன் மட்டக்களப்பு, வவுனியா ஆகிய பிரதேசங்களிலும் கடமையாற்றியுள்ளார்.

எவ்வாறாயினும், கடமைக்குச் சமுகமளிக் காமை காரணமாக அவர் 2007 ஆம் ஆண்டு கடமையிலிருந்து நீக் கப்பட்டார்.

சந்தேகநபர், மனநிலை பாதிக்கப்பட்டவர் எனச் சந்தேகப்படுவதால் அவரை மனநல வைத்தியரிடம் முன்னிலைப்படுத்தி அறிக்கைபெற்றுகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** தங்கள் துறையில் உள்ள நுணுக்கங்களை அறிந்து வைத்துக்கொண்டு தகுந்த சமயத்தில் உபயோகித்து வெற்றி பெற ஏதுவான சூழ்நிலை உண்டாகும். குடும்பத்தில் உங்கள் மதிப்பு மரியாதை அதிகரிக்கும்.

**இடபம்:** எந்த ஒரு காரியங்களிலும் அவசரமாக செயற்படத் தோன்றும். நிதானத்தைக் கடைப்பிடிப்பது வெற்றிக்கு வழிவகுக்கும். பேச்சில் கோபம் தெரியாவிட்டாலும் உங்களது அழுத்தம் இருக்கும்.

**மிதுனம்:** வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. குடும்பத்தில் ஏதாவது பிரச்சினை தலைதூக்கலாம். எல்லோரையும் அனுசரித்துச் செல்வது நன்மை தரும்.

**கடகம்;** உறவினர் வகையில் மனவருத்தம் ஏற்படலாம். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். புதிய ஓடர்கள் பற்றி உடனடியாக முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றமான நிலை உண்டாகலாம்.

**சிங்கம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலையில் கவனமாக இருப்பது நல்லது. பதவி உயர்வு கிடைக்கும். அலுவலகத்தில் உங்கள் மரியாதை உயரும். விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**கன்னி:** சிக்கலான விடயங்களைக் கூட சுமுகமாக முடித்து விடுவீர்கள். மனத்தடுமாற்றம் இல்லாமல் நிதானமாக செயற்படுவது நன்மைதரும். குடும்பத்திலுள்ள சிக்கலான பிரச்சினைகளையும் சுலபமாகத் தீர்ப்பீர்கள்.

**துலாம்:** உங்கள் முயற்சிகள் அனைத்தும் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லும். மேலிடத்திடம் நல்ல பெயர் வாங்குவீர்கள். சமூகத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். புதிய வாய்ப்புகள் தேடி வரும்.


**விருச்சிகம்:** அடுத்தவர்களுக்கு உதவி செய்யப் போய் வில்லங்கம் ஏற்படலாம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. எவருக்கும் பிணைக்கு கையெழுத்துப் போடுவதோ தவறான நபர்களுக்காக பரிந்து பேசுவதோ கூடாது.

**தனுசு.** மனதில் ஏதாவது குறை இருக்கும். புதிய நபர்கள் எதிர்பாலினத்தவர் ஆகியோருடன் பேசும்போது கவனமாக பேசிப்பழகுவது நல்லது.

**மகரம்:** குடும்பத்தில் சண்டைகள் அவ்வப்போது நிகழும். வீடு, நிலம் மற்றும் வாகனங்கள் சேர்க்கை பெறுவர். பரம்பரை சொத்தில் பிரச்சினைகள் வரலாம்.

**கும்பம்:** போட்டிகள் விலகும். தொழில் நிமித்தமாக சிலர் வெளிநாடு பயணங்கள் செல்ல நேரிடலாம். கூட்டுத்தொழில் புரிபவர்கள்: கூட்டாளிகளிடம் எந்த விதமான ஒளிவுமறைவும் வேண்டாம்.

**மீனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் நீண்ட நாள்களாக இருந்த இழுபறியான காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வும் உங்களை வந்து சேரும்.



## நாஸாவின் கார்

நாஸா விண்வெளி ஆய்வு மையம், 180 டிகிரி கோணத்திலும் சுழலும் சக்கரங்கள் கொண்ட ரிமோட் காரை வடிவமைத்துள்ளது.

தற்போது மணிக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் செல்வதற்கு ஏற்ப கோல்ப் வாகனத்தில் வைத்து இது பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்....

இதோ இந்தக் குடுவைக்குள் இருப்பது சல்ப்யூரிக் அசிட். இதற்குள் 'இந்த ஒரு ரூபாய் நாணயத்தைப் போடுகிறேன். இது கரையுமா? கரையாதா?' என்று கேட்டு விட்டு ஒரு ரூபாயை அதற்குள் போட்டார் ஆசிரியர்.

'கரையவே கரையாது' என்றான் ஒரு மாணவன்.

'நல்லது.எதனால்அப்படிச்சொல்கிறாய்?

'கரையும்னா உங்க ஒரு ரூபாயைப் போட்டிருக்க மாட்டீங்க.'



## குறி தப்பாது

அமெரிக்காவை சேர்ந்த பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பு நவீன துப்பாக்கிக் குண்டை வடிவமைத்துள்ளது.

சாதரணமான துப்பாக்கிக் குண்டுகள் ஏவப்பட்ட பின் நேர்கோட்டுத் திசையிலே சென்று இலக்கைத் தாக்கும். ஒரு வேளை இலக்கு வேறு பாதையில் நகர்ந்து விட்டால் தாக்குதல் தோல்வி அடைந்துவிடும்.

ஆனால் இந்த நவீன துப்பாக்கிக் குண்டு இலக்குமாறும் திசைக்கு ஏற்ப தனது பாதையை மாற்றிக் கொண்டு இலக்கை தாக்கும் திறன் கொண்டது. இந்த வகை துப்பாக்கிக் குண்டுகள் ராணுவ வீரர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதோடு துப்பாக்கிக் குண்டுகளின் திறனை அதிகப்படுத்தவும் பயனுள்ளதாக அமைகிறது.


## யோகா

யோகா பயிற்சி செய்பவர்களுக்கு என்று தனியாக விரிப்பு (மெத்தை) தயாரித்துள்ளது ஸ்மார்ட்மேட் என்கிற நிறுவனம்.

இந்த விரிப்பில் அமர்ந்து பயிற்சிகள் செய்யும்போது குறிப்பிட்ட யோகாசன முறைக்கு எப்படியான நிலை சரியானது என்பதை வழிகாட்டும்.

விரிப்பின் ஒரு பக்கத்தில் இணைக்கப்படும் டேப்லெட் நமது அசைவுகளைக் கண் காணிக்கும். விரிப்பில் நமது கை கால்களின் அழுத்தத்தைக் கொண்டு நாம் மேற்கொண்டிருக்கும் ஆசன முறை சரியா தவறா என்பதை சொல்லிவிடும்.

தனியாக யோகாசன பயிற்சி செய்பவர்களுக்கு இந்த ஸ்மார்ட்மேட் பயனளிக்கும்.



## 'நம்பர் வன்'



ஷங்கர், ரஜினிகாந்த் இணையும் படத்துக்கு 'நம்பர் வன்' என்று படத்தலைப்பு வைத்துள்ளதாகக்கூறப்படுகிறது. லிங்கா' படத்துக்குப் பிறகு அடுத்த படத்தில் நடிக்க ரஜினி தயாராகி விட் டார்.

இந்தப் படத்தை ஷங்கர் இயக்குகிறார். ஐங்கரன் கருணாமூர்த்தி தயாரிக்கிறார். எந்திரனின் இரண்டாம் பாகமாக இந்தப் படம் உருவாகிறது. ஜூன். அல்லது ஜூலை மாதம் இதன் படப்பிடிப்பு தொடங்க இருக்கிறது.

விஞ்ஞானவியல் ரீதியிலான கதை என்பதால், படத்துக்கு 'நம்பர் வன்' என்று டைட்டில் வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்கிடையே ரஜினிகாந்துக்கு ராகவா லாரான்ஸ் கதை சொல்லியிருப்பதாகவும் அதில் ரஜினிகாந்த் நடிக்க இருக்கிறார் என்றும் சினிமா வட்டாரத்தில் தகவல் பரவிவருகிறது.



## கோட்டக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வடமாகாண கல்வி அமைச்சால் மாகாணத்தில் வெற்றிடமாகவுள்ள கோட்டக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, மாந்தை கிழக்கு, பளை, ஓமந்தை, முசலி ஆகிய கல்விக் கோட்டங்களில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடமாகாண பிரிவில் கடமையாற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III, வகுப்பு II ஆகியவற்றைச் சேர்ந்தவர்களிடமும், இலங்கை அதிபர் சேவை வகுப்பு I, வகுப்பு II ஆகியவற்றைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.


அந்தந்த கல்வி வலயங்களில் விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், கல்வி அமைச்சு வடமாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (வ-9)

# பிரிட்டன் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 16 ஆவது உலக சைவ மாநாடு

லண்டன், மே 5

பிரிட்டன் சைவத்திருக்கோயில்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 16 ஆவது உலக சைவ மாநாடும், பெரிய புராணமும் சைவ வாழ்வியலும் அண்மையில் இரு தினங்கள் காலை 9 மணி முதல் இரவு 10 மணி வரை லண்டனில் வெகு சிறப்பாக நடைபெற்றன.



சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத் தலைவர் முகோபால கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கூனம்பட்டி ஆதீனம் ராஜலிங்கம் மாணிக்க சுவாமிகள் ஆசியுரையை வழங்கியிருந்தார். இந்த மாநாட்டில் பெரிய புராணமும் சைவ வாழ்வியலும் என்ற தலைப்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் மா.வேதநாதன், மலேசிய சைவ சமய பேரவை செயலாளர் கலாநிதி அன்பரசன், அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் சின்னத்துரை தனபால ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருந்தனர். சிறப்பு நிகழ்வாக இசையமைப்பாளர் கங்கை அமரனின் இசையுடன் கலந்த பேச்சு இடம்பெற்றது.

கௌரவ விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும், மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவையின் தலைவருமான சீ.யோகேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார். பக்தி இசையை பத்மஸ்ரீ நித்தியசிறி குழுவினர் வழங்கியிருந்தனர். பிரிட்டனைச் சேர்ந்த தமிழ் மாணவர்களின் பாட்டு, நடனம், நாடகம், வாத்திய இசை என பல நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

மாநாட்டில் சிவஞான சுந்தரம் தம்பு, க.சிவகுருநாதபிள்ளை, ந.சுந்தரலிங்கம், தா.உதய குமார், சி.ஆனந்தகுமார் ஆகியோர் ஆற்றி வரும் சமய, சமூகப் பணிகளைக் கௌரவிக்கும் முகமாக சமூகசீலர் எனும் பட்டத்தை கூனம்பட்டி ஆதீனம் ராஜலிங்கம் மாணிக்க சுவாமிகள் வழங்கிக் கௌரவித்தார். (வ)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

German Shapert, Labrader Cross
நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 774 2069
(59470)(4.3.7)

**சீரடி சாய்பாபா ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்
சாய்ராம் சாஸ்திரிகள்
ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச்சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.
காலை 9.00 மணி- மாலை 6.00 மணி வரை
076 809 7406
Land Mark Yaal inn Hotel
இல.46/1, கல்லூரி வீதி, (யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்துக்கு முன்பாக), நீராவியடி, யாழ்ப்பாணம்.
(59429)(4.3.7)

**அம்மா முதியோர் நோயாளர் பராமரிப்பு இல்லம்**

முதியோர்களும், நோயாளர்களும் இங்கு மருத்துவரின் ஆலோசனைகளின் பிரகாரம் குறைந்த செலவில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.
தொடர்பு: 077 712 6857, 077 712 6859
(59476)(3.9)

# திண்மக்கழிவு பொறிமுறையை தொடர்ந்து முன்னெடுக்குக

### வலிகாமம் மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் வலியுறுத்து

மானிப்பாய், மே 5

குடாநாட்டு திண்மக் கழிவு பொறிமுறையை கூட்டங்கள், கலந்துரையாடல்கள், தாள்களில் எழுத்து வேலைகளுடன் நின்றுவிடாது வடக்கு மாகாண பிரதம செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆகியோர் தொடர்ந்து முன்னெடுத்துச் செயற்படுத்த வேண்டும். இவ்வாறு – வலிகாமம் மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் சண்முகலிங்கம் சபேசன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டு திண்மக் கழிவு பொறிமுறை தொடர்பாகக் கடந்த 15 வருடங்களாக உள்ள சீரற்ற நிலை, அதனால் ஏற்பட்ட அபாயங்கள் குறித்து உறுப்பினர் சண்முகலிங்கம் சபேசன் தெரிவிக்கையில்;

"யாழ்.மாவட்டத்தில் 17 உள்ளூராட்சிச் சபைகள் உள்ளன. இதில் மானிப்பாய், சங்கானை, புத்தூர், நல்லூர், சுன்னாகம், யாழ்.மாநகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளே இன்று முக்கியமாகப் பேசப்படும் சபைகளாக உள்ளன.

இந்தச் சபைகளில் இன்று அதிகம் பேசப்படும் சபைகளாக மானிப்பாய் பிரதேச சபை, யாழ். மாநகர சபை என்பவை விளங்குகின்றன.

இந்தச் சபைகளில் திண்மக் கழிவகற்றல் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அண்மையில் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகள் எடுத்த நடவடிக்கைகளின் பயனாக யாழ். மாவட்ட திண்மக் கழிவுகளை ஒரு முகப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் கொத்தணி அடிப்படையில் ஐ.நா.யுனொப்ஸ் நிறுவனம் விரைவில் பொறுப் பேற்கும் என்று தெரிகிறது. இன்னமும் சில மாதங்களில் மழை பெய்யத் தொடங்கும்.

இதற்கு முன்னர் ஐ.நா. யுனொப்ஸ் திட்ட அதிகாரிகள் யாழ். மாவட்ட திண்மக் கழிவுகளை தரம்பிரித்து மீள்சுழற்சி பயன்பாட்டுக்கு பயன்படுத்துவது போக மீதானவற்றை யாழ். குடாநாட்டு விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய சேதனப் பசளையாக்கி வழங்குவதன் மூலம் அசேதனப் பசளை மூலம் தோற்றுவிக்கப்படும் நோய்களைக் (புற்றுநோய்) கட்டுப்படுத்தலாம்.

எனவே வடக்கின் திண்மக்கழிவு பிரச்சினை பேரிடருக்கு அடிக்கடி கூட்டங்கள், பயிற்சிகள், கருத்தமர்வுகளை நடத்துவதைத்தவிர்த்து முன்மொழிவு களை முன்வைத்து, நிதியைப் பெற்று செயற்பாட்டில் ஈடுபடுங்கள் இல்லாவிடில் 17 உள்ளூராட்சி சபைகளும் வெறும் கருத்திடல் சபைகளாக மட்டுமே இருக்கும் - என்றார். (வ-50)

## நெல்லியடி மத்திய கல்லூரியின் கலைவிழா

மாங்குளம், மே 5

ஆஸ்திரேலியா வாழ் நெல்லியடி மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களின் அனுசரணையுடன், நெல்லியடி மத்திய கல்லூரியின் கலை விழா நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் செ.சேதுராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (வ-422)

**ஓய்வு பெற்றுவிட்டீர்களா?**

65 வயதுக்குட்பட்ட ஆர்வமுள்ள வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு

குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ பணியாற்றலாம்.

- 2 வாரப் பயிற்சிக் காலமுடையது
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள்:
  யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி,

அடிப்படைத் தகைமைகள்:

- G.C.E. (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 15.05.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்ப இல. 5057,
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(41444)
(45.3)

## பாடசாலைக்கு நிதி உதவி

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு கணினி ஒன்றின் கொள்வனவுக்காக வடமாகாண சபை உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தனது உறுப்பினருக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து 40 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். அதேசமயம் வரணி வடக்கு கௌரியாலன் சைவப்பிரகாச முன்பள்ளிக்கும் கட்டடக் கூரை திருத்த வேலைகளுக்காக ரூபா 30 ஆயிரம் ரூபாவையும் அவர் ஒதுக்கீடு செய்துள்ளார்.

அண்மையில் குறித்த மாகாண சபை உறுப்பினர் மேற்குறித்த கல்வி நிறுவனங்கள் இரண்டுக்கும் நேரடியாக பயணம் செய்து பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுக் குறை நிறைகளையும் கேட்டறிந்ததுடன் குறித்த நிதி ஒதுக்கீடுகளை பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த 1983 கார்த்திகை 12 இல் செவ்வாய், சூரியன் கிரக பாவமுடைய அரசஉத்தியோகமுடைய மணமகனுக்கு பொருத்தமான சைவபோசன மணமகள் தேவை (தென்மராட்சி விரும்பத்தக்கது) 1981 உத்தரம் 4ஆம் பாதம் 12இல் செவ்வாய் 28கிரக பாவம் நிரந்தர ஐரோப்பிய குடியுரிமையுடைய மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு: 077 2395 894

**இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்திரி மந்திரகுருக்கள் ஜோதிடம்**

[illegible]

இல. 175, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்விருந்தினர் விடுதி, G.G.Hotel,
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 595 0463

**11 ஆவது பிறந்தநாளும், பாராட்டி வாழ்த்தும்**



Congratulations
குளமங்கல், மல்லாகம்.

மல்லாகத்தைச் சேர்ந்த செல்வேந்திரன்- புஸ்பராணி தம்பதியரின் செல்வப் புதல்வன் தேனுசன் இன்று 05.05.2015 செவ்வாய்க்கிழமை தனது 11 ஆவது பிறந்தநாளைக் விமர்சையாகக் கொண்டாடுகின்றவர். இவரை இந்நாளில் வாழ்த்துவதோடு

2014 ஆம் ஆண்டு தரம் 5புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளை பெற்றமைக்கும் அவரை ஊக்குவித்த யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்து ஆசிரியை செல்வி.ந.சாரதா அவர்களும் மற்றும் அதிபர், ஆசிரியர்கள் அவர்களையும் மனதார பாராட்டுகின்றோம்.

தேனுஷனை மென்மேலும் பல்கலையும் கற்று வாழ வாழ்த்துவோர் :-

அப்பா, அம்மா, தம்பிமதுஷன், அப்பம்மா, வெளிநாட்டில் வசிக்கும் பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அண்ணிமார், அக்காமார், அத்தான்மார், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சித்தப்பா மார், சித்திமார், பெரியப்பாமார், பெரியம்மாமார் அண்ணாமார், அக்காமார், தங்கைமார், மாமா, அத்தை.

## கண்ணீர் அஞ்சலி



கொடிகாமம் சித்திர வேலாயுதர்
தேவஸ்தான தர்மகர்த்தா சபை
உறுப்பினர் க.தனபாலசிங்கம்
அவர்களின் தந்தை
அமரர் **சின்னையா கந்தையா**
அவர்களின் பிரிவால் துயருறும்
குடும்பத்தார்க்கு எமது அனுதாபச்
செய்தியைத் தெரிவித்து அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(59477)(4.3.7)

**தர்மகர்த்தா சபையினர்.**

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி
உத்தியோகத்தராக பணிபுரியும் நீக்கிலாப்பிள்ளை
பீற்றர் வின்சன் அவர்களின் அன்புத் தந்தை
**நீக்கிலாப்பிள்ளை பீற்றர்**
அவர்கள் 01.05.2015 அன்று இறைபதம் எய்தியமையிட்டு
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரி
விப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்

**பிரதேச செயலகம் காரைநகர்**

(59471)
(45.7)


உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி


## அமரர் வஸ்தியாம்பிள்ளை லூசியன் சுகேந்திரன் (சுகே/BASTI)

உரிமையாளர் – வஸ்தியன் அச்சகம் (பழைய மாணவன் – யா/சென்.ஜோண்ஸ் கல்லூரி)



**மண்ணில்**
**01.08.1960**

**விண்ணில்**
**05.05.2012**



அன்பு அப்பாவே!
குறைவில்லாது எமை வளர்த்த
பாசத்தின் பிறப்பிடமே அன்பின் உறைவிடமே
நிறைவான வாழ்வின் வழிகாட்டி நீங்கள்
எம் இன்பமான வாழ்வுக்கு உழைத்தவர் நீங்கள்
நிகரில்லா நண்பர்களால் நிறைந்தவர் நீங்கள்
அன்பான பேச்சால் அரவணைத்தவர் நீங்கள்
எத்தனை காலங்கள் கடந்து சென்றாலும்
ஒவ்வொரு நொடிகளிலும் உங்கள் நினைவுதான்
எம் இதயத்தின் துடிப்பாக நீங்கள்
உம் காலடித்தடங்கள் வழிகாட்டும்…
எம் வாழ்வின் தெய்வமாய் என்றென்றும் நீங்கள்
காலங்கள் உருண்டோடினும்
நேசமும் பாசமும் என்றும் நினைவாகும்
என்றென்றும் எம் கால்தடம் வழிகாட்டும்
ஈடற்ற உம் இழப்பு ஆறாது எம் நெஞ்சமதில்

**402, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**


**உங்கள் பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்.**

# நான்காம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## சீவரத்தினம் சீவறஞ்சன்

(றெஜி ரெஸ்ரோரன்ஸ், உரிமையாளர்)



**மண்ணில்**
12 ★ 06 ★ 1973

**விண்ணில்**
17 ★ 05 ★ 2011

**திதி: பிரதமை 05.05.2015**

**நிஜமாக நீங்கள் மறைந்து**
**நான்காண்டுகள் ஆனதுவோ!**
**நீங்கள் இல்லா மனை**
**பொலிவிழந்து போனதுவே!**
**உங்களை நினைத்து – தினம் தினம்**
**நாம் ஏங்கித் தவிக்கின்றோம்**
**காலங்கள் ஓடிக் கடந்தாலும்– தெய்வமே உங்களை**
**எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

என்றும் நினைவுகளுடன்

**மனைவி- இந்திரா**

**றெஜி ரெஸ்ரோரன்ஸ்,**
**இராமலிங்கம் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

(59378)(4.3.6)

## யாழ். அமெரிக்க தகவல் கூடத்தால் ஆங்கில செறிவூட்டல் பயிற்சி

யாழ்ப்பாணம்,மே 5

யாழ் அமெரிக்க தகவல் கூடத்தால் உயர் கல்வி கற்க விரும்பும் உயர் தரம் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்காக வழங்கப் படும் ஆங்கில செறிவூட்டல் பயிற்சி நெறி எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

4 மாதங்கள் கொண்ட இந்த இலவசப் பயிற்சி நெறியைத்தொடரவிரும்பு பவர்கள் நாளை மறு தினம் வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பொது நூலகத்தில் இடம் பெற வுள்ள தேர்வுப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

முற்பதிவுகளை மேற் கொண்ட மாணவர்கள் மட்டுமே இந்தப் பரீட்சையில் பங்குகொள்ள முடியும். பரீட்சைக்கு அமரமுடியும். அதனால், விரைந்து பதிவு செய்யுங்கள். ஆர்வமுடையவர்கள் 23, அத் தியடி வீதி, நல் லூரில் அமைந்துள்ள அமெரிக்க தகவல் கூடத் தில் தொடர்பு கொண்டு முற்பதிவுகளை மேற் கொள்ள முடியும். (வ–14)

## படகுகளை மீட்கும் நடவடிக்கை முழுமை பெற்றதாகத் தெரிவிப்பு

கொழும்பு,மே 5

இலங்கையில் தடுத்து வைக்கப் பட்டிருந்த தமிழக மீனவர்களின் படகுகளை மீட்கும்நடவடிக்கை முழுமை பெற்றுள்ளதாக தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமான நல்லுறவை மேம்படுத்தும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவால் தமிழக மீனவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட படகுகளைமீளக்கையளிக்குமாறு அண்மையில் உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது.

இந்த நிலையில் படகு களைத் திருப்பி ஒப்படைக்கும் நடவடிக்கைகள் கட்டம் கட்டமாகஇடம்பெற்று வந்தன.

இதுதொடர்பில் தமிழக மீனவர்கள்கருத்துத்தெரிவிக்கையில், இலங்கையில் தடுத்து வைக்கப்பட்ட 87 படகுகளைதாம் மீளப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும், அவற்றில் 16 படகுகள் முழுமையாகப் பாதிக்கப் பட்டுள்ள நிலையில் அவற்றைத் திருத்த முடியாது என்ற அடிப்படையில்கைவிட்டுள்ளதாகவும் இனி மேல் இலங்கை வரப் போவதில்லை என்றும் தெரிவித் துள்ளனர். (வ)

---

# 10 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## இராசையா இராசரத்தினம்



தோற்றம் 06 . 11 . 1942

மறைவு 25 . 05 . 2005

நிஜமாக நீங்கள் மறைந்து பத்து ஆண்டுகள் ஆனதோ!
நீங்கள் இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ!
உங்களை நினைத்து தினம் தினம் நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்து பூஜிப்போம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(சீ/15743)(4.6.3)

நினைவகலா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

---

# 95 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



அமரர் சின்னையா
## கந்தசாமி
(விலாசினி)

மண்ணுலகில் 20 . 12 . 1950

விண்ணுலகில் 31 . 01 . 2015

கடந்த 31.01.2015 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் சின்னையா கந்தசாமி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (06.05.2015) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு பலவழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறி அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வில் கலந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

"தங்க இல்லம்," குருக்கட்டு,
கரணவாய்.
தொ.பே: 021 320 2710

(58494)(3.7.4)

குடும்பத்தினர்.

---

# கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் பணியாளராகக் கடமையாற்றும் வி.மோகனதாஸ் அவர்களின் பாசமிகு தாயார் சற்குணம் வீரவாகு அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் இறைஞ்சுகின்றோம்.

உத்தியோகத்தர்கள், திவக கல்வி வலயம், வேலணை.

(59469)(4.3.7)

---

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் பஞ்சரத்தினம்
## கனகரத்தினம்



இவ்வுலகில் 15.06.1923

இறையுலகில் 05.04.2015

கடந்த (05.04.2015) எங்கள் அன்புத் தாயார் இறைபதம் அடைந்த செய்தியைக்கேட்டு எமது இல்லத்திற்கு நேரடியாக வருகை தந்து ஆறுதல் கூறி எமது துன்பத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளுக்கும், மலர் வளையம், மலர்மாலைகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் தமது அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (05.05.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மதவடி லேன், சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(59474)(4.3.6)

குடும்பத்தினர்.

---

# ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 02 . 12 . 1981

விண்ணில் 05 . 05 . 2006

செல்வி. கணபதிப்பிள்ளை கலாமதி(அபிராமி)-
(இ.போ.ச கணக்காய்வாளர்)

தவச்செல்வியே! அன்பு முகம்கண்டு, மழலைமொழிகேட்டு
பாசத்தோடு அணைத்த கரங்கள் பிரிந்து ஆண்டுகள்
ஒன்பது ஆகியதே!
எம் வாழ்வில் எம்மோடு இருப்பீர்கள் என எண்ணியிருந்தோம்.
ஆனால் தினமும் உங்களின் நினைவைச்சுமந்து
கண்ணீருடன் வாழவைத்து எங்கே சென்றாயோ ?
உன் ஆத்மா சாந்தி அடையக் கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாகச் சொரிந்து
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

சிறீ மூர்த்தி அகம்,
நீர்வேலி தெற்கு.

என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா
அண்ணன்மார்கள், அண்ணிமார்கள்
மருமகன்கள், மருமகள்

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 . 02 . 1948

மறைவு 17 . 04 . 2014

அமரர் செல்லத்துரை அருமைநாயகம்

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
எம் வாழ்வில் ஒளிவிளக்காய்
என்றென்றும் ஒளிர்ந்தவரே
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
என்றும் மறவோம் உங்கள்
அன்பை

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

குடும்பத்தினர்.

# மே 13 இல் பிறந்தோருக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 5

வாழும் கலை அமைப்பின் நிறுவுநர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரின் பிறந்த தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 13ஆம் திகதி, அதே தினத்தில் பிறந்த வர்களைக் கௌரவித்து வாழ்த்தும் நிகழ்வு நடைபெற வுள்ளது. இந்த நிகழ்வை வாழும் கலை அமைப் பின் யாழ்.கிளையினர் ஏற்பாடு செய்துள்ளனர். இதனை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் குறித்த தினத்தில் பிறந்தவர்கள் தங்களின் அல்லது தங்கள் பிள் ளைகளின் பிறந்த திகதியை உறுதிப்படுத்தும் நோக்கில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி, தொலைபேசி இலக்கம், சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை இல.254, பிறவுண் வீதியில் அமைந்துள்ள வாழும் கலை நிறுவனத்தில் நாளை புதன் கிழமைக்கு முன்பாக கிடைக் கச் செய்யுமாறு ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள் ளனர். (வ-10)

# ஹெரோயினுடன் பாக்.பிரஜை கைது

கொழும்பு, மே 5

சுமார் 60 லட்சம் ரூபா பெறு மதியான ஹெரோயின் உருண்டை களை வயிற்றுக்குள் விழுங்கி வந்த பாகிஸ்தான் பிரஜையை கட்டுநாயக்க விமான நிலையத் தில் வைத்து கைது செய்துள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி பாகிஸ் தானின் கராச்சி நகரில் இருந்து இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் கட்டு நாயக்க விமான நிலையம் வந்தி ருந்தபோதே அவர் கைதாகி யுள்ளார்.

விமான நிலையத்தில் நின்று கொண்டிருந்த குறித்த பாகிஸ்தான் பிர ஜையின் நடவடிக்கை களில் மாற்றத்தை அவ தானித்த விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் பிரிவினர் குறித்த நபரைக் கைது செய்து சோதனை செய்துள்ளதுடன் பின் னர் நீர்கொழும்பு மருத்து வமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போதே ஹெரோ யின் உருண்டைகளை விழுங்கி வந்த விடயம் மருத்துவ அதிகாரி மூலம் தெரிய வந்துள்ளது.

அவரிடம் இருந்து மீட் கப்பட்ட ஹெரோயின் உருண் டைகளின் பெறுமதி சுமார் 60லட்சம் ரூபா என மதிப் பிடப்பட்டுள்ளது. (வ)

## ஆறாம் ஆண்டு நினைவலைகள்

வைகாசி ஐந்தில் உடைத்தெறியப்பட்ட எங்கள் முத்துக்கள் மூன்று



**ஐ.யோகராணி, ஐ.செல்வராணி, ஐ.லோகராணி**

ஆண்டுகள் ஆறு ஆனாலும்
ஆறவில்லை எம் இதயக் குமுறல்கள்!
ஆறாய் ஓடுதம்மா கண்ணீர்....

அடக்க முடியவில்லை எம் அழுகையை
ஆனந்தமாய் அன்பாய் இருந்தோம்
ஆண்டவனுக்கு அது பொறுக்கவில்லை

கொடியவர்கள் குண்டுகள் நான்கு
கொடுமையாய்க் குடித்ததம்மா
உம் உயிரை எம் உயிரை

பார்போற்ற வாழ்ந்த எம்மை
பரிதவிக்க விட்டான் கொடியவன்
பதறுகிறோம் தவிக்கிறோம்

ஆற்ற முடியவில்லை ஆற முடியவில்லை
ஆறாதது எம் துயர்
வேகாது வேகுகின்றோம்

பார்க்கும் இடமெங்கும் உங்கள் முகம்
கேட்கும் ஒலி எல்லாம் உங்கள் குரல்
எப்படி ஆற்ற முடியும் எம் துயரை
எப்படி ஆற்ற முடியும்.

உம் பிரிவால் வாடும்

இல.497/7, கல்மடு நகர்,
இராமநாதபுரம், கிளிநொச்சி.

குடும்பத்தினர்.
வீ.ஜயாத்துரை

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணிபுரியும் திருமதி நாகசாந்தி அருட்செல்வம் அவர்களின் அன்புத் தாயார்

**பரமேஸ்வரன் பரமவதி**

அவர்கள் 30.04.2015 அன்று இறைபதம் எய்தியமையிட் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரி விப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம், காரைநகர் (59471) (45.7)

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராக பணிபுரியும் சிவபாதம் சுமந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

**சிவபாதம் கமலாதேவி**

அவர்கள்02.05.2015 இறைபதம் எய்தியமையிட்டு அவரது குடும்பத்தினருக்க எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்ப தோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம் காரைநகர் (59471) (45.7)

## மரண அறிவித்தல்

### A. தம்பிப்பிள்ளை அம்பலம்

(முன்னாள் பிரதேச சபைத்தலைவரும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், சமாதான நீதவானும் நெடுந்தீவு)



நெடுந்தீவைப் பிறப்பிடமாக வும், யாழ்ப்பாணத்தை வசிப் பிடமாகவும் கொண்ட தம்பிப் பிள்ளை - அம்பலம் 01.05.2015 வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர் களான தம்பிப்பிள்ளை -அன்னப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்க ளான நாகேந்திரம் - ராமசாமிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கமணியின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற சுதாகரன் மற்றும் ஜெயந்தி (அ.இ.சமாதானநீத வான் - ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி, ஊர்காவற்துறை அமைப்பாளர்), நந்தனி (இந்தியா) நேமிநாதன் (கண்ணன் - ஜேர்மனி), சிவானந்தன் (பாபு - லண்டன்), சத்தியவாணி (கனடா) ஆகி யோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் மனோன்மணி, காலஞ்சென்ற வர்களான நாகேந்திரம், கண்மணி மற்றும் கனகமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் விஜயகுமார் (கனடா), யாழினி (லண்டன்), குணபாலன் (கனடா) ஆகியோரின் மாமனும், தனுஜா (ஜேர்மனி), கஜேந்திரா, ராஜேந்திரா, யோபிகா, யாதவி, கச்சின் (லண்டன்), நிதுஷா, சுஜாதா, பிரிந்தா (கனடா) ஆகியோரின் பேரனும், அனுஷனின் (ஜேர்மனி) பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2015) செவ்வாய்க்கிழமை 74/6, ஆத்தி சூடிவீதி, கந்தர்மடம் எனும் முகவரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகள் - ஜெயந்தி (J.P)
(ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி
அமைப்பாளர், ஊர்காவற்றுறை)
T.P. 077 841 7078,
077 669 2419

74/6, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(59479) (45.3.7)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**செல்வி நடராசா கிருத்திகா**

மலர்வு
16★08★1990

உதிர்வு
05★05★2011



எங்கள் இல்லத்தின் ஒளிவிளக்கே
நிஜம் ஒன்று நிழலாகி
ஆண்டுகள் நான்கு நகர்ந்திடினும்
ஆறவில்லை எங்கள் துயரம்
மாண்டுவிடவில்லை நீங்கள்
மறையாது எங்களுடன் வாழ்கிறீர்கள்.

குடும்பத்தினர். (சி/15741)(3.7.4)
கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

## மரண அறிவித்தல்

### செல்வன் கிருஷ்ணசாமி சிவச்சந்திரன் (சிவம்)



யாழ்ப்பாணம், சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிட மாகவும் முருங்கனையும் பின்னர் பிரான்ஸையும் வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி சிவச் சந்திரன் 23.04.2015 வியாழக்கிழமை பிரான்ஸில் அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ண சாமி (மாயவர்), சற்குணம் தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான ஆசைப் பிள்ளை- தங்கமுத்து தம்பதிகள் சுப்பிரமணியம்- அன்னம்மா தம்பதிகள் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற திருமதி கிருஸ்ணசாமி , தனபாக் கியம், காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பையா, நாகம்மா மற்றும் திரு.திருமதி முருகேசு - சரஸ்வதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற நடராசா மற்றும் திருமதி நாகேஸ்வரி (பிரான்ஸ்), திரு.திருமதி பாலசிங்கம் தவமலர், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் திருமதி தேவி, திரு.திருமதி சுசீலாதேவி வைகுந்தநாதன், திரு.திருமதி சந்திரா சுப்பிரமணியம், காலஞ்சென்ற திரு.திருமதி விஜயகுமார் மற்றும் இந்திரன், திரு.திருமதி வசந்தா திலகநாதன், திரு.திருமதி ராணிதனபாலசிங்கம் ஆகியோரின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்ற திரு.திருமதி நடராசா தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற செல்வச்சோதி மற்றும் திருமதி வள்ளியம்மை (பிரான்ஸ்), திரு.திருமதி ஜெயக்குமார் சந்தியா (கோண்டா வில்), திரு.திருமதி சந்திரகுமார், ஜெசிந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மருமகனும், பாலச்சந்திரன் (பிரான்ஸ்), அம்பிகா (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரவிச்சந்திரன், (மயூரன் மாளிகை முருங்கன்), காலஞ்சென்ற வதனி (முருங்கன்) மற்றும் செல்வச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், சுதா (பிரான்ஸ்)வின் உடன் பிறவாச் சகோதரனும், ராணி (பிரான்ஸ்), செல்வநாதன் (பிரான்ஸ்), பாரதி (முருங்கன்), சிவகுமார் (சிவா பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தட்சாயினி, துர்காயினி, தர்சிகன் (பிரான்ஸ்), மயூரன் (முருங்கன்), காலஞ்சென்ற சுவேதா (முருங்கன்) மற்றும் மோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும், தர்சிகா, தனுக்கா, தரணிகா, வைஸ்ணவன், தாரிகா, தர்ஷனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சர்வின் (பிரான்ஸ்) அவர்களின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2015) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: உறவினர்கள்

(59459) (4.3.7)

(கண்ணகி அம்மன் கோயிலடி, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்)

### பல்கலைச் சம்மேளன உப தலைவர் மீது தாக்குதல்

கொழும்பு, மே 5

அனைத்துப் பல் கலைக்கழக ஆசி ரியர் சங்கங்களின் சம்மேளன உப தலைவரான கலா நிதி நிர்மால் ரஞ் சித் தேவசிறி மீது கிருலப்பனை பகுதி யில் சிலர் தாக் குதல் நடத்தியுள் ளனர்.

கிருலப்பனை பகுதி யில் நடைபெற்ற மே தினக் கூட்டம் ஒன்றுக்கு அரு கில் இருந்த சிலரே அவர் மீது தாக் குதல் நடத்தியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உத விப் பொலிஸ் அத் தியட்சகருமான ருவன் குணசே கர தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது. கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தற்போது தேசிய மருத்துவ மனை யில் அனுமதிக் கப்பட் டுள்ளார். அவர் கொழும் புப் பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாள ராகவும் உள் ளமை குறிப்பிடத் தக்கது. (வ-4)

இலங்கை மத்திய வங்கி

2015 மே 06 அன்று

# கிளிநொச்சிக்கு வருகிறது



## எமது பணிகள் ......

- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அத்துடன் வேளாண்மை வியாபாரங்களுக்கான கொடுகடன் வசதிகள்
- தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
- கொள்வனவாளர்களுடன் சந்தை தொடர்புகளை உருவாக்குவதை வசதிப்படுத்துதல்
- மத்திய வங்கிப் பணிகளை வழங்குதல்:
  - நாணயத் தொழிற்பாடுகள்
  - ஊழியர் சேம நிதிய உறுப்பினர் பணிகள்
  - நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை
  - மத்திய வங்கியின் வெளியீடுகள்
  - சமூகப் பொருளாதாரத் தரவுகளைச் சேகரித்தல்
- விழிப்புணர்வை அதிகரித்தல்:
  - பணம், வங்கித்தொழில் மற்றும் நிதி
- நிதி மற்றும் நிதிசார் அறிவின் கிடைக்கும் தன்மையை மேம்படுத்துதல்

2015 மே 6ஆம் நாளன்று காலை 6.30 மணியிலிருந்து பொதுமக்கள் திறப்புவிழாவில் கலந்துகொள்வதற்காக கிளிநொச்சி அரச அதிபர் அலுவலகத்திலிருந்து அறிவியல்நகரிலுள்ள மத்திய வங்கியின் பிரதேச அலுவலகம் வரையான போக்குவரத்து வசதிகள் மத்திய வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.




ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA



## ஜப்பானில் நிலநடுக்கம் பொதுமக்கள் வெளியேற்றம்

டோக்கியோ,மே 05

ஜப்பானில் நேற்று முன்தினம் அதிகாலை 1.50 மணிக்கு இதீவு பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதனால் தெற்கு ஜப்பானில் உள்ள தீவுகளில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கியுள்ளன.

அதிர்ச்சி அடைந்த மக்கள், வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர். அங்கு 5.9 ரிக்டரில் நிலநடுக்கம் பதிவானதாக அமெரிக்க புவியியல்ஆய்வுமையம்அறிவித்துள்ளது. நிலநடுக்கத்தை தொடர்ந்து ஜப்பானின் இ தீவுகள், ஹஜிஜோஷிமா உள்ளிட்ட தீவுகளில் சுனாமி பேரலை தாக்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து இதீவுகள், தெற்கு டோக்கியோ, ஒசாசவரா ஆர்சிபெலாகோ பகுதிகளில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அங்கு கடற்கரை பகுதியில் வசிக்கும் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். (14)

# மீண்டும் வெளிநாட்டு உலா தயாராகிறார் பிரதமர் மோடி

## 3 நாடுகளுக்குச் சுற்றுப் பயணம்

டில்லி,மே 05

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, கடந்த 4 மாத காலப்பகுதிக்குள் செசல்ஸ், மொரீசியஸ், இலங்கை, பிரான்ஸ், ஜேர்மன், கனடா ஆகிய நாடுகளுக்கு அரச முறைச் சுற்றுப் பயணங்களை மேற்கொண்டார்.

இந்த நிலையில் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை சீனா, மங்கோலியா, தென் கொரியா ஆகிய 3 நாடுகளில் அரச முறை சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளவுள்ளார்.



முதல் நாள் பயணமாக சீனாவுக்குச் செல்லும் மோடி, 'மேக் இன் இந்தியா' என்னும் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்துக்காக முதலீடுகளைக் கவர்வது தொடர்பில் சீனாவுடன் பேச்சுக்களில் ஈடுபடுவர். அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக நிலுவையில் இருந்து வரும் எல்லைப் பிரச்சினைகள் குறித்து இரு தலைவர்களும் முக்கிய பேச்சுக்களை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவின் ஜனாதிபதி ஜின்பிங் கடந்த வருடம் இந்தியாவுக்கு வருகை தந்திருந்த போது, பிரதமர் மோடியுடன் இருதரப்பு பேச்சுக்களை நடத்தினார். அதன் போது இந்தியா–சீனா எல்லைப் பிரச்சினை தொடர்பிலும் விவாதிக்கப்பட்டது.

தற்போது பிரதமர் மோடியின் சீனப் பயணத்தின்போது, எல்லைப் பிரச்சினை தொடர்பான முக்கிய அறிவிப்பு வெளியாகக்கூடும். என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவுக்கான பயணத்தை முடித்துக்கொண்டு மங்கோலியாவுக்குப் பயணிக்கும் மோடி, அங்கு யுரேனியம் விநியோகம் செய்வது தொடர்பான ஒப்பந்தத்தை கைச்சாத்திடவுள்ளார்.

மங்கோலிய பயணத்தை முடித்துக் கொண்டு தென்கொரியாவுக்குச் செல்லும் மோடி அங்கு மேக் இன் இந்தியா திட்டத்தின் கீழ் தொழில் தொடங்குவதற்கு அதிக முதலீடுகளை கவர்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவார் எனத் தகவல்கள் கூறுகின்றன. 3 நாடுகளின் பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் மோடி எதிர்வரும் 19 ஆம் திகதி டில்லிக்குத் திரும்புவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## துப்பாக்கி முனையில் 7 பொலிஸார்; கடத்தல்

லாகூர்,மே 05

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணம் ஒபாரா என்ற இடத்தில் பொலிஸ் சோதனை நிலையத்துக்கு, நேற்று முன்தினம் 10 இற்கும் மேற்பட்டவர்கள் அடங்கிய ஒரு மர்ம கும்பல் துப்பாக்கிகளுடன் திடீரெனப் புகுந்தது. அந்த கும்பலில் இருந்தவர்கள் சோதனைச் சாவடியில் இருந்த பொலிஸாரை தாக்கியும், துப்பாக்கி முனையில் மிரட்டியும் 7 பொலிஸாரைக் கடத்திச் சென்றுவிட்டனர்.

பாகிஸ்தானில் அமைதியான மாகாணம் என்ற பெயரைப் பெற்ற அந்த மாகாணத்தில் பொலிஸாரைக் கடத்திச் சென்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் கொலை, கொள்ளை எனப் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடும் கும்பலை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகித்துள்ளனர். கடத்தப்பட்ட பொலிஸாரை மீட்கும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (14)



## இங்கிலாந்தின் மிகச்சிறிய நாய்க்குட்டி

லண்டன்,மே 05

இங்கிலாந்தின் வெஸ்ட் மிட்லாண்டில் வசிக்கும் நடாலி வேன்ஸ் என்பவருக்குச் சொந்தமான டிஸ்னி எனும் நாய்க்குட்டி மிகச் சிறிய நாய்க்குட்டியாகக் கருதப்படுகிறது. ஒரு பூனைக்குட்டி போலவே தோற்றமளிக்கும் டிஸ்னியின் உயரமோ 3 அங்குலம் தான்(7.62 செ.மீ). நிறையோ 405 கிராம் மட்டுமே. டிஸ்னியுடன் பிறந்த 3 நாய்க் குட்டிகளும் நெடு நெடுவென வளர டிஸ்னி மட்டும் வளர்ச்சியில் பின் தங்கி விட்டது.

இதனாலே, மற்ற நாய்க்குட்டிகள் எல்லாம் டிஸ்னியை கேலிப்பொருளாக்கி காயப்படுத்த, நடாலி அதை எப்போதும் தன்னுடனே வைத்துக் கொண்டு பாதுகாத்து வருகிறார். டிஸ்னியின் தற்போதைய வளர்ச்சி விகிதத்தை வைத்துக் கணக்கிடும் போது விரைவில் அது கின்னஸ் சாதனை படைக்கும் என்று இங்கிலாந்தின் பிரபல பத்திரிகையான மிரர் தெரிவித்துள்ளது. (14)

## பாகிஸ்தானில் வான் தாக்குதல் 44 தீவிரவாதிகள் கொன்று குவிப்பு

பெஷாவர்,மே 05

பாகிஸ்தானில் வடக்கு வாஜிரிஸ்தான், கைபர் ஏஜென்சி பகுதிகள் தீவிரவாதிகளின் புகலிடங்களாக திகழ்கின்றன. அங்கு பாகிஸ்தான் பாதுகாப்பு படையினர் போர் விமானங்களில் பறந்து குண்டு வீச்சு நடத்தி வருகின்றனர். அவ்வப்போது அமெரிக்காவின் ஆளில்லா விமானங்களும் வான்தாக்குதல்களில் ஈடுபடுகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வடக்கு வாஜிரிஸ்தானில், டட்டா கேல் பகுதியில் தீவிரவாதிகளை குறிவைத்து பாகிஸ்தான் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. அதில் 16 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் பலர் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் எனத் தகவல்கள் கூறுகின்றன.

இதேபோன்று, கைபர் ஏஜென்சியில் டைரா பள்ளத்தாக்கு பகுதியில் பாதுகாப்பு படையினர் நடத்திய வான்தாக்குதல்களில் 28 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளின் மறைவிடங்களும் குண்டு போட்டு தகர்க்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு படையினரின் தொடர் வான்தாக்குதல்கள், தீவிரவாதிகளை நிலை குலைய வைத்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. (14)



## நேபாள நிலநடுக்கப் பீதியிலும் திருமண பந்தத்தில் இணைந்த ஜோடி

காத்மண்டு, மே 05

நேபாள் நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் நின்று போன திருமணம் தற்போது இனிதாய் நடந்து முடிந்துள்ளது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த யூஜினி ப்ரோவோஸ்ட்க்கும், நேபாள நாட்டைச்சேர்ந்ததீபேஷ்முணாகரிஎன்பவருக்கும் கடந்த மாதம் 25 ஆம் திகதி திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் நேபாளில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கம் காரணமாக அவர்களது திருமணம் நின்றுபோனது. தற்போது, அங்கு மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன, இந்த நிலையில் நிலநடுக்கத்தால் நின்று போன அவர்களது திருமணம் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றுள்ளது. (14)

## தற்கொலைப்படை தாக்குதலில் வீரர்கள் உட்பட 26 பேர் சாவு



பாக்தாத், மே 05

ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து நாசவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஈராக்கின் மேற்கு அன்பார் மாகாணத்தில் உள்ள கார்மாவில் உள்ள ரயில் நிலையம் அருகே ஈராக்படையினரின் முகாம் உள்ளது. அந்தமுகாமைக் குறிவைத்து நேற்று முன்தினம் தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் வெடிகுண்டு நிரப்பிய கார்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளனர். 5 கார்களில் வந்த தீவிரவாதிகள். இராணுவ முகாம் மீது மோதி வெடிக்கச்செய்துள்ளனர். அதில் இராணுவ வீரர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். இதே போன்று தலைநகர் பாக்தாத்தில் தங்குமிடமொன்றின் மீது 2 கார்களில் தீவிரவாதிகள் மோதித் தாக்குதல் நடத்தியதில் 14 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (14)

# எந்நேரமும் சாவுத்தண்டனை நிறைவேற்றப்படலாம்

## சிறையில் இருந்து பெண் கடிதம்

லண்டன்,மே 05

இந்தோனேசியாவில் உள்ள பாலி விமான நிலையத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு தரையிறங்கிய போது, போதை பொருள் கடத்தி வந்ததாக கூறி பிரிட்டன் நாட்டைச் சேர்ந்தவரான 58 வயதான லிண்ட்சே சான்டிபோர்ட் கைது செய்யப்பட்டார்.



அந்த நாட்டின் பொலிஸார் நடத்திய விசாரணையின் போது, போதை மருந்தைக் கொண்டு செல்லாவிட்டால் தனது மகனை கடத்தல்காரர்கள் கொன்று விடுவதாக மிரட்டியதாக அந்தப் பெண்மணி தெரிவித்திருந்தார். ஆனால் அதனை ஏற்க மறுத்த இந்தோனேசிய நீதிமன்றம், அவருக்கு சாவுத் தண்டனை விதிக்க உத்தரவிட்டது.

இந்தநிலையில் எந்த நேரமும் தனக்குச் சாவுத்தண்டனை நிறைவேற்றப்படலாம் என்று பிரிட்டனில் உள்ள தனது குடும்பத்தாருக்கு லிண்ட்சே உருக்கமான கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

எப்படியாவது சாவுத்தண்டனையிலிருந்து லிண்ட்சேவை காப்பாற்ற வேண்டும் என்று போராடி வரும் அவரது குடும்பத்தினர், சாவுத் தண்டனையை எதிர்த்து இந்தோனேசிய உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கத் திட்டமிட்டுள்ளனர். அதற்காக நிதி உதவி செய்யுமாறு பிரிட்டன்அரசிடம்அவர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால் அவர்களது கோரிக்கையை ஏற்க அந்த நாட்டு அரசு முன்வரவில்லை. இதனையடுத்து லிண்ட்சேவின் குடும்பத்தினர் சொந்தமாகவே நிதி திரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (14)





குட்டி இளவரசியின் வருகை முதன் முதலாக லண்டனின் புகழ்பெற்ற பிற் கோபுரத்தில் உள்ள பிரம்மாண்ட திரையில் பெண் குழந்தை பிறந்திருக்கிறது என்று பிங்க் நிறத்தில் ஒளிரும் விளக்குகள் சுற்றிச் சுழன்று அறிவித்தது. அடுத்த படியாக பிரசித்தி பெற்ற லண்டன் உயிவை பாலம் பிங்க் நிற ஒளிக்கற்றைகளால் நிரம்பியது. அதைப் பார்த்த லண்டன் வாசிகலும் சுற்றுலாப் பயணிகளும் உற்சாகத்தில் ஆழ்ந்தனர். (14)

# கின்னஸ் சாதனைக்காக தேசியக் கொடி வடிவமைப்பு

துனிஸ்,மே 05

உலக சாதனை படைக்கும் நோக்கத்தில் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 544 சதுர மீற்றர் பரப்பளவும் 12 ஆயிரத்து 600 கிலோ நிறையும் கொண்ட பிரமாண்டமான தேசியக் கொடியை துனிசியா உருவாக்கியுள்ளது.



80 கிலோ மீற்றர் நீளம் கொண்ட துணியால் உருவாக்கப்பட்ட அந்தக் கொடி, அந்தநாட்டின் தேசிய கீதத்தின் பின்னணியுடன் நேற்று முன்தினம் துனிசியாவின் தென் பகுதியில் உள்ள பாலைவனத்தில் விரித்துக் காட்சிப்படுத்தப்பட்டது.

அந்தக் கொடியை உருவாக்கியது அங்குள்ள ஒரு துணி ஆலை உரிமையாளரின் மூளை திட்டம் என தெரியவந்துள்ளது. (14)

# குட்டி இளவரசிக்கு உற்சாக வரவேற்பு



லண்டன்,மே 05

இங்கிலாந்தின் குட்டி இளவரசியுடன்அகென்சிங்டன்அரண்மனைக்குத் திரும்பிய கேட் மிடில்டனுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரசவத்துக்குப் பின்னர், குட்டி இளவரசியுடன் அரண்மனைக்கு வந்த இளவரசர் வில்லியம் தம்பதிக்கு கென்சிங்டன் அரண்மனையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. டயானாவின் கணவரும் இங்கிலாந்து இளவரசருமான சார்ளஸ் தனது பேத்தியை பார்த்து, கொஞ்சி மகிழ்ந்தார்.

1950 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரிட்டனுக்கு கிடைத்திருக்கும் குட்டி இளவரசியை இங்கிலாந்தே கொண்டாடி வருகிறது. குட்டி இளவரசி பிறந்த நல்ல செய்தி கிடைத்ததும் வெஸ்ட் மினிஸ்டர் சபை இளவரசியின் வருகையை கொண்டாடும் வகையில் நகரமே பிங் நிற மாய் ஒளிரும் என்று அறிவித்தது. மெர் சண்ட் சதுக்கத்தில் உள்ள அலங்கார நீரூற்று உட்பட இங்கிலாந்தே பிங்க் நிறமாக மாறி விட்டதோ என்று வியக்கும் வகையில் குட்டி இளவரசியின் வருகை கொண்டாடியது. (14)

# இங்கிலாந்தில் ஆட்சியை பிடிப்பது யார்

## நாளை மறுதினம் தேர்தல்



லண்டன்,மே 05

இங்கிலாந்தில் நாளை மறுதினம் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அங்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி இடையே பலத்த போட்டி நிலவுகிறது. அங்கு ஆட்சியைப் பிடிக்கப்போவது யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. கருத்துக் கணிப்பில் ஆளுங்கட்சி முந்தியுள்ளது.

650 இடங்களை கொண்ட இங்கிலாந்து நாடாளுமன்றத் தேர்தலில் ஆளுங்கட்சியான கன்சர்வேடிவ் கட்சிக்கும், எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சிக்கும் இடையே கடுமையான போட்டி நிலவுகிறது. இந்தத் தேர்தலில் சுமார் 4 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியில் உள்ளனர். கடந்த 2010 ஆம் ஆண்டு தேர்தலுடன் ஒப்பிடுகையில் இந்த முறை வேட்பாளர்களின் எண்ணிக்கை சற்றுக் குறைவுதான். ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண் வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இது கடந்த தேர்தலை விட அதிகம்.

ஆளும் கன்சர்வேடிவ் கட்சி வேட்பாளர்களில் 11 சதவீதம் பேர் கறுப்பு இனச் சிறுபான்மையினர் ஆவார்கள். அவர்களில் 12 பேர் இந்திய வம்சாவளியினர். இதே போன்று எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி 14 இந்திய வம்சாவளியினரை களத்தில் இறக்கியுள்ளது. பிரதமர் டேவிட் கமரூன், விட்னே தொகுதியிலும், எதிர்க்கட்சி தலைவர் எட் மிலிபாண்ட், டான் காஸ்டர் வடக்கு தொகுதியிலும் போட்டியிடுகின்றனர். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 8 பேர் வெற்றி பெற்றமை நினைவுகூறத்தக்கது. இந்த முறையும் இந்திய வம்சாவளியினர் கணிசமான அளவுக்கு வெற்றி பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத்தேர்தல்தொடர்பாகதொடர்ந்து கருத்துக்கணிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்தக் கருத்துக்கணிப்புகள் அனைத்துமே பெரும்பாலும் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதையே காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

# நஷீதை விடுவிக்கக் கோரி போராட்டம்

## 193 பேர் கைது

மாலி,மே 05

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி நஷீதை விடுவிக்கக் கோரி, அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய, எதிர்க்கட்சியினர் மீது பொலிஸார் தடியடி நடத்தியதுடன், முக்கியதலைவர்கள்உட்பட போராட்டத்தில் பங்கேற்ற 193 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி நஷீத், மூத்த நீதிபதி ஒருவரை சிறையில் அடைத்த வழக்குத் தொடர்பாக, கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்டார். அந்த வழக்கில், அவருக்கு, 13 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இது, மாலைதீவின் ஜனாதிபதி யமீன் அப்துல் கயூமின் பழி வாங்கும் நடவடிக்கை என்று கூறி, அங்கு எதிர்க்கட்சியினர், போராட்டம் நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம், மாலே நகரில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தடுக்க முயன்றபோது, இரு தரப்பினருக்கும் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தனர். அதில், பலர் படுகாயம் அடைந்தனர். அத்துடன், முக்கிய எதிர்க்கட்சி தலைவர்கள் உட்பட, 193 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (14)



# யேமன் போரில் சிக்கித் தவிக்கும் அமெரிக்கர்களை மீட்க மறுப்பு

ஏடன்.மே 05

யேமன் உள்நாட்டுப் போரில் சிக்கித் தவிக்கும் நூற்றுக்கணக்கான அமெரிக்கக் குடிமக்களை மீட்க அந்த நாட்டு அரசு மறுத்துள்ளதால் பெரும் சர்ச்சை எழுந்துள்ளது.

யேமனில் சன்னி மற்றும் ஷியா பிரிவினர்களுக்கிடையே பல மாதங்களாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அவர்களில், சன்னி பிரிவினருக்கு ஆதரவாக சவூதி அரேபியா வான்வழித் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளதால், பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன.

யேமன் நாட்டில் சிக்கியுள்ள வெளிநாட்டவரை மீட்க அந்த நாடுகள் முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில், போருக்குள் சிக்கியுள்ள நூற்றுக்கணக்கான அமெரிக்க குடிமக்களை மீட்க அமெரிக்க அரசு மறுத்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



இது குறித்து செய்தி வெளியிட்டுள்ள அமெரிக்க அரசு, யேமனில் உள்ள அமெரிக்கக் குடிமக்களை மீட்க இராணுவத்தை அனுப்பினால், இராணுவ அதிகாரிகள் மீது அல்குவைதா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளது. மேலும், யேமன் நாட்டை விட்டு வெளியேற அமெரிக்கர்கள் அவர்களுக்கான சிறந்த வழியை தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது. இது யேமனில் உள்ள அமெரிக்கர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. இதற்கிடையில், யேமனில் உள்ள அமெரிக்கர்கள் ஒன்று சேர்ந்து யேமனில் சிக்கியுள்ளோம் என்ற இணையதளத்தைத் தொடக்கி, தங்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்க அரசை வலியுறுத்தி வருகின்றனர். அந்த இணைய தளத்தில் தற்போது 700 இற்கும் அதிகமான அமெரிக்கர்கள் கோரிக்கை விடுத்திருப்பதாகத்தகவல்கள் வெளியாகியுள்ளன. (14)



# மகிமை மிகுந்த மரங்கள்

ராஜராஜன்

> மரங்களால் மனிதர்களுக்குக் கிடைக்கின்ற பயன்கள் எண்ணிலடங்காதன. சுவை மிகுந்த கனிகளை மரங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடிகின்றது. வீடுகளை அமைப்பதற்கும், விறகுத் தேவைகளுக்கும் தேவையானவற்றை மரங்களின் மூலமாக கிடைக்கப்பெறுகின்றோம்.

இயற்கை எமக்கு அளித்த அருங் கொடைகளில், மரங்களுக்கு எப்போதுமே முதலிடம் உண்டு. மரங்கள் அடர்த்தியாக வளர்ந்து காணப்படும் இடங்களைக் காடுகள் என அழைக்கின்றோம். நாம் வாழுகின்ற பூமி இயற்கைச் சமநிலையைப் பேண வேண்டுமென்றால், பூமியின் மூன்றில் ஒரு பாகம் காடுகளைக் கொண்டதாக இருக்க வேண்டுமென வகுக்கப்பட்டுள்ளது. பூமியின் மூன்றில் இரண்டு பகுதி நீரினால் சூழப்பட்டுள்ள நிலையில் மீதமாக மூன்றில் ஒரு பகுதி மட்டுமே உள்ளது. மரங்களே காணப்படாத நிலப் பரப்பை நாம் ஒரு கணம் கற்பனை செய்து பார்க்கும் போது அதனை ஏற்றுக் கொள்வதற்கு எமது மனம் மறுக்கின்றது.அந்த சூனியப் பிரதேசத்தைப் பார்ப்பதற்கு எந்த உயிரினமும் விரும்புமாட்டாது.

நாம் வாழ்கின்ற பூமி, ஐவகை நிலங்களாக வகுக்கப்பட்டுள்ளது. மரங்கள் நிறைந்த காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை என அழைக்கப்படுகின்றது. மலையும் மலை சார்ந்த இடங்களும் குறிஞ்சி எனவும், வயலும் வயல் சார்ந்த நிலமும் மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் எனவும், மழையையே காணாத வறண்ட மணற்பரப்பைக் கொண்ட நிலம் பாலை எனவும் அழைக்கப்படுகின்றன. இவற்றுள் பாலை, நெய்தல் நிலங்களைத் தவிர ஏனைய இடங்களில் மரங்கள் வளர்ந்து காணப்படுகின்றன.

மரங்களால் மனிதர்களுக்குக் கிடைக்கின்ற பயன்கள் எண்ணிலடங்காதன. சுவை மிகுந்த கனிகளை மரங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடிகின்றது. வீடுகளை அமைப்பதற்கும், விறகுத் தேவைகளுக்கும் தேவையானவற்றை மரங்களின் மூலமாகக் கிடைக்கப்பெறுகின்றோம். எமது உடலுக்கு ஒவ்வாத தீய காற்றுக்களை மரங்கள் தாம் உள் வாங்கிக் கொண்டு, சுத்தமான காற்றை வெளியிடுகின்றன. இது எமது உடல் ஆரோக்கியத்துக்குப் பெரிதும் உதவுகின்றது. மழை காலங்களில் ஏற்படுகின்ற மண்ணரிப்புக்களையும் மரங்கள் தடை செய்கின்றன. கடுமையான காற்று வீசும் வேளைகளில் காடுகள் மனிதர்களுக்குப் பாதுகாப்பை வழங்குகின்றன. மேலும் மழை பெய்வதற்கும் மரங்களே உறுதுணையாக விளங்குகின்றன. இதைவிட எண்ணிக்கை தெரியாத மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் காடுகள் அபயம் வழங்கிக் காத்து வருவதையும் நாம் அறிவோம்.

ஆனால் மதிகெட்ட மனிதர்கள் தமதுசொந்த நலன்களைப் பேணுவதற்காக மரங்களை வகைதொகையின்றி அழித்து வருகின்றனர். அரியவகை சந்தன மரங்களையும் செம்மரங்களையும் கூட இவர்கள் விட்டு வைக்கவில்லை. தமது பணப்பைகள் நிறைவது தொடர்பாக இவர்கள் சிந்திக்கிறார்களே ஒழிய, சமூகத்துக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை எண்ணிக் கூடப் பார்ப்பதில்லை. இன்று இயற்கைச் சூழலில் காணப்படும் மாற்றங்களுக்கு மனிதர்களே காரணமாகி விட்டனர். பூமியின் ஒரு புறம் மழையின்றி வறண்டு போய்க் கிடக்க மறு புறத்தில் கடும் மழை பெய்து வெள்ள அழிவுகள் ஏற்படுகின்றன. காலநிலையிலும் பெரும் மாற்றங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. இதனால் விவசாயச் செய்கைகள் பாதிக்கப்படுவதுடன் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டுவிடுகின்றது.

இன்று பொதுவாக சகல நாடுகளிலுமே காடுகளின் விகிதாசாரம் குறிப்பிட்ட அளவிலும் குறைவாகவே காணப்படுகின்றது. நகர அபிவிருத்தி என்ற போர்வையில் காடுகள் அழிக்கப்பட்டு, புதிய புதிய நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றமை இதற்கான பிரதான காரணியாகும். இலங்கையிலும் கூட காடுகள் அழிக்கப்பட்டு மக்கள் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு வருவதால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் காடுகள் அழிக்கப்படுவதால் காட்டு மிருகங்கள் வாழ்வதற்கு இடமின்றி குடிமனைகளை நாடிச் செல்வதால் அங்கு குடியிருக்கும் மக்கள் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அழிக்கப்படுகின்ற ஒவ்வொரு மரத்துக்கும், மரங்களைப் பதில் நடுகை செய்வதன் முக்கியத்துவம் தற்போது உணர்த்தப்பட்டு வருகின்றது. ஆனால் மக்கள் இதனைச் சரிவரக் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. இந்த நிலை நீடிக்குமாயின் காடுகளே இல்லாத ஓர் உலகமே எமது கண்களில் தென்படப்போகின்றது என்பதை எவருமே மறுக்க முடியாது.

# இந்திய வர்த்தக கண்காட்சி கொழும்பில் மே 7ஆம் திகதி




இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தற்போது கிடைக்கக் கூடியதாக இருக்கின்ற பல்வகைப்பட்ட வர்த்தக வாய்ப்புக்களை காண்பிக்கும் விதத்திலமைந்த, ஒன்பதாவது வருடாந்த இந்திய வர்த்தக கண்காட்சி கொழும்பிலுள்ள இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாட்டு நிலையத்தில் நாளை மறுதினம் 07ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. எம்.பி இவென்ட்ஸ் லங்கா மற்றும் இந்தியாவின் பி.எச்.டி வர்த்தக, கைத்தொழில் சம்மேளனம் ஆகியவற்றினால் கூட்டாக ஏற்பாடு செய்யப்படும் இக் கண்காட்சியானது, மே 09ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும். அதேவேளை இலங்கையின் தொழில் முயற்சியாளர்களோடு பங்காளித்துவத்தை கட்டியெழுப்பும் எதிர்பார்ப்புடன் கிட்டத்தட்ட 80 இந்திய காட்சிப்படுத்துநர்கள் தத்தமது உற்பத்திப் பொருள்களை இங்கு காட்சிப்படுத்தவுள்ளனர்.

இந்திய வர்த்தக கண்காட்சி 2015 ஆனது, இந்திய உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான கொள்வனவாளர்களும் விற்பனையாளர்களும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும் ஒரு மிகப் பெரிய களமாக வர்ணிக்கப்படுகின்றது. அத்துடன், இந்தியர்கள் இலங்கைச் சந்தையில் உள்ளவற்றை கண்டறிவதற்கு மிகப் பொருத்தமான வணிகத்திலிருந்து – வணிகத்துக்கு அடிப்படையிலானதளமேடையாகவும் காணப்படுகின்றது. குறிப்பாக இந்திய வர்த்தகர்கள் தமது பல்வேறு வகைககளிலான உற்பத்திகள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்துவதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும். அதன்மூலம் இலங்கையில் புதிய வழிமுறையிலான வர்த்தகத்தை ஆரம்பித்து வைக்கக்கூடியதாக இருக்கும். அதேவேளை முகவர்கள், விற்பனையாளர்கள், விநியோகஸ்தர்கள், உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், தொழில்முயற்சியாளர்கள், வர்த்தக சம்மேளனங்கள், ஒன்றிய உறுப்பினர்கள் மற்றும் நேரடி சந்தைப்படுத்தலில் ஈடுபடும் கம்பனிகள் போன்ற தரப்பினர்களுடன் அவர்கள் இடைமுக உரையாடலை மேற்கொள்வதற்கும் இக் கண்காட்சி வசதியளிக்கின்றது. நாம் உண்மையிலேயே எமது உறுப்புரிமையுடன் இருபக்க வர்த்தகத்தை ஊக்கப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம் என்று இந்தியாவின் பி.எச்.டி வர்த்தக, கைத்தொழில் சம்மேளனத்தின் பணிப்பாளர் நாயகமான சவுரப் சன்யால் தெரிவித்தார்.

இந்திய வர்த்தக கண்காட்சி 2015 இன் பிரதான நோக்கம் இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக உறவுகளை அபிவிருத்தி செய்வதும், இந்திய கைத்தொழில் நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு இலங்கையில் சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்வதும் ஆகும். அதேநேரத்தில், காட்சிப்படுத்தல்கள் நேரடி உரையாடல்கள் ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம் புதிய வியாபாரத்தை உருவாக்கிக் கொள்ளவும் காட்சிப்படுத்துநர்களுக்கு இக் கண்காட்சி உதவி புரியும். அதுமட்டுமன்றி இத் துறையிலுள்ள உயர்மட்ட தொழில்வாண்மையாளர்களை கவரும் ஒருங்கிணைந்த முன்முயற்சியை பலப்படுத்துவதுடன், அதன் காரணமாக தொழில்நுட்பம், குவிமையப்படுத்தல் மற்றும் பார்வையாளர்களை மேம்படுத்திக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த வியாபாரிகளும் கைத்தொழில்துறை தொழில்வாண்மையாளர்களும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கும் தமக்கிடையில் வர்த்தக தொடர்புகளை உருவாக்குவதற்குமான ஒரு தளமேடையை வழங்குவதே இக் கண்காட்சியின் நோக்கமாகும்.

இந்திய மூலப் பொருள்கள் இலங்கைச் சந்தையில் எப் போதுமே மிக முக்கியமான மூலப்பெருள்களாக இடம்பிடித்துள்ளன. அந்த வகையில் 9ஆவது இந்திய வர்த்தகக் கண்காட்சியானது இச் சந்தையில் காணப்படுகின்ற பல்வேறு இடைவெளிகளை நிரப்புவதற்கு அவசியமான மிகப் பெரும் வாய்ப்புக்களை வழங்கும் என்று எம்.பி இவென்ட்ஸ் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் எமில் குணசேகர தெரிவித்தார்.

இவ்வருடம் பல்வேறு வகைப்பட்ட காட்சிப்படுத்துநர்கள் தமது துறைகளை பிரதிநிதித்துவம் செய்து பங்குபற்றுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். (த)

## நெடுங்கேணி வீதி ஊடாகவும் போக்குவரத்துச் சேவை அவசியம்

முல்லைவீதி தண்ணீரூற்று சந்தியிலிருந்து நெடுங்கேணி செல்லும் வீதி ஊடாக பொது மக்களுக்கான போக்குவரத்துச் சேவை எதுவும் நடைபெறுவதில்லை. அந்த வீதி வேறு தனியார் வாகனங்கள் பயணிக்கவும் கால் நடைகள்படுத்துஉறங்கவுமேபயன்படுகிறது. இந்த வீதி வவுனியா செல்வதற்கு மிகவும் கிட்டிய வீதியாகும். அதுமட்டுமல்ல களிக்காடு, கோடாலிக்கல்லு, தண்டுவான் போன்ற இடங்களில் தண்ணீரூற்று முள்ளியவளை மக்களுக்கு வயல் நிலங்கள் உண்டு. அத்துடன் முல்லைத்தீவு செல்பவர்கள் நெடுங்கேணி சென்று ஒட்டுசுட்டான்ஊடாகசுமார்15,20 கிலோமீற்றர் தூரம் சுற்றிவர வேண்டியுள்ளது. ஏன் இந்த வீதியால் ஒரு சில அரச, தனியார் போக்கு வரத்துச் சேவையையாவது மேற் கொண்டால் என்ன? இந்த வீதியை புனரமைத்து விட்டு பொதுமக்களுக்கான போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ளாமல் இருப்பது நியாயமானதல்ல.

எனவே இந்த வீதி ஊடாகவும் அரச, தனியார் சேவையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு நாம் கேட்கின்றோம்.

*நெடுங்கேணி பகுதி மக்கள்.*

---

## வாசகர் திருமுகம்



### பண்பாடுகள் போதிக்கப்பட வேண்டும்

யாழ்.மாவட்டச் செயலகத்தின் முன்பாக புதன்கிழமை, வேலையற்ற பட்டதாரிகள் சிலர் போராட்டம் நடத்தினார்கள். போராட்டம் நடத்துவது அவர்களுடைய உரிமை. ஒருவனது உரிமை என்பது மற்றவனுடைய உரிமையை, நலனை பறிப்பதாக இருக்கக் கூடாது.

ஆனால் போராட்டம் நடத்தியவர்களைப் பார்க்கும்போது, ஏதோ தமக்கு மாத்திரமே பிரச்சினைகள் இருக்கின்றன என்பது போலவும், ஏனையோருக்கு பிரச்சினைகள் எதுவுமில்லை என்பது போலவும் செயற்பட்டனர். புதன்கிழமையாதலால், மாவட்டச் செயலகத்துக்கு என்னைப்போன்ற பலர். சேவை பெற்றுக் கொள்வதற்கு வந்தனர். அத்துடன் அன்றைய தினம், வாகனச் சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைக்கும் பலர் வந்திருந்தனர். எங்கள் அரச அதிகாரிகளை சும்மாவே பிடிக்க முடியாது. புதன் கிழமைகளைத் தவறவிட்டால், பின்னர் சந்திக்க முடியாது. இவ்வாறானதொரு நிலையில் குறித்த தினத்தன்று சேவைகளைப் பெற்றுக் கொள்ள மாவட்டச் செயலகத்துக்கு வந்த என்னையும்,ஏனையோரையும் உள்ளே செல்ல முடியாது என்று வாசலில் இருந்த சிலர் தெரிவித்தனர். மாவட்டச் செயலகத்துக்கு நுழையும் வாசலையும் மூடி வைத்திருந்தனர்.

அத்துடன் உள்ளே விடுமாறு கேட்டதற்கு, எம்மைக் கேலி செய்து தமது காவாலித்தனத்தையும் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். பல்கலைக்கழகத்தில் செய்தது போதாது என்று, மாவட்டச் செயலகத்தின் முன்பாகவும் தமது காவாலிக் கூத்துக்களைக் காட்டினர்.

இவர்கள் அரச வேலை வேண்டும் என்று போராட்டம் நடத்துகின்றனர். இப்போதே இவ்வளவு காவாலித்தனம் செய்து – பொதுமக்களை அவமரியாதை செய்கின்றார்கள். இவர்களுக்கு நாளை அரச நியமனம் கிடைத்தால் பொதுமக்களை எப்படி மதிப்பார்கள்? இப்போதே இவ்வளவு ஆட்டம் போடுகின்றவர்கள், அரச வேலை கிடைத்தால் பொதுமக்களுக்கு சேவை வழங்குவார்களா ?

பல்கலைக்கழகமோ அல்லது எந்தவொரு உயர்கல்விப் பீடமோ, படிப்பை மாத்திரம் வழங்காமல், பொதுமக்கள் உறவுகள் மற்றும் பண்பாடுகளை மாணவருக்கு முதலில் கற்பிக்க வேண்டும்.

*சின்னத்தம்பி இராஜதுரை*
*நீர்வேலி.*

---


## தொண்டு நிறுவனங்கள் உதவுமா?

மதிப்புக்குரிய உதயன் பத்திரிகை நிர்வாகிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நல்ல விடயங்களை மக்களுக்கு சேரக் கூடியதாக எடுத்துச் செல்லும் பத்திரிகைகளில் உங்களின் உதயன் பத்திரிகையும் ஒன்று. நான் தினமும் வாங்குகிறேன் அத்தோடுதரம் 5 இற்கான மாதிரி வினாவடிவம் மிகவும் பிரயோசனமாக உள்ளது. இவை எல்லாம் ஒரு புறமிருக்க, ஒரு முக்கியமான விடயம் தங்களின் பத்திரிகையில் வெளிவர வேண்டும் என்பது எனது ஆவல். வவுனியாவில் கணேசபுரம் என்னும் கிராமத்தில் எத்தனையோ வயது சென்ற முதியவர்கள் இருக்கின்றனர். அவர்களில் பலர் உறவுகளுடன் வசித்து வருகின்றனர். ஒரு சிலர் உதவுவதற்கு எவருமற்ற நிலையில் வாழ்கின்றனர். இத்தகைய ஒருவருக்கு நான் உதவி செய்து வருகின்றேன். அவருக்கென்று யாரும் இல்லாத நிலையில் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார். அவருக்கு அரசினால் வழங்கப்படும்உதவிப்பணம்மட்டுமேகிடைக்கின்றது. அவர் அதைக்கொண்டு வாழ்ந்து வருகிறார். ஆனால் சமீப காலமாக அவரது உடல் நிலை பாதிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் வாழ்கிறார். அடிக்கடி என்னிடம் வந்து சிறு உதவிகளைப் பெற்று வருகிறார். இருப்பினும் அவரை தனியார் மருத்துவரிடம்கொண்டுசென்றுகாட்டிமருந்து எடுக்க அதிக பணம் தேவைப்படுகிறது. ஆனால் அவரிடம் அவ்வளவு பணம் இல்லை. பொது வைத்தியசாலையில் தான் சென்று மருந்து எடுத்து வருகிறார். பஸ்ஸில் சென்றுதான் மருந்து எடுத்து வர வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. சில வேளைகளில் நான் தான் கூட்டிச் சென்று வருவேன். மேலும் அவர் தமக்குத் தெரிந்தவர்களின் வீடுகளில் சென்று சாப்பிடுவார். நான் இருக்கின்ற வேளைகளில் அவரைக் கவனித்துக் கொள்வேன். தொண்டு நிறுவனங்கள் அவரது உணவு மற்றும் மருத்துவத்துக்கான உதவிகளை வழங்கினால் பெரிதும் உதவியாக இருக்கும்.

*திருமதி குலேந்திரன்*
*வவுனியா.*

---

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

---

## அட்டூழியங்களைத் தொடரும் ஐ.எஸ்.

மனிதன் என்ற பரிணாமமே நம்மை ஒன்றிணைக்கும் அம்சம். அதன் அடிப்படையில் நாம் ஒருவரை ஒருவர் மதித்து, அன்பும் அரவணைப்பும் பரிமாறிக் கொண்டாலே உலகத்தில் தீவிரவாதத்தால் விளையும் வன்முறைகள், போராட்டங்கள் மற்றும் குழப்பங்கள் அகன்று அமைதியும் நிலைத்தன்மையும் நீடிக்கும்.

ஆனால் இன்றோ இதற்கு மாறாக மதவாதம் பெருகி தீவிரவாத வன்முறைகளும், போராட்டங்களும், குழப்பங்களும் அதிகரித்து உலகம் அமைதியின்மையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

மதத்துவம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் எங்கும் எதிலும் தனது மூக்கை நுழைக்க அனுமதித்தால் அதனால் அமைதி சீர்குலையும் சாத்தியமே அதிகம். அரசு எந்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கினாலும், சில தீவிரவாதிகள் ஏற்படுத்த முயலும் குழப்பங்களை ஆரம்பக்கட்டத்திலேயே கிள்ளியெறிய அது தயக்கம் காட்டக் கூடாது.

ஐ.எஸ். தீவிரவாதிகள் 300 யாஜிதி இனத்தவர்களைக் கொலைசெய்து உள்ளனர் என்று ஈராக் மற்றும் யாஜிதி அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சிரியா மற்றும் ஈராக் நாடுகளில் பெரும்பான்மையான பகுதிகளை தங்கள் வசம் கொண்டுவந்து, தனிநாடு உருவாக்கும் முனைப்பில் ஐ.எஸ். தீவிரவாதிகள் செயற்பட்டு வருகின்றனர். ஈராக்கில் ஷியா ஆதரவு அரசுக்கு எதிராக ஐ.எஸ்.ஐ.எஸ். என்ற அமைப்பின் தீவிரவாதிகள் சண்டையிட்டு வருகிறார்கள். அவர்களுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் உலக நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. பதிலுக்கு தாக்குதல் நடத்திவரும், ஐ.எஸ். தீவிரவாதிகளின் வெறியாட்டம் தொடர்ந்து நீடித்து வருகிறது. வெளிநாட்டவர்களைப் பணயக்கைதிகளாகப் பிடித்துவைதது கொலை செய்து வந்த தீவிரவாதிகள், தற்போது அங்குள்ள சிறுபான்மையினரை துன்புறுத்தி வருகின்றனர்.

யாஜிதி இனத்தை சேர்ந்த பெண்களுக்கு அவர்கள் செய்த கொடூரம் சமீபத்தில் வெளியாகியது. இந்த நிலையில், ஐ.எஸ். தீவிரவாதிகள் 300 யாஜிதி இனத்தவர்களைக் கொலைசெய்து உள்ளனர் என்று ஈராக் மற்றும் யாஜிதி அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மொசூல் நகருக்கு மேற்கே, தால்அபார் மாவட்டத்தில் பணயக் கைதிகளாகச் சிக்கியிருந்த யாஜிதி இனத்தவர்கள் 300 பேரை, ஐ.எஸ். தீவிரவாதிகள் கொலை செய்தனர் என்று யாஜிதி முற்போக்கு கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஈராக் துணை அதிபர் ஒசாமாஅல் நுஜாய்பி, ஐ.எஸ். தீவிரவாதிகளது இந்தச் செயல் மிகவும் பயங்கரமானது மற்றும் காட்டுமிராண்டித்தனமானது என்று கண்டனம் தெரிவித்து உள்ளார்.

யாஜிதி இனத்தவர்கள் 300 பேரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கொலை செய்தனர் என்பது தெளிவாகி உள்ளது. ஆனால் அவர்கள் எப்படிக் கொலை செய்யப்பட்டனர் என்பது தொடர்பான விரிவான தகவல்கள் உடனடியாக வெளியாகவில்லை என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் இருவர், ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளால், தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, பிரிட்டனைச் சேர்ந்த ஒருவரின் தலையை துண்டித்துக் கொல்லும் வீடியோ காட்சியை பயங்கரவாதிகள் வெளியிட்டுள்ளனர். இது, உலக நாடுகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக்கைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும், ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பினர், உலகம் முழுவதும் தங்கள் கிளைகளைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதன் ஒரு பகுதியாக, தங்கள் இயக்கத்தின் கொள்கைகளுக்கு எதிராகச் செயல்படும் நாடுகள் மீது போர் தொடுக்கப் போவதாகவும் அறிவித்து உள்ளனர்.

இந்த நிலையில், ஈராக் மற்றும் சிரியா உள்ளிட்ட நாடுகளின் பிரச்சினையில், பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடுவதாக, அமெரிக்கா மீது குற்றம் சாட்டினர். ஈராக்கில், அரசுப் படைகளுக்கு ராணுவ உதவி மற்றும் ஆதரவு அளித்ததால், ஜேம்ஸ் போலே என்ற அமெரிக்கப் பத்திரிகையாளரைத் தலையை துண்டித்துப் பயங்கரவாதிகள் கொலை செய்தனர். இந்த வீடியோக் காட்சிகளை வெளியிட்டு அமெரிக்காவுக்கு மிரட்டல் விடுத்தனர்.அதன்பின் ஸ்டீவன் ஸ்டோல்ப் என்ற மற்றொரு அமெரிக்கப் பத்திரிகையாளரும் கொடூரமான முறையில் கழுத்து அறுத்து கொலை செய்யப்பட்டார். இந்த வீடியோக் காட்சிகளையும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் வெளியிட்டனர். அதில், தங்கள் அமைப்புக்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகள் தொடர்ந்தால், இதேபோல், அமெரிக்கர்கள் ஒவ்வொருவராக கொல்லப்படுவர் என மிரட்டல் விடுத்தனர்.

இந்தக் கொலைகள் உலக நாடுகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தின. ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கர வாதிகளின் இந்தச் செயலுக்கு உலகத் தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளை ஒழிக்கத் திட்டமிட்ட ஒபாமா, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனைத் தொடர்பு கொண்டு ஆதரவு கோரினார். இருவரும் சேர்ந்து, ஆதரவு நாடுகளின் உதவியுடன், பயங்கரவாதிகளை ஒழிக்க சூளுரை ஏற்றனர்.

இஸ்ரேல், நைஜீரிய நாடுகளில் பொக்கோ ஹராம், ஆப்கானிஸ்தானில் தலிபான், ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ், மலேசியா, இந்தோனேசிய நாடுகளில் ஜம்மிய இஸ்லாமியா, இந்தியாவில் லக்ஸ் இ தொய்பா போன்ற பயங்கரவாத அமைப்புகளும், சூடான் மற்றும் சிரியா போன்ற நாடுகளை அராஜக நிலைமைக்கு கொண்டு செல்ல வஹாப் வாதத்தை ஏற்றுக் கொண்ட முஸ்லிம் அடிப்படைவாதிகளும் முழு உலகிலும் செயற்பட்டு வருகின்றனர்.

இஸ்ரேலின் போக்குக் காரணமாகவே இந்த முஸ்லிம் அடிப்படைவாதிகள் உருவாகி செயற்பட்டு வருவதாகச் சிலர் கூறுகின்றனர்.

அமெரிக்காவும் பிரிட்டனும் தமது பொருளாதார, அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் நாடுகளை அராஜக நிலைக்குள் தள்ள பல நாடுகளில் உள்ள பல்வேறு குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி வருகின்றன. இதனால், இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ளது.

ஈராக்கில் உள்ள எண்ணெய் வளத்துக்காகவே அமெரிக்கா ஈராக்கின் பாத் என்ற சமவுடமைக் கட்சியை அழித்து, சதாம் ஹூசைனை அடக்கியது. இதற்காக அந்த நாட்டில் இருந்த குழுக் களுக்கு ஆயுதங்களை விநியோகித்தது என்று முஸ்லிம் நாடுகள் குற்றம் சாட்டுகின்றன.

இந்த தீவிரவாதிகளது அட்டூழியங்களைக் கட்டுப்படுத்தாவிட்டால், எதிர்காலத்தில் உலகம் பேரழிவு ஒன்றைச் சந்திக்கும் என்பதில் ஐயமில்லை.

**பத்தி எழுத்து**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அமெரிக்க அமைச்சரின் வருகை உணர்த்துவது என்ன?

அமெரிக்க இராஜங்க அமைச்சர் ஜோன்கெரி, இரண்டு நாள் பயணமாக இலங்கைக்கு வந்து சென்றுள்ளார். இங்கே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர முதலிய அரச தரப்பு பிரமுகர்களை மட்டுமன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களையும் அமெரிக்க அமைச்சர் சந்தித்திருந்தமை முக்கியம் வாய்ந்ததாகும்.

இது அரசு தரப்பினரை அதிக சிந்தனைக்கு உட்படுத்தியிருக்கும் என்பது ஒரு புறமிருக்க, இந்த நாட்டின் தமிழ் பேசுவோரை ஒரு தூசாக எண்ணி நடந்து கொண்ட முன்னாள் ஆட்சியாளர்களுக்கு மட்டுமன்றி, அவர்களின் நிழலில் அரசியல் புரிபவர்களுக்கும் ஆத்திரத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தியிருக்கும் என்பது வெள்ளிடைமலை.

நடந்து முடிந்த போரின் இறுதியிலும், அதற்குப் பின்னரும் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான, மனித உரிமைகளுக்கு மாறான அரச தரப்பின் செயற்பாடுகள் தொடர்பாக, ஐ.நா. விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்கான ஒரு நிபுணர் குழுவை ஐ.நா. மனித உரிமைகள் சபை நியமித்தமைக்கு, முயற்சி எடுத்து முன்மொழிந்து செயற்பட்டிருந்த முக்கிய நாடு அமெரிக்காவாகும்.

அந்த நிபுணர் குழுவின் அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்த வேளையில் இங்கு ஆட்சிமாற்றம் ஏற்பட்டது. அதற்கும் கூட இந்த நாட்டு தமிழ் பேசும் மக்களே முக்கிய காரணர்களாக இருந்தார்கள். புதிய ஆட்சியினர் அமெரிக்காவிடமும் மனித உரிமைகள் சபையிடமும் நேரடியாக அவகாசம் கேட்டு மன்றாடியமையால், அறிக்கை சமர்ப்பிப்பது செப்ரெம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரிப்பதற்கும், பரிந்துரைகள் செய்வதற்கும் உள்நாட்டிலேயே நம்பகமான பொறிமுறையொன்றை அமைப்பதாக இலங்கை அரசு வாக்குறுதி அளித்திருக்கின்றது. அதேசமயம் தேசிய நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அரசு ஒப்புக் கொண்டிருந்தது.

எனவே, தான் அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசு எந்த அளவுக்கு முன் நகர்த்தியுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள மக்கள் எந்த அளவுக்கு திருப்தி கண்டிருக்கிறார்கள் என்பதை அமெரிக்க அரச அறிந்துகொள்ள விரும்புவதில் ஆச்சரியமில்லை. இங்குள்ள தூதரகம் அனுப்பும் அறிக்கைகளை மட்டும் படித்து நிலைமைகளை விளங்கிக்கொள்வதை விட, இந்த விடயத்தில் அமெரிக்கா எந்த அளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்துவதாகவே, அமெரிக்காவில் அதிபருக்கு பெரும்பாலும் அடுத்தபடியில் அதிகாரமிக்கவரான, அந்த நாட்டின் இராஜாங்க அமைச்சர் ஒருவர் 42 வருடங்களுக்குப் பிறகு இலங்கை வந்து சென்றுள்ளார் என்று கருதலாம்.

இந்த நாட்டின் விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடாத முறையில் ஆட்சி நடத்தப்போவதாக அண்மையில் தாது 100 நாள் ஆட்சியின் பூர்த்தியை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியளித்திருந்தார்.

கடந்த காலத்தில் பதவியில் இருந்துள்ள அரசுகள் மேற்கொண்ட நீதிக்குப் புறம்பான, சிறுபான்மை மக்களுக்கு எதிரான செயற்பாடுகளின் காரணமாகவே, வெளிநாடுகள் இலங்கை விவகாரங்களில் தலையிட நேர்ந்தது. இதை ஏதேதோ கூறி மறைத்துவிட தென்னிலங்கை அரசியல்வாதிகள் முயன்று வந்திருக்கிறார்கள். உண்மை நிலைமையை நியாயபூர்வமாகவும் பக்கச் சார்பின்றியும் ஆராய்பவர்களுக்கு அது எளிதாகப் புரிந்துவிடும்.

எனவே, தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளை நம்பகரமாக தீர்த்து வைப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது மட்டுமன்றி, அந்த மக்கள் இதயபூர்வமாக அவற்றை நம்பும்படி செய்ய வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. இல்லையெனில், வெளிநாட்டுத் தலையீடுகளை இல்லாமல் செய்வது அவ்வளவு இலகுவான காரியமல்ல.

அவ்வாறு செய்யத் தவறின், நியாயமான தீர்வை பெற்றுத் தரும்படி உலக நாடுகளை, குறிப்பாக ஐ.நாவின் தலையீட்டைக் கோரி அவர்கள் நிற்பது தவிர்க்கப்பட முடியாதது.

இந்த உண்மை நிலைமையையே அமெரிக்க அமைச்சரின் வருகை உணர்த்தியிருக்கிறது என்று கூறுவதில் தவறில்லை.



# சாது மிரண்டால் காடு கொள்ளாது

## நிரூபித்துக் காட்டிவிட்டார் மைத்திரி

■ சேரலாதன்

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்று கூறுவார்கள். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடயத்தில் இது நிரூபணமாகிவிட்டது. மஹிந்த ராஜபக்ஷவை தேர்தலில் தோற்கடித்து மைத்திரி ஆட்சிக்கு வந்தபோது, அவர் நிம்மதியாகப் பணிகளை மேற்கொள்ள மஹிந்த தரப்பினர் அனுமதிக்கவில்லை. எந்தவொரு விடயத்தையும் பெரும் இழுபறிகளுக்கு மத்தியிலேயே அவரால் முன்னெடுத்துச் செல்ல முடிந்தது. அந்த வேளைகளில், அவர் காட்டிய அசாதாரணப் பொறுமை பலருக்கும் அவர் மீது வெறுப்பை ஊட்டவே செய்தது. மஹிந்தவின் ஆளுமை மற்றும் துணிவு எங்கே? இவர் எங்கே என விமர்சனங்கள் கூட பலமாக எழுந்தன. சிலர்,இவர் எவ்வளவு காலத்துக்குப் பதவி வகிக்கப் போகின்றார் எனச் சந்தேகமும் வெளியிட்டனர். ஆனால் பொறுமையாக இருந்தே மைத்திரிபால காரியங்களை நிறைவேற்றிக் காண்பித்து விட்டார். குறிப்பாக 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்வதில் அவர் கண்ட இமாலய வெற்றி,அவரை எங்கோ தொலை தூர உயரத்துக்குக் கொண்டு சென்று விட்டது. இந்தத் திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றவிடாது தடுத்து நிறுத்த முயன்றதன் பின்னணியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்தார். அவரது ஆதரவு பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மஹிந்தவின் நோக்கத்தை நிறைவேற்றியே தீர வேண்டும் என்பதில் தீவிரமாகச் செயற்பட்டனர். நிலைமை ஜனாதிபதிக்கு எதிராகவே மாறிக்கொண்டிருந்தது. அப்போதுதான் மைத்திரிபால விழித்துக் கொண்டார். அரசியலில் அதீத பொறுமையைக் கடைப்பிடிப்பது ஒருபோதுமே நன்மையைத் தரப்போவதில்லை என்பதை அப்போதுதான் அவர் புரிந்துகொண்டார். சாது மிரண்டால் என்ன நடக்கும் என்பதையும் புரிய வைத்தார். வெற்றியும் கண்டார். இந்த நடவடிக்கையின் மூலமாக மஹிந்த தரப்பினர் மீண்டும் தலையெடுக்க முடியாதவாறு பலத்த அடியையும் வாங்கிக் கட்டிக் கொண்டனர்.

> 19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் மூலமாக ஜனாதிபதியின் அதிகாரங்களில் சுமார் 65 வீதமானவை தற்போது ஒழிக்கப் பட்டுள்ளன. அத்துடன் ஒருவர் இரண்டு தடவைகளுக்கும் மேலாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாத வகையில் தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் அடுத்த பொதுத் தேர்தலை எதிர்கொள்ளக் கூடிய துணிவையும் தற்போது மைத்திரி பெற்றுக் கொண்டு விட்டார். ஏனென்றால் தமது எதிர்கால இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அந்தக் கட்சியைச் சேர்ந்த பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாணசபை மற்றும் பிரதேசசபை உறுப்பினர்களும் மஹிந்தவைக் கைகழுவிவிட்டு மைத்திரிக்குப் பின்னால் அணிதிரள ஆரம்பித்து விட்டனர். மீண்டும் ஆட்சிக் கதிரையில் அமரும் கனவுடன் காத்திருக்கும் மஹிந்தவுக்கு மைத்திரியின் அதிரடி நடவடிக்கைகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது.

மேலும் எந்தவிதமான அழுத்தங்களுக்கும் அடிபணியாது மஹிந்தவுக்கும் அவரது சகோதரர்களுக்கும் எதிரான விசாரணைகளை மேற்கொள்வதற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளும் ஜனாதிபதி மீதான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்துள்ளன. மேலும் தற்போதைய ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த போன்று பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்பதும் மக்களுக்குப் புரிந்துவிட்டது. தமக்குக் கிட்டிய நிறைவேற்று அதிகாரங்களைத் தாமே கைவிட முன்வந்ததன் மூலமாக அவர் இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் முக்கியமானதொரு இடத்தை வகிக்கப் போகின்றார். 19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட் டத்தின் மூலமாக ஜனாதிபதியின் அதிகாரங்களில் சுமார் 65 வீதமானவை தற்போது ஒழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஒருவர் இரண்டு தடவைகளுக்கும் மேலாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாத வகையில் தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 35 வயதைப் பூர்த்தி செய்யாத ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதவாறும் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவையாவும் மஹிந்த குடும்பத்தினருக்கே பாதகமாக அமைந்து விடப் போகின்றன. சாது ஒன்றை மிரள வைத்ததன் பயன்களை அவர்கள் இனிமேல்தான் அனுபவிக்கப் போகின்றனர்.

சிங்கள மூலம்:மவ்பிம
தமிழில்:வீ.எஸ்.ரீ.

## பொலன்னறுவை மைந்தன்

# மைத்திரி

## அரசியல் வானில் ஜொலிப்பு

முன்னாள் பிரதமரும், சுதந்திரக் கட்சியின் தலைவியுமாக இருந்த சிறிமாவோவின் சிவில் உரிமையைப் பறிக்க ஐ.தே.கட்சி அரசு 1979ஆம் ஆண்டில் நடவடிக்கைகளை முன்னெடுத்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சுதந்திரக் கட்சியின் ஏனைய தலைவர்களும் கட்சி ஆதரவாளர்களும் வீதியில் இறங்கி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். அதனால் நாட்டில் அமைதியற்ற, பெரும் குழப்ப நிலை நிலவியது. சிறிமாவோவின் சிவில் உரிமையை நீக்குவதற்கான பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட தினத்தன்று, பொலன்னறுவையில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

அந்த வேளையில் துடிப்பு மிக்கதோர் இளைஞராக இருந்த மைத்திரிபால சிறிசேனவே அதனை ஒழுங்கு செய்திருந்தார். சத்தியாக்கிரக முடிவில், ராஜரட்டைப் பிரதேச மக்களது எதிர்ப்பை அரசுக்கு உணர்த்தும் விதமாக பொதுக் கூட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பெருமளவிலான பொதுமக்கள் ஒன்று திரண்ட அந்தப் பொதுக் கூட்டம் காரணமாக நகரின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

பொதுக் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் திடீரென அங்கு பிரவேசித்த பொலிஸார் பொதுமக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ள ஆரம்பித்ததை அடுத்து பொது மக்கள் நாலாபுறமும் சிதறியோட ஆரம்பித்தனர். பொதுக் கூட்டம் இதனால் இடை நடுவில் தடைப்பட்டதுடன் அதில் கலந்து கொண்ட அரசியல்வாதிகளான தேசப்பிரிய சேனநாயக்க, மைத்திரிபால சிறிசேன மற்றும் வை.சி. சில்வா ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

### ஜே.ஆர்.சூட்டிய பெயர் சண்டியன்

பொலிஸாரால் அநுராதபுர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட அவர்கள், மூன்று மாதங்களின் பின்னர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர். மைத்திரிபால சிறிசேன சிறைத் தண்டனை அனுபவிக்க நேர்ந்தமை அது இரண்டாவது தடவை என்பதுடன், ஆச்சரியப்படத்தக்க வகையில் அவர்கள் நீதிமன்றத்தால் திடுதிப்பென விடுவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதொன்று.

பொலன்னறுவையில் இடம்பெற்ற மத வைபவமொன்றில் ஜனாதிபதி ஜே.ஆர்.கலந்துகொள்ள இருந்ததன் காரணமாகவே, அதற்கு முன்தினம் அவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக பின்னர் உண்மை வெளிவந்தது. குறித்த மத வைபவத்தில் உரையாற்றிய ஜே.ஆர். இந்தப் பகுதியில் இருப்பதாகக் கூறப்படும் சண்டியர்கள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனரெனக் குறிப்பிட்டிருந்தார். அவர் குறிப்பிட்டவர்களில் ஒருவரான மைத்திரிபால சிறிசேன 37ஆண்டுகளுக்குப் பின்னர், 1978இல் தம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையை மாற்றியமைப்பார் என ஜே.ஆர். அந்த வேளையில் கனவுகூடக் கண்டிருக்க மாட்டார்.

19 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட வேளையில் கருத்து வெளியிட்ட ரணில், நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியை அடைந்த எவரும் ஒருபோதும் அந்தப் பதவிக்கான அதிகாரங்களை இழக்க விரும்பமாட்டார்கள் எனத் தமக்கு ஜே.ஆர். முன்பொரு சமயம் கூறியிருந்ததாகத் தெரிவித்திருந்தார்.



சர்வாதிகாரியை திக்குமுக்காட வைத்துள்ள செயல்வீரன்

> சந்திரிகாவோ, ஜே.ஆரால் கட்சித்தாவலுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி, நாடாளுமன்ற ஒழுக்கத்துக்கு மாறான கட்சித்தாவலுக்கு வழிவகுத்தார். அதன் மூலம் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசின் பக்கம் கட்சி தாவவைக்க தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டார். அதே போன்று 2001ஆம் ஆண்டில் அரசமைத்த ஐ.தே. கட்சி அரசை 2004 ஆம் ஆண்டில் சந்திரிகாவால் கலைக்க முடிந்தமை தமக்கிருந்த நிறைவேற்று அதிகாரம் மூலமே.

### ஜே.ஆரின் பத்துக் கோட்பாடுகள்

ஜே.ஆர்.1978 இல் தமது புதிய அரசமைப்பு யோசனையை நிறைவேற்றிக்கொண்டதையடுத்து நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில் தாம் கலந்து கொண்ட முதலாவது நிகழ்வில், கொழும்பு பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற அந்த நிகழ்வில், தாம் தமது பதவியில் கடைக்கொள்ளவுள்ள பத்து முக்கிய அம்சங்கள் குறித்துத் தெளிவுபடுத்தியதுடன், தமக்குப் பின்னர் குறித்த பதவியை வகிக்கவுள்ளோரும் அந்தப் பத்து அம்சங்களையும் தமது பதவியில் கைக்கொள்வர் எனத் தாம், எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்திருந்தார். மக்கள் ஆணை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது நிறைவேற்று ஜனாதிபதியான தாம் அதிகூடிய அதிகாரங்களைக் கொண்ட பதவி என்பதுடன் பெரும் பொறுப்புக்கள் மிக்க பதவி என்பதாகத் தமது பதவியைக் கருதுவதால், முக்கிய பத்து அம்சங்களை உள்ளடக்கித் தமது நிர்வாகத்தை முன்னெடுக்கத் தீர்மானித்திருப்பதாக அவர் அங்கு கூளுரைத்திருந்தார்.

இதுவரை நடைமுறையில் இருந்த நாடாளுமன்ற சம்பிரதாயத்துக்குப் பாதிப்பு ஏற்படாத விதத்தில் எப்போதும் அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்துடன் இணங்கிச் செயற்படல், எவருக்கும் எந்த விதத்திலும் தனிப்பட்ட முன்னுரிமை, சலுகை வழங்காதிருத்தல், நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டம் மற்றும் தீர்மானங்களைப் பக்கச்சார்பற்ற விதத்தில் நடைமுறைப்படுத்தல், அரசியல் பழிவாங்கல் எதனையும் மேற்கொள்ளாதிருப்பதுடன் அத்தகைய எதற்கும் ஆதரவு வழங்காதிருத்தல், இலங்கையின் சகல பிரஜைகளையும் ஒரே விதத்தில் கணித்துச் செயற்படல், சிறுபான்மையினருக்கு, குறிப்பாக தமிழ் மக்களுக்கு உரிய சமமான இடம் வழங்கிச் செயற்படல், கருத்து வெளிப்பாடு மற்றும் செயற்பாடுகளில் அகிம்சாவாதியாகச் செயற்படல், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்க நெறிக்கோவைக்கு அமைந்து செயற்படல், ஜனநாயக சுதந்திரத்தைப் பாதுகாத்தல், செயற்பாடுகளால் எவருக்கும் சிரமமோ, நட்டமோ ஏற்படாத வகையில் சகலருக்கும் நன்மையையே செய்தல் என்பவையே ஜே.ஆர். தாம் கடைக்கொள்ளத் தீர்மானித்திருப்பதாகக் குறிப்பிட்ட அந்தப் பத்து அம்சங்களுமாகும்.

### ஜே.ஆருக்குப் பின் வந்தோரின் போக்கு

ஆனால் ஜே.ஆருக்குப் பின்னர் இந்த நாட்டின் ஜனாதிபதிகளாக இருந்த பிரேமதாஸவோ, சந்திரிகாவோ, மஹிந்த ராஜபக்ஷவோ ஜே.ஆரின் குறித்த முன்னுதாரண அம்சங்கள் குறித்து கணக்கில் கொள்ளவே இல்லை. நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையிலுள்ள நல்ல அம்சங்களைப் புறம்தள்ளி, அவர்கள் அனைவரும் தம்மிச்சைப்படி, அதன் மூலமான வாய்ப்புக்களை நாட்டு மக்களுக்குப் பாதகமாக அமையும் விதத்தில் பயன்படுத்திக் கொண்டனர்.

பிரேமதாஸ, தமக்கெதிராக முன்வைக்கப்பட்ட குற்றவியல் பிரேரணையைத் தோற்கடிக்க நாடாளுமன்ற கூட்டத் தொடரையே ஒத்தி வைத்து தப்பான விதத்தில் தமது அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

சந்திரிகாவோ, ஜே.ஆரால் கட்சித் தாவலுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி, நாடாளுமன்ற ஒழுக்கத்துக்கு மாறான கட்சித்தாவலுக்கு வழிவகுத்தார். அதன் மூலம் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசின் பக்கம் கட்சி தாவ வைக்க தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டார். அதே போன்று 2001ஆம் ஆண்டில் அரசமைத்த ஐ.தே.கட்சி அரசை 2004 ஆம் ஆண்டில் சந்திரிகாவால் கலைக்க முடிந்தமை தமக்கிருந்த நிறைவேற்று அதிகாரம் மூலமே.

மஹிந்தவோ, ஜனாதிபதியொருவர் இரு தடவைகளுக்கு மேல் அந்தப் பதவியை வகிக்க இயலாதென்ற அரசமைப்பு விதியை, அதற்கான 18 ஆவது திருத்தத்தின் மூலம் நீக்கி, மூன்றாவது தடவையும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு ஏற்படுத்தினார்.

இவ்விதம் நாட்டின் அரசியலானது சர்வாதிகாரப் போக்கை நோக்கி நகர்ந்த நிலையில் கடந்த ஜனவரி ஜனாதிபதித் தேர்தல் மூலம் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார். தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையை ஒழிப்பதாக அவர் தெரிவித்தபோது அது முன்னையவர்களது வாக்குறுதி போன்றதொன்றே எனப் பலரும் விமர்சித்தனர்.

மைத்திரிபால, சந்திரிகா, மஹிந்த போன்றல்லாது, சுதந்திரக் கட்சியின் கிராம மட்ட பதவியிலிருந்து, கட்சியின் தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் வாய்ப்பு வரை பயணித்த ஒருவராவார். சந்திரிகாவோ இரு முன்னாள் பிரதமர்களது மகள் என்ற வகையிலும், மஹிந்தவோ, சுதந்திரக் கட்சியின் ஆரம்பகால அரசியல் வாதியின் மகன் என்ற வகையிலுமே இலங்கை அரசியல் அரங்கில் பிரவேசித்தவர்கள். இந்த இரு வரையும் அரசியலரங்கில் அறிமுகப்படுத்தியவர் சிறிமாவோ பண்டாரநாயக்கவே.

### மஹிந்தவின் அரசியல் பின்னணி

மஹிந்தவின் தந்தையாரான டி.ஏ. ராஜபக்ஷ காலமானதையடுத்து அவரது வெற்றிடத்தை நிரப்ப ராஜபக்ஷ குடும்பத்திலிருந்து சிறிமாவோவால் அரசியலுக்குக் கொண்டு வரப்பட்டவரே மஹிந்த ராஜபக்ஷ. மைத்திரிபால சிறிசேனவோ சுதந்திரக் கட்சியின் பொலன்னறுவைக் கிளையின் இளைஞரணித் தலைவராக அரசியலை ஆரம்பித்து, கட்சி அமைப்பாளராகி, பின்னர் அநுர பண்டாரநாயகாவின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சேவையாற்றி, அதற்குப்பின்னர் சிறிமாவோவினால் சுதந்திரக் கட்சியின் நூலகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டவர்.

நிறைவேற்று ஜனாதிபதி நடைமுறையை ஒழிக்கும் தமது குறிக்கோளை நிறைவேற்றி வைக்க மகன் அநுரா உதவப்போவதில்லை என்பது தெளிவானபோது, தமது மகள் சந்திரிகா மூலம் தமது அந்தக் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள சிறிமாவோ தீர்மானித்தார். ஆனால் 2000 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் தினத்தன்று தமது அந்த அரசியல் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ள இயலாத, ஜே.ஆரிடம் தோல்வியுற்றதொரு அரசியல் தலைவியாக சிறிமாவோ உயிரிழக்க நேரிட்டது.

சிறிமாவோ, தமது மகன் மூலமாகவோ, மகள் சந்திரிகா மூலமாகவோ, தாம் அரசியலுக்குக் கொண்டுவந்த மஹிந்த மூலமாகவோ நிறைவேற்றிக்கொள்ள இயலாது போய்விட்ட அவரது குறிக்கோளை தற்போது பொலன்னறுவை கிராம மட்டச் சூழலில் இருந்து, விவசாயக் குடும்பமொன்றின் உறுப்பினராக இருந்து அரசியலில் பிரவேசித்த மைத்திரிபால சிறி சேன நிறைவேற்றிக் கொடுத்துள்ளார்.

இன்று மைத்திரிபால சிறிசேனவோ, வரலாற்றில் தமது தலையைக் கொய்தே தானமாக வழங்கிய வெஸ்ஸங்கர மன்னனுக்கு ஒப்பான தலைவராக நாட்டு மக்களால் மதிக்கப்படும் ஜனாதிபதியாக வரலாற்றில் தமது பெயரைப் பதிவு செய்துள்ளார் எனக் கொண்டால் அது எந்த விதத்திலும் தவறு ஆகாது. சிறிமாவோலின் உத்தம புத்திரன் என்றும் கூட அவரை அழைக்கலாம்.

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## பொதுநலம் பேணுங்கள்

பெற்றோரை மகிழ்விக்கும் பிள்ளைகளை கண்டு கடவுள் மகிழ்ச்சி கொள்கிறார். அன்பினால் செய்யப்படும் செயல்கள், ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்.

இன்பத்தை விட துன்பமே சிறந்த ஆசிரியராக நமக்கு பாடம் கற்பிக்கிறது. அறிவோடு ஒன்றி விடுங்கள். பிழைகளை அகற்ற இதுவே அறிவியலுக்கு ஒத்த முடிவாகும்.

தன்னலத்தை ஒழியுங்கள். மனதில் மகிழ்ச்சி ஊற்றெடுப்பதை உணர்வீர்கள். பெற்றுக் கொள்பவனை விட, பிறருக்கு கொடுப்பவனே உண்மையில் பேறு பெற்றவன்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | 3 | 7 | | 2 | |
| | | | 8 | 1 | 2 | 9 | | |
| 1 | 2 | | | 9 | | | 3 | 7 |
| 9 | | | | 2 | 1 | | | 6 |
| | 1 | | | | | | 4 | |
| 2 | | | 4 | 5 | | | | 1 |
| 5 | 6 | | | 4 | | | 7 | 9 |
| | | 3 | 2 | 6 | 9 | | | |
| | 9 | | 3 | 7 | | 6 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 5 | 2 | 9 | 1 | 7 | 6 | 4 |
| 7 | 9 | 2 | 5 | 4 | 6 | 8 | 3 | 1 |
| 1 | 6 | 4 | 8 | 7 | 3 | 9 | 2 | 5 |
| 4 | 2 | 3 | 6 | 1 | 7 | 5 | 8 | 9 |
| 9 | 5 | 1 | 3 | 2 | 8 | 6 | 4 | 7 |
| 6 | 8 | 7 | 9 | 5 | 4 | 2 | 1 | 3 |
| 3 | 7 | 8 | 4 | 6 | 9 | 1 | 5 | 2 |
| 2 | 4 | 9 | 1 | 8 | 5 | 3 | 7 | 6 |
| 5 | 1 | 6 | 7 | 3 | 2 | 4 | 9 | 8 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 800 | 600 | 550 |
| நண்டு | 250 | 400 | 300 | 300 | 300 | 400 |
| கணவாய் | 500 | 500 | 500 | 500 | 600 | 450 |
| பாரை | 550 | 500 | – | 450 | 600 | 360 |
| சுறா | 500 | 500 | – | 650 | 600 | – |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 400 | – |
| விளை | 600 | 300 | 400 | 500 | 500 | 350 |
| முரல் | 300 | 300 | 400 | 450 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 550 | 400 | 500 | 400 | – |
| கிழாக்கன் | 550 | 650 | – | 500 | 500 | 400 |
| ஓரா | 400 | 300 | – | 400 | – | – |
| திரளி | 150 | 200 | 250 | 250 | 200 | - |
| நகரை | 150 | 250 | – | 350 | 200 | 300 |
| சூடை | 150 | 100 | 150 | 160 | 100 | 100 |
| ஒட்டி | 250 | 150 | 250 | 300 | 200 | 250 |
| திருக்கை | 150 | 250 | 200 | 250 | 200 | 140 |
| பாலை | 400 | 250 | – | 400 | 300 | – |
| வாளை | 100 | 150 | – | 300 | 300 | 250 |
| கொய் | 100 | 150 | 50 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 200 | 200 | 250 | 200 | 250 |

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி |
|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 30 | 30 |
| கத்தரி | 80 | 60 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 140 | 120 | 120 |
| பாகல் | 120 | 80 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 80 | 50 |
| பெ.வெங்காயம் | 90 | 110 | 100 | 100–120 |
| சி.வெங்காயம் | 70 | 50–80 | 80 | 80–100 |
| பூசணி | 40 | 30 | 25 | 30–40 |
| தக்காளி | 50 | 60 | 60 | 80–100 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 60 –70 |
| கீரை | 20 | 30 | 10 | 20–30 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20–30 |
| பச்சை மிளகாய் | 40 | 40 | 30 | 30–40 |
| புடோல் | 70 | 60 | 40 | 40–80 |
| கோவா | 40 | 40 | 30 | 30–40 |
| வெண்டி | 80 | 60 | 60 | 60–80 |
| போஞ்சி | 150 | 140 | 140 | 120–160 |
| லீக்ஸ் | 160 | 170 | 140 | 160–180 |
| தேங்காய் | 60 | 35–45 | 60 | 40– 50 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 | 90 –100 |
| தேசிக்காய் | 160 | 140 | 140 | 140– 160 |
| வல்லாரை | 20 | 20 | 15 | 20–30 |
| கறிமிளகாய் | 80 | 60 | 60 | 80–100 |
| இராசவள்ளி | 120 | 120 | 100 | 80– 120 |

# சுகப்பிரசவம் நடக்க சில வழிமுறைகள்



கர்ப்பிணிகள் வீட்டு வேலைகளை செய்து வந்தாலே எளிதாக அவர்களுக்கு சுகப்பிரசவம் ஆகும். கர்ப்பிணிகள் முதல் 3 மாதத்தில் மல்லாந்து படுப்பதோ, மல்லாந்தபடி படுத்திருந்து அப்படியே எழுவதோ மிகவும் தவறு. முதல் 3 மாதங்களுக்கு ஒருக்களித்து படுத்தபடி இருப்பதுதான், கருவின் வளர்ச்சிக்கு உதவும். அதேபோன்று, ஒருக்களித்த படியே கையை ஊன்றித்தான் எழுந்திருக்க வேண்டும்.

ஒருக்களித்தபடி படுக்கும்போது வயிறு தளர்வான நிலையில் இருக்கும். ஆனால் மல்லாந்து படுத்தால் வயிறு இழுத்த நிலையில் இருக்கும். அப்படி இருக்கும்போது கரு குழந்தையாக உருவாவதில் சிக்கல் ஏற்படும். அதன் பிறகும் மல்லாந்து படுப்பதை தவிர்க்க வேண்டும். மல்லாந்து படுத்தால் குழந்தைக்கு குடல் சுற்றிக் கொள்ளும் ஆபத்து ஏற்படும்.

அதேபோல, ஒரு பக்கம் ஒருக்களித்து படுத்திருக்கும் போது அடுத்த பக்கத்திற்கு அப்படியே திரும்பக் கூடாது. எழுந்து உட்கார்ந்து பிறகு தான் அடுத்த பக்கம் ஒருக்களித்துப் படுக்க வேண்டும். இது குழந்தை சுகப்பிரசவம் ஆக உதவும். இப்போதெல்லாம் இந்த பழக்கத்தை நிறைய கர்ப்பிணிகள் கடைபிடிப்பதில்லை. அதனால்தான் குழந்தை தலை திரும்புவதில் பிரச்சினை ஏற்படுகிறது.

தலை திரும்பாமல் இருந்தால் சிசேரியன் மூலமாகத் தான் பிரசவமாகும். மேலும், எல்லோருமே குனிந்து நிமிர்ந்து வேலை செய்தாலே சுகப் பிரசவமாகும். வீட்டு வேலைகளை தாங்களாகவே செய்து கொண்டால் எல்லோருக்கும் சுகப் பிரசவமாகும் வாய்ப்பு உள்ளது. அதேப்போல கர்ப்பிணிகள் ஏற்கனவே யோகாசனம் செய்து வந்து கொண்டிருந்தாலும் முதல் மூன்று மாதங்களுக்கு செய்யக் கூடாது. அதன் பிறகும் எளிதான பயிற்சிகளை செய்யலாம். ஆனால் கர்ப்பம் தரித்த பிறகு புதிதாக யோகாசனம் செய்யவே கூடாது. சுகப்பிரசவம் ஆவதற்கான ஆசனத்தையும் 7ஆம் மாதத்தில் இருந்து செய்யத்துவங்கலாம். ஆனால், சுகப்பிரசவம் ஆவதற்கு எந்தப் பயிற்சியும் தேவையில்லை. நீங்கள் சுறுசுறுப்பாக உங்கள் வேலைகளைச் செய்து கொண்டு வந்தீர்களானால். ஒரு வேளை எந்த வேலையும் செய்யாமல் இருப்பவர்களுக்குத்தான் இந்த பயிற்சிகள் தேவைப்படும். மேலும், வீட்டில் குனிந்து நிமிர்ந்து செய்யும் வேலைகளான வீட்டை பெருக்குதல், துணி துவைப்பது போன்ற வேலைகளை செய்யும் போது வயிறு சுருங்கி விரியும் தன்மையைப் பெறுகிறது. தற்போது சில பெண்களுக்கு சுகப்பிரசவம் என்றால் பயம் ஏற்படுகிறது. சிசேரியன்தான் எளிது என்கிறார்கள். முதலில் அந்தப் பயத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

**நாளை**

**சித்திரை-23**
**புதன்கிழமை**
**06.05.2015**

திதி: துதியை மு.ப. 10.00
நட்சத்திரம்: அனுசம் பி.ப.12.34
சுபநேரம்: 04.26-05.56 வரை
இராகுகாலம்: 11.56-01.26 வரை

# மே மாத ராசி பலன்கள்



## இடபம்:

**(கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)**

எந்த ஒரு காரியத்தையும் நிதானமாகச் செய்து முடிக்கும் இடபராசியினரே. உங்களது கருத்துக்கு மற்றவர்களிடம் வரவேற்பு இருக்கும். இந்தக் காலகட்ட தொடக்கத்தில் பண வரத்து இருக்கும். எதிர்ப்புகள் விலகும். தடைப்பட்ட காரியங்களை மீண்டும் செய்து முடிக்க தேவையான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். மனதில் புதிய உற்சாகமும், தைரியமும் உண்டாகும்.

உத்தியோகத்தர்கள் சுணக்கத்திற்கும், சோம்பேறித்தனத்துக்கும் இடம் கொடாது பணியாற்றினால் மேலதிகாரிகளின் கிடுக்கிப் பிடியிலிருந்து தப்பிக்கலாம். உங்கள் பேச்சில் நிதானமாக இருக்கப் பழகிக் கொண்டு சக ஊழியர்களை அனுசரித்துச் செல்லுங்கள். உழைப்பிற்கு இரட்டிப்பாக வருமானத்தைப் பெறுவீர்கள். சிலருக்கு புதிய வேலை வாய்ப்புகளும் கிடைக்கும். அலுவலக ரீதியான பயணங்களால் நன்மைகள் கிடைக்கும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினருக்கு திறமைக்கேற்ற புகழும் கௌரவமும் உண்டாகும். பண வரவில் படிப்படியான உயர்வைக் காண்பீர்கள். நண்பர்கள் மூலம் தக்க சமயத்தில் தேவையான உதவிகளைப் பெறுவீர்கள். சில விரயங்களும் அவ்வப்போது உண்டாகும் என்றாலும் சேமிப்பு விடயங்களில் கருத்தாய் இருப்பது நலம். உங்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வீர்கள்.

**பெண்களுக்கு**

குடும்பத்தில் சந்தோஷத்தைக் காண்பீர்கள். பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக சேமிப்பு விடயங்களில் கவனம் செலுத்துவீர்கள். ஆடை அணிகலன்களை வாங்குவீர்கள். கணவரோடு ஒற்றுமையோடு பழகுவீர்கள். அதே நேரம் மனதில் காரணமில்லாமல் அமைதி குறையும்.

**மாணவர்களுக்கு**

உழைத்தால் அதற்கேற்ற மதிப்பெண்களைப் பெறுவீர்கள். கடுமையாக உழைத்துப் படிக்கும் மாணவர்கள் தேசிய மட்டத்தில் சாதிக்கும் யோகத்தைப் பெறுவீர்கள், உடல்நலம் சிறப்பாக அமையும். அதனைக் கூட்டிக்கொள்ள வெளிவிளையாட்டு மற்றும் உடற்பயிற்சிகளைத் தவறாமல் செய்து வரவும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், புதன், வெள்ளி**

**கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்**

இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களுடன் தன்மையாகப் பேசுவது நல்லது. கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமைக் குறைவு ஏற்படலாம், கவனம் தேவை. பிள்ளைகளுக்காக செய்யும் வேலைகளில் தடை ஏற்படலாம். பெண்களுக்கு எந்தக் காரியத்திலும் அவசரம் காட்டத் தோன்றும். நிதானமாகச் செய்தால் வெற்றி நிச்சயம். வீண் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது.

**ரோகினி**

இந்த மாதம் பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி தொடர்பாக அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்து, தீர ஆலோசித்து எதிலும் ஈடுபடவும். மற்றவர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. வீண் செலவும், அலைச்சலும் உண்டாகலாம். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படலாம். தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். எனவே எதிலும் மிகவும் கவனத்துடன் ஈடுபடுவது நல்லது.

**மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

இந்த மாதம் தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் தொடர்பான கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை. தீ, ஆயுதம் இவற்றைக் கையாளும் போது கவமனாக இருப்பது நல்லது.



# ஆண்களின் வாழ்க்கையில் சந்திக்கும் பெண்கள்!



ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்று சொல்வது இயல்பு. இதற்கு யாரும் மறுப்புக் கூற முடியாது. ஏனெனில் பெண்களிடமிருந்து ஆண்கள் நிறைய கற்றுக் கொள்கின்றனர். உதாரணமாக, அம்மாவையே எடுத்துக் கொள்ளலாமே! அம்மா என்றால் ஆண்களுக்கு மிகவும் பிடிக்கும். எந்த ஒரு ஆணும் தன் அம்மாவைப் போன்று எவரும் வர முடியாது. அம்மாவிடமிருந்து தான் இதைக் கற்றுக் கொண்டேன் என்று பல ஆண்கள் கூறுவார்கள். இவ்வாறு அம்மா என்று சொல்லும் ஒரு நபர் யார் என்று பார்த்தால், அது பெண் தான். மேலும் அம்மாவிடமிருந்து மட்டும் கற்றுக் கொள்வதில்லை, அம்மாவைப் போன்று வேறு பல உறவுமுறைகளில் உள்ள பெண்களிடமிருந்தும் பலவற்றை ஆண்கள் கற்றுக் கொள்கின்றனர். எனவே தான் ஆண்கள் எந்த ஒரு இடத்திலும் பெண்களுக்கு மதிப்பளிக்கின்றனர். மேலும் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இத்தகைய பெண்களிடம் இருந்து, எப்போதும் நல்லதை மட்டும் கற்றுக் கொள்வதில்லை. தீயதையும் தான் கற்றுக் கொள்கிறோம். ஆனால் இவற்றால் தான் ஒரு உண்மையான வாழ்க்கையை அனைவரும் கற்றுக் கொள்கிறோம். ஆகவே அத்தகைய பெண்களை சிறப்பிக்கும் வகையில் மார்ச் மாதம் 8 ஆம் திகதி மகளிர் தினம், உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இத்தகைய தினத்தில், வாழ்க்கையில் மறக்க முடியாத உறவுமுறைகளில் சந்திக்கக் கூடிய 8 விதமான பெண்கள் யார் யார் என்று பார்ப்போமா!!!

**அம்மா**

உலகில் உள்ள ஒவ்வொரு ஆணும், அம்மாவின் பையன் தான். ஏனெனில் அம்மாவின் மூலம் உலகை பார்க்கும் ஆண், அந்த அம்மாவிடம் இருந்து தான் அனைத்தையும் கற்றுக் கொள்கிறான். சொல்லப்போனால், ஆண்களின் ஹீரோயின் அவர்கள் அம்மா தான்.




**மாமியார்**

அம்மாவின் அன்புக்கு கண்ணே இல்லை என்பதை மாமியாரின் மூலம் ஒவ்வொருவரும் கற்றுக் கொள் வோம். எனவே இந்த உறவு முறையிலும் ஒரு நல்ல அம்மாவைக் காணலாம்.

**பாட்டி**

பாட்டிக்கு பேரன், பேத்தி என்றால் அளவு கடந்த பிரியம் இருக்கும். அதிலும் பாட்டியின் மூலமும் நிறைய விஷயங்களைக் கற்றுக் கொள்வோம். எனவே இந்தப் பாட்டி உறவு முறையும் மிகவும் சிறப்பான மறக்க முடியாத ஒன்று.

**ஆசிரியர்**

குறும்பு செய்யும் ஒவ்வொரு ஆணுக்கும், படிக்கும் காலத்தில் ஒரு பெண் ஆசிரியர் மிகவும் பிடிப்பவராக இருப்பார். எனவே ஒழுக்கத்தோடு, இவ்வாறு தான் வாழ்க்கையில் நடக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்த மனதிற்கு பிடித்த பெண் ஆசிரியரை, எந்த ஒரு ஆணும் நிச்சயம் மறக்க மாட்டார்கள்.

**தங்கை**

அண்ணனாக இருக்கும் ஒவ்வொரு ஆணுக்கும் நிச்சயம் தங்கை என்றால் மிகவும் பிடிக்கும். ஆண்கள் எவ்வளவு தான் பொறுக்கியாக இருந்தாலும், தங்கையின் விஷயத்தில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். குறிப்பாக தங்கையாக இருக்கும் பெண், எவ்வளவு தான் அண்ணனுடன் சண்டை போட்டாலும், எந்த ஒரு விஷயத்திலும் தனது அண்ணனை விட்டுக் கொடுக்க மாட்டாள். எனவே இவ்வாறு விட்டுக் கொடுக்காத மனப் பான்மையை ஒவ்வொரு ஆணும், தங்கையிடமிருந்து கற்றுக் கொள் கின்றான்.

**முன்னாள் காதலி**

பெண்களிடமிருந்து எத்தனை தான் நல்ல விஷயத்தைக் கற்றுக் கொண்டாலும், ஒரு கெட்ட விஷயத்தையும் கற்றுக் கொள்வோம். அதிலும் காதலிக்கும் ஒரு பெண்ணிடமிருந்து, சரியான புரிதல் மற்றும் நம்பிக்கையின்மையினால் பிரிந்து விட்டாலும், வாழ்வில் காதலித்த முதல் காதலியை யாரும் மறக்க மாட்டார்கள்.

**மனைவி**

அம்மாவுக்கு அடுத்த படியாக இருக்கும் ஒரு மறுக்க மற்றும் மறக்க முடியாத உறவுமுறை தான் மனைவி. என்ன தான் சண்டை போட்டாலும், ஏதாவது ஒன்று என்றால், அடுத்த நிமிடமே வந்து எதையும் மனதில் கொள்ளாமல், அம்மாவுக்கு அடுத்து அனுசரித்து நடப்பவள் தான் மனைவி. எனவே இத்தகைய மனைவியை உயிர் பிரிந்தாலும், எந்த ஒரு ஆணும் மறக்கமாட்டான்.

**மகள்**

அனைத்து அப்பாக்களின் செல்லப்பிள்ளை, அவர்களது மகள் தான். ஏனெனில் அவர்கள் தங்கள் மகளிடமிருந்தும் நிறைய கற்றுக் கொள்கின்றனர். மேலும் அவர்களிடம், அவர்களது மகளைப் பற்றி சொல்லச் சொன்னால், அனைவரும் சொல்வது 'என் உயிர் தான் என் மகள்' என்பது. இத்தகைய உறவுமுறையைப் பற்றி சொல்லித் தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

# வர்ணம் தீட்டலாம் வாங்க...







# ப இல் பழமொழிகள்

பச்சை மண்ணும் சுட்டமண்ணும் ஒட்டுமா?
பசி வந்திடில் பத்தும் பறந்துபோம்.
பசியுள்ளவன் ருசி அறியான்.
பசுவிலும் ஏழை இல்லை பார்ப்பாரிலும் ஏழையில்லை.
பஞ்சும் நெருப்பும் ஒன்றாய்க் கிடக்குமோ?
பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்.
பட்டா உன்பேரில் சாகுபடி என்பேரில்.
பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப் பாக்கு விலை சொல்லுகின்றாய்.
பட்டும் பட்டாடையும் பெட்டியிலிருக்கும், காற்காசு கந்தையில் ஓடி உலாவும்.
படிக்கிறது திருவாய் மொழி இடிக்கிறது பெருமாள் கோயில்.
படை முகத்திலும் அறிமுகம் வேண்டும்.
படைக்கும் ஒருவன் கொடைக்கும் ஒருவன்.
படையிருந்தால் அரணில்லை

# பாம்பு பற்றிய தகவல்கள்



உலகளவில் 2,968 வகையான பாம்புகள் உள்ளன. இதில்,இந்தியாவில் மட்டும் 276 வகை பாம்புகள்உள்ளன. தமிழகத்தில்உள்ள பாம்பு வகையில் நான்கு மட்டுமே விஷமுள்ளது. மற்றவை விஷமற்றது. அவைகள் நல்லபாம்பு, கட்டுவிரியன், கண்ணாடி விரியன் மற்றும் சுருட்டை விரியன். மனித இனத்திற்கு முன்பே தோன்றியவை பாம்புகள். இவைகள் பெரும்பாலும் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும். ஆனால், கண்ணாடிவிரியன், பச்சை பாம்பு போன்ற சில வகைகள் குட்டி போடும். நல்ல பாம்பு முட்டையிட்டு குட்டிகள் வெளி வரும் வரை பாதுகாக்கிறது. பாம்புகள் சுற்றுப்புறத்தில் உள்ள வாசனைகளை உணரவே நாக்கை அடிக்கடி வெளியில் நீட்டும். பாம்புகளால் ஒலி அலை உணர இயலாது. அதற்கு வெளிக்காது மற்றும் நடுக்காது அமைப்புகள் இல்லை. அதன் உடல் வளர்ச்சி காரணமாகவே அதன் மேற்தோல்களை உரித்துக் கொள்கின்றன.

# நன்றி மறப்பது நன்றன்று



ஒரு நீச்சல் தெரியாத சிறுவன் ஆற்றில் மூழ்கிக்கொண்டிருந்தான். உயிர் பிழைத்தல் பொருட்டு காப்பாத்துங்க. காப்பாத்துங்க.. என்று கத்தினான். ஒரு மனிதாபிமானம் நிறைந்த ஒருத்தர் அந்த ஆற்றில் குதித்து நீரின் ;பிடியில் இருந்து அந்தச் சிறுவனைக் காப்பாற்றினார். அந்தச்சிறுவனும் தனது உயிரைக்காப்பாற்றியவரிடம் 'என்னைக் காப்பாற்றியதற்கு நன்றிகள்', என்றான். அவர் கேட்டார், 'எதற்காகப்பாநன்றிசொல்கிறாய்'.சிறுவன்– 'என்னைக்காப்பாற்றியதற்காகத்தான்'. அவர் அந்தப்பையனின் கண்பார்வையை ஊடுருவிக்கொண்டே மறுமொழிந்தார் 'பையா. நான் உன்னைக் காப்பாற்றினேன் என்பதெல்லாம் இருக்கட்டும். நீ பெரியவனானதும் – உனது வாழ்க்கையை நல்லவிதமாக வாழ்ந்துகாட்டுவதில் மட்டுமே நீ எனக்கு நன்றி தெரிவிக்கவேண்டும். நீ நல்லவிதமான ஒரு சிறந்தகுடிமகனாக வாழ்ந்தால் மட்டுமே – நாலு பேருக்கு உதவி செய்து – ஊரில் நாட்டில் நல்லபெயர் எடுத்து நிரூபிப்பதில் தான் உனது உயிரைக் காப்பாற்றியதன் நன்றியை எனக்குத் தெரிவிக்கவேண்டும்.' 'நான் உன்னை நினைத்து வருந்தும் அளவுக்கு நடந்துகொள்ளச் செய்து விடாதே. ஒரு மோசமானவனைக் காப்பாற்றிவிட்டோமே என்று நான் வருந்தும் நிலைக்கு என்னை ஆளாக்காமல் ஒரு சிறந்தவனைக் காப்பாற்றினோம் என்ற கௌரவத்தை – ஒரு தர்மவானைக் காப்பாற்றினோம் என்ற கர்வத்தை எனக்குக் கொடு' என்றார்

# கையே சுகாதாரமானது



ராமனும்,லட்சுமணனும் நண்பர்கள்.ஒரு முறை அவர்கள் இருவரும் ஒரு நண்பனின் வீட்டுக்குச் சாப்பிடச் சென்றார்கள். ராமன்... உணவை எடுத்து சாப்பிட ஒரு ஸ்பூனும்..ஒரு போர்க்கும் கேட்டான்.லட்சுமணனோ..தன் கையால் உணவை எடுத்து சாப்பிட ஆரம்பித்தான்... உட்னே ராமன் அவனைப் பார்த்து 'ஸ்பூனை உபயோகித்து சாப்பிடு... அதுதான் சுகாதாரமானது...சுத்தமானது..'என்றான். ஆனால் லட்சுமணன் சிரித்துக்கொண்டே...'இல்லை..ராமா..கைதான் சிறந்தது..இது தான் சுகாதாரமானது...ஏனெனில் என் கையை என்னைவிட வேறு எவரும் பயன்படுத்தி இருக்கமுடியாது'என்றான். ராமன் வாய் மூடி மௌனியானான்.

# நிதானம் வெற்றியைத் தரும்

இன்றைய காலகட்டத்தில் எல்லாமே எதற்கெடுத்தாலும் அவசரம் அவசரம் தான். அப்படி அவசரமாக செய்த வேலையின் முடிவு பூஜ்யம் தான். அதற்கு காரணம் என்ன ? சிந்தனையும் செயலும் ஒன்றாக இருந்தால் தான் ஒரு காரியம் வெற்றிபெறும். அவசரப்படும்போது சிந்தனை சிதறுகிறது. உடம்பு படபடக்கின்றது.



உடலும் மனமும் நிலைத்தன்மையை இழந்து விடுகின்றன.அதன் பிரதிபலிப்பு செயலில் காட்டுகின்றது. உணர்ச்சி வேகம் அனைத்தையும் மிஞ்சி வேறு எதையும் சிந்திக்காதபடியும், கேட்காதபடியும் செய்து விடுகின்றது. மூளை வேலை செய்வதில்லை. அப்போதைக்கு சமாளித்தால் போதும் என்கிற உணர்வே மேலோங்கி நிற்கின்றது. ஆய்வு செய்வதற்கோ, திட்டமிடுவதற்கோ, சுமுகமானமுறையில் தீர்ப்பதற்கு ஆயுத்தமாவதற்கோ நேரமில்லாமல் ஏனோ தானோவென்று அரைகுறையாக செயல் நடந்து முடிந்து விடுகின்றது. ஆகவே செயல் செய்வதற்கு முன் திட்டமிடுங்கள், வேலைகளை முறையாக திறமையுள்ளவர்களுக்கு பிரித்துக் கொடுங்கள். செய்த வேலைகளை ஆய்வு செய்து சரியாக செய்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். வேலை செய்பவர்களை தட்டிக்கொடுங்கள். பிறகு நீங்கள் தான் சாதனையாளர்.



# மாற்றத்துக்கு நீங்கள் அடிமையானவர்களா?

இன்றைய கால கட்டத்தில் மாற்றங்கள் என்பது எப்படி புகை பிடித்தலுக்கும்,மது போதைக்கும் அடிமையாவது போல மாற்றங்களுக்கும் அடிமையாகிவிட்டார்கள் என்றே சொல்லலாம். அதையே பெருமையாகவும் பீற்றிக்கொண்டு மற்றவர்களை உசுப்பேற்றி அவர்களையும் அடிமையாக்கும் நிலைமைக்கு தள்ளிக்கொண்டு இருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் மறைமுகமாக நஷ்டமடைந்து தங்களுடைய வாழ்க்கை தரம் குறைந்துகொண்டே போவதை உணரத் தவறுகின்றனர். மாற்றத்தை பலர் தவறாக புரிந்துகொண்டு அதை ஒரு சமூதாய அந்தஸ்து என்று கருதி தங்களை தாங்களே ஏமாற்றிக்கொண்டும், ஏமாந்து கொண்டும் வருகின்றனர். அரசு வங்கிகளும் மற்றும் பல தனியார் வங்கி, நிதி நிறுவனங்கள் போட்டிபோட்டுக்கொண்டு மக்களுக்கு பொருள்களை வாங்குவதற்கு கடன் வழங்கி ஊக்கப்படுத்தியதன் மூலம் அவர்களை தங்களுடைய நிரந்தர அடிமையாக்கிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய மாற்றங்கள் குடும்பத்தில் போட்டி, பொறாமையை வளர்த்து குடும்ப உறவுகளை, நட்புகளை சின்னா பின்னமாக்கிக் கொண்டிருக்கின்றது. கடைசியாக மாற்றம் என்பது உனது வாழ்க்கை தரத்தையும் அந்தஸ்தையும் உயர்த்துவதாக இருக்கவேண்டும். அது கட்டாயம் ஆரோக்கியமானதாகவும், எவருக்கும் கெடுதல் செய்யாமல் நமது உறவுகளை நீடித்திருக்கும் பாலமாக விளங்கவேண்டும்.

# அரச நிறுவனங்களில் இலவச வை-பை வலயம்

கொழும்பு, மே 5

அரசநிறுவனங்களில்இலவசவை–பை வலயங்களை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, இலங்கை தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இலவச வை–பை வலயங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அதன் திட்ட முகாமையாளர் கவாஸ்கர் சுப்பிரமணியம் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள், மற்றும் பஸ் தரிப்பிடங்கள் உள்ளிட்ட மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் தற்போது இலவச வை–பை சேவை நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

அரச திணைக்களங்களில் சேவையை பெற்றுக்கொள்ளும் மக்களும் இந்த இலவச வை–பை சேவையின் ஊடாக மேலும் நன்மையடைவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

# அரசியல் மாற்றத்துக்கு ஐ.தே.கவினரே காரணம்

## அடித்துக் கூறுகிறார் கபீர் ஹாசிம்

கொழும்பு, மே 5

எதிர்க்கட்சியில் உள்ள சிலர் மாற்றான் தாய் பிள்ளைகளுக்குப் பிறப்புச் சான்றிதழ் வழங்க முயற்சிக்கின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்துக்குகு ஐ.தே.கவினரே காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்திற்காகப் பாடுபட்டவர்கள் நாமே ஆனாலும் அதற்கு உரிமைக் கோரச் சிலர் முயற்சிக்கின்றனர். இதற்கு ஒரு போதும் மக்கள் இடமளிக்கக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (த)

# 2016 மே தின நிகழ்வு பிரதமர் மஹிந்தவுடன்

## மகிந்தானந்தவின் ஆரூடம் இது

கொழும்பு, மே 5

2016 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள மே தினத்தைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொண்டாடுவோம் என முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே தினத்தில் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவும், பிரதமராக மகிந்த ராஜபக்ஷவும் காணப்படும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசின் கீழ் கொண்டாடுவோம் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்த ஐக்கிய தேசியக் கட்சி தற்போது மே தினக் கூட்டத்தை நடத்தி, தொழிலாளர்களின் உரிமைகள் குறித்து பேசுவது நகைப்பை ஏற்படுத்துகின்றது என அவர் மேலும் கூறினார். (த)

# கோத்தபாயவுக்கு இதுவரை வழங்கப்படாத ஓய்வூதியம்

கொழும்பு, மே 5

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரச சேவையில் ஈடுப்பட்டிருந்த போது அவரது ஓய்வூதிய கடிதம் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கடிதம் ஜனாதிபதி செயலகத்தினால் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கு வழங்கப்பட வேண்டியிருந்தது.


இந்தக் கடிதத்தில் கையெழுத்திட வேண்டிய செயலாளர் அதனைக் கையெழுத்திடாமல் காலம் தாழ்த்தி வந்ததன் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறித்த செயலாளருக்குத் தனிப்பட்ட முறையில் தீர்மானம் எடுக்க முடியாமையின் காரணமாக அவர் கையெழுத்திடுவதைத் தவிர்த்து வந்தார் என அவரது கீழ்மட்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்கு ஓய்வூதியக் கடிதம் கிடைக்கப்பெறாமையின் காரணமாக அவருக்கு கிடைக்க வேண்டிய ஓய்வூதியம், சுங்கத்தீர்வை மூலம் வாகன இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த கடிதத்தில் கையெழுத்திட வேண்டிய செயலாளர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருக்குக் கீழ்ப்படிந்து செயலாற்றி வந்துள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. (த)

# மஹிந்தவை நிராகரித்தாரா ஜோன் கெரி?



கொழும்பு, மே 5

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியை சந்திக்க எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மஹிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கான அமெரிக்கத்தூதரகத்தின்ஊடாக இந்த முயற்சியை எடுத்திருந்தார் எனவும் கூறப்படுகிறது.

எனினும், மஹிந்த, ஜோன் கெரியை அணுகுவதற்கு முயற்சிக்கவில்லை என்றும், இதற்காக அமெரிக்கத் தூதரகத்திடம் கோரிக்கை விடுக்கவில்லை எனவும் அறியமுடிகிறது.

ஜோன் கெரியுடன் சந்திப்பொன்றை நடத்த நேரம் ஒதுக்கித்தருமாறு மஹிந்த பல தடவைகள் தூதரக அதிகாரிகளிடம் கோரியுள்ளார் என்றும்,

ஜோன் கெரியின் இலங்கை விஜயம் தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது முதல் மஹிந்த இந்த முயற்சிகளை எடுத்திருந்தார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# ஜோன்ஸ்டனிடம் இன்று விசாரணை

கொழும்பு, மே 5

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவினர் இன்று விசாரணை நடத்த உள்ளனர்.

கடந்த காலங்களில் சதொச நிறுவனத்திடமிருந்து ஐந்து மில்லியன் ரூபா பெறுமதியான பொருள்களைப் பெற்றுக்கொண்டு அதற்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட உள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் வாக்கு மூலமொன்றைப் பெற்றுக்கொள்ள இன்று நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதமராக்க வேண்டுமென கோரி 8ஆம் திகதி குருணாகலில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு தடை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறு விசாரணை நடத்தப்படுவதாக மஹிந்த தரப்பினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

குருணாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர் ஒருவர் இந்த சூழ்ச்சித் திட்டத்தின் பின்னணியில் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ இந்த வாரத்தில் கைது செய்யப்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (த)

# பேரணிக்குச் செல்வதா? நீதிமன்றுக்கு செல்வதா?

## குழப்பத்தில் கம்மன்பில



கொழும்பு, மே 5

குருநாகலில் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள்ள மஹிந்தவுக்கு ஆதரவான பேரணியில் பிவித்துரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில கலந்துகொள்வது சந்தேகம் எனக் கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாய் நாடு ஆபத்தில் மகிந்தவுடன் நாட்டை வெற்றிகொள்வோம் என்ற தலைப்பில் எதிர்வரும் 8ஆம் திகதி குருநாகல் மாவட்டத்தில் மக்கள் பேரணியொன்று இடம்பெறவுள்ளது.

குருநாகலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியின் 4 பங்காளி கட்சிகளும் இணைந்து நடத்தவுள்ள இந்த பேரணியில் 50 ற்கும் அதிகமான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என உதய கம்மன்பில தெரிவித்திருந்தார்.

எனினும் கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது மாற்றம் செய்யப்பட்ட தேசியக் கொடியை ஏந்தியிருந்த குற்றச்சாட்டின் பேரில் உதய கம்மன்பில உள்ளிட்ட 9 பேரை எதிர்வரும் 8ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் அவர் குறித்த பேரணியில் கலந்துகொள்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

**காணி விற்பனைக்கு**

15 பரப்புக் காணி அல்லைப்பிட்டியில் விற்பனைக்கு உண்டு. பண்ணை போடுவதற்கும், வசிப்பதற்கும் உகந்த நல்லதண்ணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 835 0478, 077 670 4364

**தவறிவிட்டது**

வரதராஜன் ஞானேஸ் ஆகிய எனது 911415542 V இலக்கமுடைய தே.அ. அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், யோகராசா அருள்பிரதீப் என்பருடைய 842844096 V தே.அ.அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் கொக்குவிலுக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

075 2277404

**வேலைவாய்ப்பு**

V.R Advertising கம்பனியில் வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. O/L,A/L தகைமை உள்ள ஆண், பெண் இருபாலாரும் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு: 0776763334, 0759273523

Pointpedro Road, Nelliady

**ஏல விற்பனை**

கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பழைய தீராந்திகள், மரங்கள் என்பன 09.05.2015 சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

புனருத்தாரண சபை,
ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்- கொல்லங்கலட்டி.

**கவிஞர்களுக்கு ஒரு நற்செய்தி**

நல்லதொரு குடும்பம் என்ற தூரநோக்கில் வெளிவரும் ஒளி அரசி குடும்ப சஞ்சிகையானது இம்மாதம் தொடக்கம் "சிறப்புக் கவிஞர்" எனும் பக்கத்தை அறிமுகப்படுத்தி வளர்ந்து வரும் புதுமுக கவிஞர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்தி கௌரவித்து வருகின்றது. (சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன) நீங்களும் இந்த சிறப்புக் கவிஞர் என்ற பக்கத்தெரிவிற்குள் பங்குபற்ற விரும்பினால் நீங்கள் எழுதி வெளியிட்ட ஒரு கவிதைப் புத்தகத்தையும் சமூக நலன் சார்ந்த இரு கவிதைகளையும் (ஒளி அரசிக்கென 12 வரிகளுக்கு மேற்படாமல் தனித்துவமாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்) ஒளி அரசி தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பவும். மேலதிக தகவல்களை அறியவிரும்புவோர் 2015 மே மாத ஒளி அரசியை வாங்கி அறிந்து கொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு : ஆசிரியர் ஒளி அரசி
071 427 3035, 011 573 8855

# பிள்ளையானால் எனக்கு களங்கம்

## அமீர் அலி சாடல்

அண்மைக்காலமாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எனது பெயருக்குக் களங்கம் ஏற்படக்கூடிய வகையில் கருத்துவெளியிடுகின்றார் என சமூர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.

கனவு காண்பதற்கு அல்ல வழியைக் காட்டுவதற்கு எனும் இளைஞர் அபிவிருத்தி அமைப்பின் வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய ரீதியில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் கல்குடாத் தொகுதிக்கான நிகழ்வு வாழைச்சேனையில் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அண்மையில் பத்திரிகைச் செய்தி ஒன்றில் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஆலோசனை சொல்கின்ற விடயத்தினையும், அதற்குப் பின்னால் என்னைப்பற்றி குறை கூறுவதையும் கண்டேன். ஏன் அவர் எனக்கு எதிராக சேறு பூசுகின்றார் என தெரியவில்லை. பிழையாக துவேச ரீதியாக கருத்துக்களை வெளியிட்டு சமூகங்களை பிளவுபடுத்த வேண்டாம் என்று தமிழ் அரசியல் தலைவர்களிடம் நான் விநயமாக கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். அரசியல் என்பது எல்லோராலும் செய்யக்கூடிய விடயமல்ல, அந்தந்த பிரதேசத்தில், யார் யார் எல்லாம் மக்களின் மனதை வென்று இருக்கின்றார்களோ அவர்கள் அங்கு நிச்சயம் அந்த மக்களால் மதிக்கப்படுவார்கள்.–என்றார். (த)

# 20, திருத்தம் நிறைவேறினாலும் பழைய முறையிலேயே தேர்தல்

## ஐ.தே.க திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, மே 5

"நாட்டில் மாற்றமொன்றை ஏற்படுத்திய சகல கட்சிகளும் பொதுத் தேர்தலை விரைந்து நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளன. இந்த நிலையில், 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிய பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்படும். எனினும், பழைய தேர்தல் முறைமையிலேயே அத்தேர்தல் நடத்தப்படும்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும், நெடுஞ்சாலைகள், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமான கபீர் ஹாஷிம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

சிறுபான்மை மக்களின் ஆதரவு பலம்கொண்ட கட்சியே ஐ.தே.க. என்று சிலர் கூறுகின்றனர். எமக்குப் பெரும்பான்மை பலமும் இருக்கின்றது என்பதற்கு அண்மையில் இடம்பெற்ற ஐ.தே.க. மே தினக் கூட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகும். 100 நாள் வேலைத்திட்டம் முடிவுற்றதும் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு அரசு தீர்மானித்திருந்தது. எனினும், 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதத்தால் அது கைகூடவில்லை. இல்லையெனில் கடந்த 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கும்.

புதிய தேர்தல் முறைமையில் தேர்தலை நடத்துவதில் கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள், எல்லை நிர்ணயம் உட்பட தேர்தல் பொறிமுறை தயாரிப்பதில் சிக்கல் நிலை காணப்படுவதால் பழைய முறைமையிலேயே தேர்தல் நடத்தப்படுவதற்கான வாய்ப்புள்ளது.

மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளித்த அரசு உடனடியாக தேர்தலை நடத்தவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. மக்களால் நிராகரிக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட தலைவரால் உருவாக்கப்பட்ட இந்த அரசை கலைத்துவிட்டு மீண்டுமொரு மக்கள் ஆணையின் மூலம் புதிய நாடாளுமன்றம் உருவாக்கப்படவேண்டும்.

அவ்வாறே, தேர்தல் முறைமையை மாற்றுவோம் என்ற வாக்குறுதியையும் நாங்கள் மக்களிடம் முன்வைத்திருந்தோம். சகல கட்சிகளினதும் ஆதரவுடனேயே புதிய தேர்தல் முறைமையை கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதனடிப்படையிலேயே 20ஆவது திருத்தமாக புதிய தேர்தல் திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்படவுள்ளது.

எனினும், சகல கட்சிகளும் ஏதேனும் ஒரு முறைமையிலேயே தேர்தலை நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டதால் பழைய தேர்தல் முறைமையிலேயே நடத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், 20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு எதிர்காலத்தில் புதிய தேர்தல் முறைமையின் மூலம் தேர்தல் நடத்தப்படலாம்.

அடுத்தவாரமளவில் 20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படவுள்ளது. ஆனால், புதிய தேர்தல் முறைமையில் தேர்தலை நடத்துவதில் பல்வேறு சிக்கல்கள் நிலவுகின்றன. கட்சிகளிடையே பல்வேறு கருத்துகள் காணப்படுகின்றன. எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது. அவ்வாறே, புதிய தேர்தல் பொறி முறையை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. இந்நிலையில், புதிய தேர்தல் முறைமையில் தேர்தலை நடத்துவதில் சிக்கல் தோன்றுவதனால், பழைய தேர்தல் முறைமையிலேயே தேர்தல் நடத்தப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சி உட்பட இந்நாட்டில் மாற்றமொன்றை ஏற்படுத்திய சகல கட்சிகளும் தேர்தல் நடத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளன. குறிப்பாக, ஜனாதிபதி சிறிசேன மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் ஆர்வமாகவுள்ளனர்" எனத் தெரிவித்தார்.

## எனது அடுத்தகட்ட நடவடிக்கை அனைவருக்கும் அதிர்ச்சி தரும்

*சொல்கிறார் சோமவன்ஸ*

கொழும்பு, மே 5

பத்தரமுல்லை சீலரத்ன தேரரின் கட்சியான ஜனசெத பெரமுனயில் தாம் இணைந்துகொள்ளவுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகளை ஜே.வி.பியின் முன்னாள் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நேற்று நிராகரித்துள்ளார்.

சோமவன்ஸ அமரசிங்கவுக்கும் ஜனசெத முன்னணியின் செயலாளர் பத்தரமுல்லை சீலரத்ன தேரருக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது என்றும், இதன்போது எதிர்கால அரசியல் நிலவரங்கள் குறித்து பேச்சு நடத்தப்பட்டது என்றும் ஜனசெத முன்னணியின் தலைவர் திம்பிரிவெவே சீலரத்ன தேரர் ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஜே.வி.பியிலிருந்து விலகிய சோமவன்ஸ தனித்துக் கட்சி ஆரம்பிக்க முடியாதநிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுவரும் அதே வேளை, அண்மையில் சுதந்திர சதுக்கத்தில் அவர் முன்னெடுத்திருந்த உண்ணாவிரதப் போராட்டம் அரசியல் வங்குரோத்து நிலைமையை எடுத்துக்காட்டுவதாக அரசியல் மட்டத்தில் பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், அவர் ஜனசெத முன்னணியில் இணைந்து எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் அவரைத் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"எனக்கும் சீலரத்ன தேரருக்கும் இடையில் பேச்சு இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கருத்தானது உண்மைக்குப் புறம்பானது. எனது அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க சிலர் திட்டம் தீட்டுகின்றனர். எனினும், அது கைகூடப் போவதில்லை.

அவருடன் எனக்குப் பேச்சு நடத்த வேண்டியஎந்தஅவசியமும்இல்லை. எனது அண்மைக்கால அதிரடி அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் சீலரத்ன தேரர் என்னைப் பாராட்டியிருந்தார். இதற்கு நான் நன்றி தெரிவித்திருந்தேன். இதனை வைத்துக்கொண்டு அவரே ஒரு கதையை கற்பனை செய்துள்ளார் என்றே எண்ணத் தோன்றுகின்றது. எனது அடுத்தகட்ட அரசியல் நடவடிக்கைகள் அனைவருக்கும் அதிர்ச்சியைத் தரும்" ? என்றார்.

## மனித உரிமையாளர்கள் மீதான தாக்குதலை விசாரிக்கவேண்டும்

*ஊடகவியலாளர் சம்மேளனம் கோரிக்கை*

கொழும்பு, மே 5

கடந்த மேதினத்தின் போது இலங்கையின் மனித உரிமைகள் நடவடிக்கையாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து துரித விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த சம்பவத்தின் போது பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதி ரஞ்சித் தேவஸ்ரீ மற்றும் கலாநிதி குமுது குசும்குமார ஆகியோர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களால் கிருலப்பனையில் வைத்துத் தாக்கப்பட்டனர்.

குறித்த இருவருமே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோல்வியடைவதற்குக் காரணம் என்று குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தநிலையில் சம்பவத்தின் பின்னர் பொலிஸார் குறித்த இருவருக்கும் உரிய பாதுகாப்பை வழங்கினர். எனினும் அவர்கள் உடனடியாகத் தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்யவில்லை என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. (த)

## சர்ச்சைக்குரிய பௌத்த கொடி: வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 5

உரிய தர நிர்ணயங்களுக்கு உட்படாத சுமார் 85 ஆயிரம் பௌத்த கொடிகளை நுகர்வோர் அதிகார சபையினர் கைப்பற்றியுள்ளனர்.

திரிபுபடுத்தப்பட்ட பௌத்தகொடிகள் நாடளாவிய ரீதியில் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் நுகர்வோர் அதிகார சபையின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இவை மீட்கப்பட்டுள்ளன.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு இந்த பௌத்த கொடிகள் விற்பனைக்குத் தயாராக இருந்த நிலையிலேயே இவை கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீலம், மஞ்சள், சிவப்பு, வெள்ளை மற்றும் செம்மஞ்சள் ஆகிய நிறங்களை உள்ளடக்கிய தரமான பௌத்த கொடிகளுக்கு பதிலாக வேறு நிறங்களை உள்ளடக்கியும் வாசகங்களை பொறித்தும், தர்மச் சக்கரம் உள்ளிட்ட சின்னங்களைப் பதித்தும் வெவ்வேறான பௌத்த கொடிகள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் அதிகார சபை குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்வாறு திரிபுபட்ட பௌத்த கொடிகளை விற்பனை செய்த நபர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அதிகார சபை எச்சரித்துள்ளது.

இதேவேளை தம்மிடம் வரும் நுகர்வோர் தர்மச் சக்கரம் பதித்த பௌத்த கொடிகளையும் அல்லது வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட கொடிகளையுமே வேண்டுமென கேட்பதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்தை பார்க்கும்போது பொதுமக்களுக்கு பௌத்த கொடி தொடர்பாக போதிய தெளிவு இல்லை என்பது புலப்படுகின்றது.

எனவே உரிய தரத்தை கொண்ட பௌத்த கொடிகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுப்படுத்த பௌத்த அமைப்புக்கள் முன்வர வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். (த)

## தில்ருக்ஸிக்கு எதிராக 12 குற்றச்சாட்டுக்கள்

கொழும்பு, மே 5

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஸி டயஸ் விக்ரமசிங்கவுக்கு எதிராக 12 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பணிப்பாளருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் . பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் 105 நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்தத் தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளனர் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுப் பணிப்பாளர் நாட்டின் அரசமைப்புக்கு முரணான வகையில் செயற்பட்டுள்ளார் எனத் தெரிவித்தே அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது.

அதாவது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆணைக் குழுவின் முன்னிலையில் முன்னிலையாகுமாறு தெரிவிக்கப்பட்டமை அரசமைப்பிற்கு முரணானது என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்லாது பணிப்பாளர் நாயகத்தின் பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும் குற்றம் சுமத்தி இத்தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த)

## குருநாகல் கூட்டத்தில் சு.கவின் 50 எம்.பிக்கள்

கொழும்பு, மே 5

மஹிந்தவுக்கு ஆதரவாக குருநாகலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டத்தில் தான் கலந்துகொள்ளலாமா என்றும் தனக் குப் பதிலாக தனது கட்சி உறுப்பினர் ஒருவர் கலந்துகொள்ளவுள்ளதாகவும் புதிய ஹெல உறுமயவின் தலைவரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

இதேவேளை, 8ஆம் திகதி இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் மஹிந்தவுக்கு ஆதரவாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 50 நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்கள் சிலரும் கலந்துகொள்ளவுள்ளனர் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி நீதிமன்ற உத்தரவையும் மீறி கொழும்பு இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு முன்னால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, உதய கம்மன்பில உள்ளிட்ட பலர் ஏந்தியிருந்த தேசிய கொடி சட்டத்துக்கு முரணானது என்ற சர்ச்சைக் கிளம்பியது.

இதனால் எதிர்வரும் 8ஆம் திகதி உதய கம்மன்பில, டலஸ் உள்ளிட்ட 9 பேருக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

"இதனால் தாய்நாடு ஆபத்தில் - மஹிந்தவுடன் நாட்டை வெற்றிக் கொள்வோம்" என்ற தலைப்பில் எதிர்வரும் 8ஆம் திகதி குருநாகலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டத்தில் கம்மன் பில கலந்துகொள்ளப்போவதில்லை என்று தெரிவித்ததுடன், தனக்குப் பதிலாக தனது கட்சி உறுப்பினர் ஒருவர் இதன்போது கலந்துகொண்டு உரையாற்றுவார் எனவும் தெரிவித்தார்.

வாசுதேவ, தினேஷ் குண வர்தன, விமல் வீரவன்ஸ மற்றும் கம்மன் பில ஆகியோர் மஹிந்தவைமீண்டும் அரசியலுக்கு கொண்டுவருவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். நுகேகொடை, கண்டி, இரத்தினபுரி ஆகிய இடங்களில் ஏற்கனவே கூட்டங்கள் வெற்றிகரமாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கொல்கத்தாவின் கோட்டைக்குள் ஹைதராபாத் சரண்



உத்தப்பா, கம்பீர், பாண்டே, யூசுப் பதான் ஆகியோரின் துடுப்பாட்டப் பலமும் யாதவ், ஹொக், சாவ்லா ஆகியோரின் சுழலும் கைகொடுக்க 35 ஓட்டங்களால் ஹைதராபாத்தை வீழ்த்தியது கொல்கத்தா.

கொல்கத்தா எதிர் ஹைதராபாத் அணிகளுக்கிடையிலான ஆட்டம். இரண்டுமே சமபலமுள்ள அணிகள். கொல்கத்தா சார்பாக உத்தப்பா அதிரடி காட்டிக்கொண்டிருக்கிறார். ஹைதராபாத் சார்பாக வோர்ணர் வெளுத்து வாங்கிக்கொண்டு இருக்கிறார்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் கொல்கத்தாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்க களத்தில் கம்பீருடன் உத்தப்பா. வழக்கம் போல் கொல்கத்தாவின் ஆரம்பம் அமர்க்களமாகவே அமைந்தது. இருவரும் இணைப்பாட்டமாக பிரித்து மேய்ந்தனர். ஸ்ரெயினின் பந்து வீச்சையும் விட்டுவைக்க வில்லை. ஐந்தே பந்துப்பரிமாற்றத்தில் அணி அரைச்சதத்தைக் கடந்தது. கம்பீரின் இன்னிங்ஸ் 31 ஓட்டங்களுடன் நிறைவுக்குவர கொல்கத்தா 57–1. பாண்டேயும் விட்டுவிடவில்லை. உத்தப்பாவுடன் இணைந்து கொல்கத்தாவை கரைசேர்க்கும் முயற்சியில் தீவிரம் காட்டினார். கொல்கத்தாவின் இன்னிங்ஸில் முதல் சிக்சர் பாண்டேயால் விளாசப்பட்டது. பத்தே பந்துப் பரிமாற்றங்களில் 80 ஓட்டங்களை எட்டிப்பிடித்தது கொல்கத்தா. பதினோராவது பந்துப்பரிமாற்றத்தில் பவிலியன் திரும்பினார் உத்தப்பா. மேலுமொரு சிக்சரை விளாசிவிட்டு விடைபெற்றார் பாண்டே. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரசல் ஒரு ஓட்டத்தை மட்டுமே பெற்றார். போத்தா வந்த வேகத்தில் புவனேஸ்குமாரின் பந்தில் சிக்சரை விளாசினார். அடுத்த பந்தில் போல்ட்டாக்கி பழிதீர்த்தார் புவனேஸ்குமார். யூசுப் பதான் ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் வருவதும் செல்வதுமே ஏனைய வீரர்களின் பணியாக இருந்தது. முடிவில் கொல்கத்தா 167–7.

யாதவ், ரசல், போத்தா இவ் வாறான பந்து வீச்சாளர்களைச்சமாளித்து 168 ஓட்டங்களைப் பெறவேண்டும். ஹைதராபாத்தில் இந்த இலக்கை எட்டக்கூடிய வீரர்கள் இல்லாமல் இல்லை. களத்தில் தவானுடன் வோர்ணர். யாதவ்வின் முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே வோர்ணரின் இலக்கு தூக்கி வீசப்பட்டது. அதே பந்துப்பரிமாற்றத்தில் ஓஜாவும் டக்கில் போல்ட் முறையில் பவிலி யன் திரும்ப ஹைதராபாத் 6–2. தவானாலும் கொல்கத்தாவை அசைத்துப்பார்க்க முடியவில்லை. பதின்மத்துடன் ஆட்டமிழந்தார். ஹன்றிங்கியூஸ் நிதானம் காட்டினா லும் இணைப்பாட்டம் வழங்குவதற்கு எந்த வீரர்களாலும் முடிய வில்லை. மோர்கன், விகாரி, விபுல் சர்மா மூவரும் கவனமற்ற முறை யில் ரன்அவுட் ஆக ஹைதரா பாத் 69–6. போத்தாவின் பந்தில் கரண் சர்மா தொடர்ச்சியாக மூன்று சிக்சர்களை விளாசித்தள்ளினார் ஆனால் எந்தப்போராட்டமும் கொல்கத்தாவிடம் எடுபட வில்லை. முடிவில் ஹைதராபாத் ஒன்பது இலக்குகள் இழப்புக்கு132 ஓட்டங்களைப் பெற்று 35 ஓட்டங்களால் தோல்விய டைந்தது.

(ரி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



உதிப்பு 04.8.1928 | உதிர்வு : 05.04.2015

### திருமதி ஆச்சிப்பிள்ளை கந்தையா

( ஓய்வுநிலை ஆசிரியை )

கடந்த 05.04. 2015 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு பல்வேறு வகைகளில் உதவிகளை இன்று வரை மேற்கொள்ளும் அன்பு உள்ளங்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்கள் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு உறவுகளுக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் மலர் வளையங்கள் மூலம் தமது அஞ்சலியைச் செலுத்திய அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05.05.2015) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றுவதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்)

கலாநிதி பவனம் | தகவல்:
சாவகச்சேரி வடக்கு, | திரு திருமதி ந. ஜெயகுமாரன் குடும்பம்
சாவகச்சேரி. | திரு திருமதி நிர்மலன் குடும்பம் ( சுவிஸ் )

## மரண அறிவித்தல்கள்

### பாலசுப்பிரமணியம் தவமணி



தன்னை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் கலட்டி அம்மன் கோயில் வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் தவமணி நேற்று (04.05.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.58, கலட்டி அம்மன் கோயில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்: கணவன் (M.M.B) T.P: 021 222 1971

### தியாகராஜா சசிக்குமார்



உரிமையாளர் ராஜா ஸ்ரோர்ஸ்

வண்ணார்ப்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா சசிக்குமார் நேற்று முன்தினம் (03.05.2015) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் தியாகராஜா புஸ்பராணி தம்பதியரின் அன்பு மகனும், சவிதாவின் (பிரதேச செயலகம் - நல்லூர்) அன்புக் கணவரும், மதனமோகன், பிரதீபன் (கனடா), சுஜாத்தா, சியாமளா, ஜெயரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதர்சினி, பிரசாந்தினி, கரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், டிசன், ஜனுசியன் ஆகியோரின் பெரிய தந்தையும், கனகரட்ணம்-கனகம்பிகை தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2015) செவ்வாய்க் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 4210080

தகவல்: குடும்பத்தினர்.

### திரவியபாக்கியம் துரைராசா



உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரவியபாக்கியம் துரைராசா 02.05.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதி-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சபாபதி துரைராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், கனகராசா, தம்பிராசா ஆகியோரின் சகோதரியும், புவனேந்திரராணி, நீலாம்பாள் (பிரான்ஸ்), தருமகுலசிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சண்முகராசா, இராமச்சந்திரன் (பிரான்ஸ்), யோகானந்தி (லண்டன்) ஆகியோரின் மாமியும், தயாபரன் (பிரான்ஸ்), லபிதா, சந்திரினி (பிரான்ஸ்), தன்ஜா (லண்டன்), தர்ஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2015) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் மாரியப்புலம் தாவடி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர். 0779214046

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் வரதராசா



விளானை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் வரதராசா 03.05.2015 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை சோமசுந்தரம் மற்றும் வாலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சோதிமலரின் (சோதி) அன்புக் கணவரும், ரம்மியா, லாவண்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மாவதி, பிரபாநந்தினி, மோகனராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 077 8857734 (தாய்)

தகவல்: குடும்பத்தினர்(U.K).

### ஆறுமுகம் சோமசுந்தரம்



சின்னத்தம்பி புலவர் வீதி, இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சோமசுந்தரம் நேற்று (04.05. 2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-திரவியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், சுந்தரலிங்கம் (கனடா), விநாயகமூர்த்தி (சுவிஸ்), விக்கினேஸ்வரமூர்த்தி (விதுசன் அழகு மாடம்-சுன்னாகம்), காலஞ்சென்ற கிருபாகரமூர்த்தி மற்றும் சந்திரகுமார் (U.S.A), வசந்தாதேவி (டென்மார்க்), வசுமதி, சிவமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரபாசத்தி (கனடா), கலையரசி (சொக்கம்மா,சுவிஸ்), சாந்தலக்சுமி (சாந்தி), சுரேஷ்குமார் (டென்மார்க்), சோமஸ்கந்தமூர்த்தி (மூர்த்தி) தர்மசீலன் (சிறி) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி, நடராசா, செல்லையா, கனகம்மா, சிவகாமிப்பிள்ளை, ராசம்மா மற்றும் பொன்னம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகாதேவன், தேவராஜா, ராசலட்சுமி, ராஜேஸ்வரி, செல்லம்மா (இராசாத்தி), மனோன் மற்றும் அன்னலிங்கம், நாகரத்தினம் (ராசு), பூமணிதேவி, பகவதி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், பிரணவன் (கனடா), சுமங்கலி (கனடா), வைஸ்ணவி (கனடா), விதுசன் (சுவிஸ்), தமிழினி (சுவிஸ்), சந்தோஷ், சதுஷன், கவிந்தன் (டென்மார்க்), பாவனா (டென்மார்க்), ஜனார்த்தனன், ரவிதன், பகீரதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர்கள், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு.

தகவல்: மகன் விக்கினேஸ்வரமூர்த்தி (விதுசன் அழகு மாடம்) 021 7900607

## பஸ் மீது கல் வீச்சு

முள்ளியவளை, மே 05

முல்லைத்தீவு – அம்பாறை சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ் மீது முள்ளியவளை ஆலடிச்சந்திக்கு அண்மையில் வைத்துக் கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இனந்தெரியாத நபர்களினால் இந்தக் கல் வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பஸ்ஸின் முன்பக்க கண்ணாடி ஒன்று முற்றாக உடைந்து சேதமாகியுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு இரவு ரோந்துப் பணியிலும் ஈடுபட்டதைக் காணமுடிந்தது.

(த–433)

## இலங்கையருக்கு டோகாவில் சிறை

டோகா, மே 5

கவனக் குறைவாக காரை ஓட்டிச் சென்று ஒருவர் உயிரிழக்கவும் சிலர் காயமடையவும் காரணமான இலங்கையர் ஒருவருக்கு டோகா குற்றவியல் நீதிமன்றம் ஆறு மாதச் சிறைத் தண்டனையை விதித்துள்ளது.

இவ்விபத்தில் வளைகுடா இணை ஒப்பந்த குடியுரிமையாளர் ஒருவர் உயிரிழந்ததுடன் சிலர் காயமடைந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய இலங்கை நபருக்கு ஆறு மாத சிறைத் தண்டனையை விதித்துள்ள நீதிமன்றம், மூன்று மாதங்களுக்குச் சாரதி அனுமதிப்பத்திரத்தை நிறுத்தி வைத்துள்ளது.

அத்துடன் காப்புறுதி நிறுவனத்துடன் இணைந்து கொல்லப்பட்ட நபருக்கு இழப்பீடாக 2 லட்சம் கட்டார் ரியால்களை வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி விபத்து சல்வா என்ற வீதியில் நடந்துள்ளது. தண்டனை விதிக்கப்பட்டுள்ள நபர் ஓட்டிச் சென்ற காரின் சில்லு ஒன்று சேதமடைந்துள்ளது. இதனால், வாகனத்தை ஓட்டிச் சென்றவர் அதனை கட்டுப்படுத்த முடியாமல், வீதியில் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றின் மீது மோதியுள்ளார்.

மோதுண்ட கார் பல முறை புரண்டு விழுந்ததால், அதில் இருந்த நபர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபருக்குச் சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை எனக் கூறப்படுகிறது. (த)

## சிப்பாய் கொலை; நான்கு பேர் கைது

கொழும்பு, மே 5

ஹொரணை, தம்பர கொஸ்வத்த என்ற பிரதேசத்தில் வயிற்றில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு முன்னாள் இராணுவச் சிப்பாயைக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

34 வயதான முன்னாள் இராணுவச் சிப்பாயைக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் இருவரும், அதற்கு உதவியதாகக் கூறப்படும் மேலும் இரண்டு பேரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் வைத்தியசாலையில் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட இருவரும், இவர்களுக்கு மறைந்திருக்க தங்குமிடத்தை வழங்கிய குற்றச்சாட்டில் ஏனைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை ஹொரணை பிரதேசத்தில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கொலைக்கு பயன்படுத்திய துப்பாக்கியைக் கைப்பற்றியுள்ள பொலிஸார், அதனை மறைத்து வைக்க உதவியதாகக் கூறப்படும் [illegible] ஊழியரையும் கைது செய்துள்ளனர். (த)

# தனியார் நடத்தும் வைத்தியசாலைகளுக்கு வருகிறது புதிய சட்டம்

### வர்த்தமானி அறிவித்தல் விரைவில்

கொழும்பு, மே 05

தனியார் வைத்தியசாலைகளுக்கு வருகின்ற நோயாளிகளுக்கு வழங்கும் மருந்துகள் மற்றும் பயன்படுத்தும் வைத்திய உபகரணங்களின் விலைகளைக் குறிப்பிட்டுக் கட்டணப் பட்டியல் விநியோகிக்கப்பட வேண்டும் என்று நுகர்வோர் அதிகார சபை, தனியார் வைத்திய நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளது.

சில தனியார் வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு வழங்குகின்ற கட்டணப் பட்டியலில் மருந்து மற்றும் வைத்திய உபகரணங்களின் விலைகள் உண்மையான விலைகளை விடவும் கூடுதலான விலைகள் குறிப்பிடப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அவற்றைக் கவனத்தில் கொண்டே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டது என்று நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் ஜே.ஏ. எச்.எம். டக்ளஸ் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் கட்டணப் பட்டியலில் நோயாளர்களுக்கு வழங்கும் சகல வசதிகளும் குறிப்பிடப்பட் ருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள அதிகார சபை, இது தொடர் பிலான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் என்றும் அறிவித்துள்ளது.

## ராணுவ விடுதியில் மது விற்பனையா?

### ஆராய ராணுவத் தளபதி உத்தரவு

கொழும்பு, மே 05


வாதுவையில் உள்ள இராணுவ விடுதியில் மதுபானம் விற்பனை செய்யப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச் சாட்டு தொடர்பாக விசாரணை செய்யுமாறு இராணுவ பொலிஸாருக்கு இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா பணிப்புரை விடுத்துள்ளார்.

விசாரணையின்போது சட்ட விரோத செயல் நடைபெற்றிருப்பது தெரியவரின் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுக் கொடுக்குமாறும் இராணுவத் தளபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

(த)

# மஹிந்தவுக்கு உயிராபத்தாம்

கொழும்பு, மே 05



தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதியை மேற்கோள்காட்டி முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

நாடு பிளவுபட்டுவிடாமல் போரை நிறைவு செய்து வலுவான அரசை அமைத்து ஆட்சி செய்த போதிலும் இதற்கு முன் எந்தவொரு ஜனாதிபதியும் சந்திக்காத வகையில் முன்னாள் ஜனாதிபதியும், அவரது குடும்பத்தினரும் அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளாகி வருவதாக பந்துல குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் இதற்கு முன்னர் ஒருபோதும் இதுமாதிரியான அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் சகல உரிமைகளையும் பறித்து கொண்டு அவரைக் கட்சியிலிருந்தும் ஒதுக்கியிருந்ததாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குற்றம் சுமத்தியிருந்தார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதியொருவருக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து சலுகைகளும், பாதுகாப்பும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங் கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

(த)

## அவன்காட் நிறுவனத்தின் ஐவர் விரைவில் கைதாவர்

கொழும்பு, மே 05

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட ஐவரை உடனடியாகக் கைது செய்வதற்கான அறிவித்தல் சட்டமா அதிபரினால் குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு எதிர்வரும் நாள்களில் வழங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குற்றப்புலனாய்வுப் பிரிவுத் திணைக்களத்தில் அவன்கார்ட் தொடர்பாக இதுவரை 5 விசாரணைகள் இடம்பெற்றுள்ளதாகவும் விசாரணைகளின் ஆவணக் கோவைகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவன்கார்ட் நிறுவனத்தில் இடம்பெற்ற முறைகேடுகளுடன் தொடர்புடைய ஐவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஷங்க சேனாதிபதி, நிறுவன இயக்குனர் மஞ்சுல குமார, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ரக்ன லங்கா நிறுவனத்தின் இயக்குனர் பாலித்த பெர்ணான்டோ, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் டீ.எம்.எஸ்.ஜயரத்ன ஆகியோரே அடையாளம் காணப்பட்டுள்ளார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஐவரையும் கைது செய்வதற்கான பரிந்துரை சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை அவர்கள் கைது செய்யப்படாமையினால் அரச உயர் மட்ட அதிகாரிகள் இது தொடர்பில் வெகுவாகக் கவனம் செலுத்தி வருகின்றனர்.

இதேவேளை, இந்நபர்கள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு மேலதிகமாக வெடி மருந்து பொருள்களை வைத்திருந்தமைக்கு எதிராகக் கைது செய்யப்படலாம் என சட்டவல்லுநர்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது. (த)

# சு.க தீர்மானித்தால் பதவி விலகத் தயார்

### சொல்கிறார் சமரசிங்க

கொழும்பு, மே 5



அமைச்சுப் பதவிகளை கைவிடுவது என சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்தால், அமைச்சுப் பதவியைக் கைவிட தான் தயாராக இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளதாக அவரை மேற்கோள்காட்டி கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் இதுதொடர்பாக தனது நெருங்கிய நண்பரொருவருடன் கலந்துரையாடியுள்ளார்.

அதில், ஒப்பந்தங்களை போடுவதற்காக நான் அமைச்சு பதவியை பெறவில்லை. நாட்டில் நடக்கும் அபிவிருத்திக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும் என்று ஜனாதிபதி எண்ணியிருப்பார். இதன் காரணமாகவே எமக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன.

அமைச்சுப் பதவிகள் கிடைக்காதவர்களுக்கு மனவருத்தமும் அதிருப்தியும் இருக்கக் கூடும். நான் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து கொள்ளவில்லை. நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கின்றேன்.

அமைச்சுப் பதவிகளைக் கைவிடுவது எனக் கட்சி தீர்மானித்தால், அமைச்சுப் பதவிகளைக் கைவிட நான் தயாராகவே இருக்கின்றேன்.

பல வருடங்களாக இலங்கையை ஏறெடுத்து பார்க்காத வெளிநாடுகள் தற்போது இலங்கைக்கு வந்து உதவிகளை செய்கின்றன–என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

(த)

# வெசாக் நிகழ்வில் நிஷா பிஸ்வால்



கொழும்பு, மே 05

அமெரிக்காவின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால், இலங்கைக்கான பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுக் கொழும்பில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கடந்த சனிக்கிழமை, இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியின் குழுவுடன் இணைந்து கொள்வதற்காக, பங்களாதேஷுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால், அங்கிருந்து கொழும்பு வந்திருந்தார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலருடன் இணைந்து, அரசியல் சந்திப்புகள், மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார்.


நேற்று முன்தினம் மதியம், ஜோன் கெரி இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு, நைரேபி நோக்கிப் பயணத்தை மேற்கொண்ட நிலையில், நிஷா பிஸ்வால் கொழும்பிலேயே தங்கியிருந்து, வெசாக் கொண்டாட்டங்களில் பங்கேற்றார்.

நேற்று முன்தினம் இரவு, கங்காராம விகாரையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மற்றும் அமைச்சர்கள் பங்கேற்ற வெசாக் வழிபாட்டில், நிஷா பிஸ்வாலும் கலந்து கொண்டிருந்தார்.

நேற்று அவர், இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார்.

# யாழ்.மாவட்டத்தில் பிரமாண்டமான வெசாக் கொண்டாட்டங்கள்





யாழ்ப்பாணம்.மே 5

யாழ்.மாவட்ட வெசாக் வலயம் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தலைமையில் நேற்று முன்தினம் இரவு பிரமாண்டமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்.முற்றவெளியில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் மதத்தலைவர்கள் மற்றும் படை அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸார், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 7.12 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் யாழ்ப்பாண வெசாக் வலய புத்தபெருமான், மின் விளக்குகளின் வெளிச்சத்துடன் முற்றவெளியில் அழகாகக் காட்சியளித்திருந்தார்.

இதற்காக இராணுவத்தினரால் வெசாக் அலங்காரங்கள் மிக பிரமாண்டமாக கடந்த சில நாள்களில் உருவாக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாண பொது நூலக முன்றில்,புல்லுக்குளம், திறந்த வெளி அரங்கப்பகுதி, முனியப்பர் [illegible]பிலடி போன்ற பகுதிகளில் வெசாக்தோரணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. [illegible]ாக் கூடுகள், புத்தரின் வரலாற்றுக் கதைகளைக் கூறும் காட்சி [illegible]கள், அலங்கார வ்ளைவுகள் என்பன மின்விளக்கு ஒளியில் அழகாக உருவாக் கப்பட்டு காட்சியளிக்கின்றன. (வ)



## பலாப்பழ சீசன் தென்மராட்சியில் ஆரம்பம்

தென்மராட்சி மே 5:

தென்மராட்சிப் பிரதேசத்தில் பலாப்பழ சீஸன் ஆரம்பித்துள்ளது. இதனையடுத்து பெருமளவு தென்னிலங்கை வர்த்தகர்கள் வாகனங்களில் பழங்களைக் கொள்வனவு செய்து கொண்டு செல்கின்றனர்.

தென்னிலங்கை வர்த்தகர்களின் வருகையை அடுத்து சாவகச்சேரி கொடிகாமம் சந்தைகளில் பெருமளவு பலாப்பழங்கள் பொது மக்களால் விற்பனைக்காகக் கொண்டு வரப்படுகின்றன.

இதேவேளை தென்னிலங்கை வர்த்தகர்கள் மீசாலைப் பகுதியில் வீடுவீடாகச் சென்றுவாகனங்களில் பலாப்பழங்களைக் கொள்வனவு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மழை பெய்ததால் மாமரங்களில் மாங்காய் உற்பத்தி குறைவாக இருப்பதால் சந்தைகளுக்கு இந்த வருடம் மாம்பழம் வருவது குறைவாக இருக்கும் என்று உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை வன்னிப்பகுதியிலிருந்து சந்தைகளுக்கு மாம்பழங்கள் கொண்டு வரப்படுகின்றபோதிலும் அதிகரித்த விலையில் அவை விற்கப்படுகின்றன.

அனேகமாகமேமாதபிற்பகுதியிலேயே மாம்பழம், பலாப்பழம் சந்தைகளுக்கு பெருமளவில் கொண்டு வரப்படுவதால் அவ்வேளையில் அவைகளின் விலைகளில் வீழ்ச்சியடையலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தென்னிலங்கையிலிருந்து சுற்றுலா வருகின்ற பயணிகள் தென்மராட்சிப் பகுதிகளில் ஏ 9 வீதியுடன் இணைந்துள்ள காணிகளில் காணப்படும் பலாக்காய்களை வாங்கிச் சென்று சமைத்துச் சாப்பிடுவதாகவும் உற்பத்தியாளர்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு பலாக்காய்களை இலவசமாகக் கொடுப்பதாகவும் தெரிவித்தனர். (வ-9)

## துண்டி இந்து மயானத்துக்கு எரியூட்டும் கொட்டகை வசதி

யாழ்ப்பாணம்,மே 5

கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு தனியான எரியூட்டும் கொட்டகை வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளதாக இந்து இடுகாடு மயான பரிபாலன சபையின் தலைவர் க.நடராசா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

'தற்போது முதற்கட்டமாக இரண்டு எரியூட்டும் கொட்டகைகள் அமைக்கப்படவுள்ளன. மழைகாலங்களில் மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு கொட்டகை வசதிகள் இன்றி மக்கள் சிரமப் பட்டு வருகின்றனர்.

தற்போது அவசரமாக முதலில் இரண்டு கொட்டகைகளை அமைத்து அதில் வைத்து சடலங்களை எரியூட்டுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப் படும்.

அதன்னவிட மக்கள் இறந்தோரின் சமயக் கிரியைகளை மயானத்தில் வைத்து நடத்துவதற்கு வசதியாக மேலும் ஒரு கிணறு அமைக்கப் படவும் உள்ளது.

கடந்த நூற்றாண்டு பழைமை மிக்க குறத்த இந்து மயானத்தை மிகவும் தூய்மையான முறையில் பேணிப் பாதுகாப்பதற்கும்பரிபாலனசபைபுதிய திட்டங்களைக் கையாளவுள் ளது.

கொழும்புத்துறை மேற்கு, கிழக்கு, கொய்யாத்தோட்டம், ஈச்ச மோட்டை, பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி, மணியம்தோட்டம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மயானத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

அத்துடன் சிவயோகசுவாமிகளின் சடலம் குறித்த மயானத்தில் தகனம் செய்யப்பட்டதன் காரணத்தால் அந்த மயானத்தின் புனிதத் தன்மை பேணப்படும் என்று அவர் மேலும் கூறினார். (வ-17)

## இந்திய மீனவரின் அத்துமீறல்குறித்து கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு, மே 5

இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடித்தொழில் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆம்திகதி முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறையிலுள்ள இன்பர்சிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை யாழ். மாவட்ட கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் என்.பொன்னம்பலம் மேற்கொண்டுள்ளார்.

இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்களின் அத்து மீறிய கடற்றொழில் நடவடிக்கை காரணமாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடி இறுதித்தீர்மானம் எடுக்க இருப்பதால் கடற்றொழில் அமைப்புக்களின் இரு பிரதி நிதிகளைக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு சம்மே ளனத் தலைவர் தெரிவித்துள்ளார். (வ-115)

## கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கு இளையோரின் பங்களிப்பு அவசியம்

### வடக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு



வவுனியா, மே 5

கூட்டுறவு அமைப்புகள் பல சாதனைகளை நிகழ்த்திய காலம் ஒன்றிருந்தது. ஆனால், இன்று கூட்டுறவுத்துறை நலிவடைந்திருப்பதோடு, கூட்டுறவு அமைப்புகளுக்கும் சமூகத்துக்கும் இடையிலான இடைவெளியும் அதிகரித்து வருகிறது. கூட்டுறவுத்துறையின் இந்தச் சரிவுக்குப் பல காரணங்கள் உள்ளன. அதில் இளையோர் பற்றாக்குறையும் ஒன்று. இளையோரை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டால் கூட்டுறவுத்துறைக்குப் புதுவேகம் பிறக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி அண்மையில் நெடுங்கேணியில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

"கூட்டுறவு அமைப்புகளின் தலைமைப் பதவிகளிலும், நெறியாளர் குழுவிலும் பெரும்பாலும் வயது முதிர்ந்தவர்களே இடம்பெற்றிருக்கிறார்கள். கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கு அவர்களின் அனுபவ அறிவு அவசியம். அதேசமயம் கூட்டுறவுத்துறைக்குப் புது இரத்தம் பாய்ச்சுவதற்கு இளையோரைக் கணிசமான அளவில் இணைத்துக் கொள்வதும் அவசியம் ஆகும். இளையோரைக் கூட்டுறவின் மீது நாட்டம் கொள்ளத்தக்க வகையில் கூட்டுறவுக் கட்டமைப்புகளில் மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

கூட்டுறவுத்துறையில் நாம் பாரம்பரிய அணுகுமுறைகளையே இப்போதும் கடைப்பிடித்து வருகி றோம். ஆனால், தனியார்துறை இப்போது பலம்மிக்கதுறையாக உருவெடுத்துள்ளது. திறந்த பொருளாதாரக் கொள்கையால் எமது உள்ளூர்த் தரம் சர்வதேசத் தரத்துக்கு முகங்கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய சவால்களையெல்லாம் எதிர்கொள்ளத்தக்க வகையில் கூட்டுறவுத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்தினால், கூட்டுறவு மீண்டும் மிடுக்கோடு நிமிரும் காலம் விரைவில் வரும்" என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.ரி.லிங்கநாதன், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன், வவுனியா மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.ரவீந்திரநாதன் ஆகியோருடன் வங்கி நடவடிக்கைகளில்பங்கேற்க வந்த பெருமளவிலான பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தார்கள்.(வ)

## ஆலயப்பொங்கல் விழா குறித்த கலந்துரையாடல்

வவுனியா, மே 5

வரலாற்று சிறப்புமிக்க புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தின் 2015 ஆம் ஆண்டின் பெங்கல் விழாவ[illegible]கான கலந்துரையாடல் நாளை மறு[illegible]தினம் வியாழக்கிழமை முற் பகல் 1[illegible] மணிக்கு ஆலயமண்டபத்தில் ப[illegible]பாலன சபைத்தலைவர் க,கிருபா[illegible]ரன்தலைமையில் நடைபெறவுள்ள[illegible] இந்தக் கலந்துரையாடலில் வ[illegible]னியா வடக்கு பிரதேச செயலா[illegible] வவுனியா வடக்கு பிரதேச சபை[illegible] தவிசாளர், வடமாகாண அமைச்[illegible]கள், வட மாகாண சபை உறுப்பின[illegible]கள், இந்து கலாசார உத்தியோ[illegible]தர்கள், சுகாதாரப் பிரிவின[illegible] இலங்கை செஞ்சிலுவை சங்[illegible]தினர், அன்னதான சபையின[illegible] ஆலய பக்தர்கள் பலர் கலந்து கொ[illegible]ளவுள்ளனர். (வ-40[illegible])

# யாழ்.வீரர்களுக்கு வளப் பற்றாக்குறை

## சரவணபவன் எம்.பி தெரிவிப்பு





யாழ்ப்பாணம், மே 5
வடமாகாண வீரர்களிடத்தில் தேசிய ரீதியாகவோ அல்லது சர்வதேச ரீதியாகவோ சாதிப்பதற்குரிய திறமைகள் உள்ளன. அந்தத் திறமைகளை வளர்த்துக் கொள்ளும் ஆர்வமும் அவர்களிடத்தில் உள்ளன. திறமைகளும் ஆர்வமும் இருந்த போதிலும் அவற்றை மேலும் வளர்த்துக்கொள்ளத் தேவையான வளங்களின் பற்றாக்குறையே எமது வீரர்கள் மாகாணத்துடன் தமது விளையாட்டுப் பயணங்களையும் சாதனைகளையும் முடித்துக்கொள்ள பிரதான காரணமாக உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் 'ஹோப்' திட்டத்தின் கீழ் விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கடந்த கால அரசை விட தற்போதுள்ள அரசு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினூடாகப் பிரதேச வாரி யாக விளையாட்டுக் கழகங்களை வளர்த்தெடுப்பதற்காக மேற் கொண்ட இந்த முயற்சி பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால் இந்த அரசுக்கு நாம் செய்த உதவிக்கு அரசால் எமக்குச் செய்யப்படும் உதவி போதாது. எமது இளைஞர்கள் வேறு சிந்தனைகளில் கவனத்தைச் சிதற விடுவதை விட விளையாட் டில் கவனம் செலுத்தி தொடர்ந்து சாதித்துக் கொண்டிருக்க வேண்டும்– என்றார்.

'ஹோப்' திட்டத்தின் கீழ் 15 பிரதேச செயலகங்களில் இருந்தும் மொத்தமாக 466 கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்திலும், கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, சாவகச்சேரி, கோப்பாய் ஆகிய பிரதேச செயல கங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்திலும், காரை நகர், உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதா னத்திலும் வைத்து குறிப்பிட்ட உப கரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்கள் த.சித்தார்த்தன், க.விந்தன் ஆகியோரும் கலந்துகொண்டமை குறிப்பிடத் தக்கது.

(த–ரி)

# அமரகவி

## அரையிறுதிக்கு



யாழ்ப்பாணம், மே 5
யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கிடையே நடத்தும் 'பி' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் இணுவில் அமரகவி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழகஅணி மோதிக்கொண்டது. 5 செற்களைக் கொண்ட காலிறுதியாட்டத்தில். இணுவில் அமரகவி விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. (த–ரி–23)

# மன்னார், நானாட்டான் அணிகள் மாவட்ட மட்டத்தில் சம்பியன்



மன்னார், மே 5
மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் மன்னார் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் நானாட்டன் பிரதேச செயலக அணியும் வெற்றிபெற்று சம்பியன்கள் ஆயின.

கடந்த சனிக்கிழமை மன்னார் புனித சவோரியார் ஆண்கள் தேசியப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து நானாட்டன் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 35:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. தொடர்த்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து நானாட்டன் பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. இதில் நானாட்டன் பிரதேச செயலக அணி 18:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

(த–ரி–23)

# கரைச்சிப் பிரதேச செயலக தடகளப் போட்டிகள் இன்று

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டு; கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப்போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் ராஜா ரணதுங்கவும் கலந்துகொள்ளவுள்ளனர். (த–ரி–86)

# நீக்கிலஸ்-யங்ஹென்றிஸ் ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், மே 5
யாழ் உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் லீக் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

(த–ரி–23)

# ஐக்கியம் அபாரம்



யாழ்ப்பாணம்,மே 5
மன்னார் உதைப்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் லீக் முறையிலான உதைப்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் தோட்டவெளி ஜக்கியம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அடம்பன் ஜக்கிய விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் தோட்டவெளி ஜக்கிய விளையாட்டுக்கழக அணி 5:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

(த–ரி–23)

# கற்சிலைமடு அ.த.க. கபடியில் ஆதிக்கம்



முல்லைத்தீவு, மே 05
முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கபடித் தொடரில் கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மூன்று பிரிவுகளில் கிண்ணம் வென்று அசத்தியுள்ளது.

15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கற்சிலைமடு அ.த.க. மற்றும் பாலி நகர் ம.வி பாடசாலைகள் மோதிக் கொண்டன. இந்த ஆட்டத்தில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை 40:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதில் 3ஆம் இடத்தை முல்லைத்தீவு மகா வித்தியாலயம் பெற்றது

19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலையை எதிர்த்து வன்னிவிளாங் குளம் அ.த.க.பாடசாலை மோதிக்கொண்டது. இதில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை 53:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. இதில் 3ஆம் இடத்தை முல்லைத்தீவு ம.வி தனதாக்கியது.

15 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கற்சிலைமடு அ.த.க.பாடசாலையை எதிர்த்து முல்லைத்தீவு மகாவித்தியாலயம் பலப் பரீட்சை செய்தது. இந்த ஆட்டத்தில் கற்சிலைமடு அ.த.க. பாடசாலை 47:35 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. இதில் 3ஆம் இடத்தை பாலிநகர் ம.வி பெற்றது

19 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தை எதிர்த்து முத்தையன்கட்டு வலதுகரை வித்தியாலயம் மோதிக் கொண்டது.

இந்த ஆட்டத்தில் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் 35:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

(த–ரி–433)




# பழி தீர்த்தது தீவுகள் தொடர் சமநிலையில்



இங்கிலாந்து எதிர் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் நேற்றையதினம் தீவுகளில் தீவுகளின் வெற்றியுடன் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து தொடர் 1:1 என்று சமநிலையாகியுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸ் 257 ஓட்டங்களில் முடிவுக்கு வந்தது. பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக ரெய்லர் 3 இலக்குளையும் கபிரியேல், ஹோல்டர் தலா 2 இலக்குகளையும் சாமுவேல்ஸ், பேர்மூல் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

257 ஓட்டங்களைப் பெற்றால் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறலாம் என்ற நிலையில் களமிறங்கிய தீவுகள் தனது முதல் இன்னிங்ஸிற்காக சகல இலக்குகளையும் இழந்து 189 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக அண்டர்சன் 6 இலக்குகளையும் புரோட், அலி, ரூட், ஸ்ரோக்ஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

68 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்தை தீவுகளின் வீரர்கள் திணறடிக்கத் தவறவில்லை.

இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 39-5. மூன்றாம் நாளுக்காக தொடர்ந்து களத்தில் பலன்ஸும் ஸ்ரோக்ஸும். பலன்ஸ் நிலைக்கத்தவற ஸ்ரோக்ஸ் சற்று நிதானித்தார். பட்லர் ஸ்ரோக்ஸிற்கு ஈடுகொடுக்க இங்கிலாந்து சற்று தலை நிமிர்ந்தது. ஆனாலும் 35 ஓட்டங்களைத் தாண்டி இருவராலும் பயணிக்க முடியவில்லை. பின்வரிசை வீரர்களின் அதிகபட்ச தனிநபர் ஓட்ட எண்ணிக்கை 2 மட்டுமே. முடிவில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக இங்கிலாந்து 123 ஓட்டங்களில் சுருண்டது.

192 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த தீவுகளுக்கு தொடக்கவீரர்களான பிறீத் வைற்றும் ஹோப்பும் சிறந்த தொடக்கத்தை வழங்கத் தவறினர். 35 ஓட்டங்களில் இருவரும் ஓடி மறைந்தனர். பிராவோ நங்கூரம் போட்டது போல் நிலைத்தார் சாமுவேல்ஸ் நிதானித்தார். மேற்கிந்தியத் தீவுகள் வெற்றியை நோக்கி படிப்படியாக நடைபோட ஆரம்பித்தது. அணியின் ஓட்டம் 70ஆக இருந்த பொழுது சாமுவேல்ஸின் இன்னிங்ஸ் நிறைவுக்கு வந்தது. சந்திரப்போல் 'டக்' கில் பவிலியன் திரும்ப தீவுகளின் வெற்றி தற்காலிகமாகத் தடைப்பட்டது. முதல் இன்னிங்ஸில் அரைச்சதம் கடந்து அணியைக் காப்பாற்றிய பிளெக்வூட் இரண்டாவது இன்னிங்ஸிலும் நிலைக்கத் தவறவில்லை. இணைப்பாட்டமாக 108 ஓட்டங்களைப் பகிர்ந்தார்கள். கிரிக்கெட்டின் தாயகத்தின் தோல்வி உறுதியானது. 88 ஓட்டங்களுடன் பிராவோ வெளியேறினாலும் ஆட்டத்தை அமர்க்களமாக முடித்துவைத்து ஆட்ட நாயகனாக தெரிவானார் பிளெக்வூட். தொடராட்ட நாயகனாக இலக்கு வேட்டை நடத்திய அன்டர்சன் தெரிவானார். மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இரு அணிகளுக்கும் தலா ஒரு வெற்றியுடனும் ஒரு சமநிலையுடனும் சமநிலையில் முடிவடைந்தது. (த-ரி)

## மஹேலவின் புதிய நுட்பம்



பள்ளி பருவத்தில் இருந்தே தேசிய அணிக்கான வீரர்களை தேடும் பணியைத் தொடர வேண்டும் என்று ஓய்வுபெற்ற ஜாம்பவான் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர ஆட்டக்காரரான மஹேல ஜெயவர்த்தன, தரமான கிரிக்கெட் வீரர்களை தெரிவு செய்யும் பணியில் தீவிரம் காட்டி வருகிறார்.

இந்த நிலையில் இது தொடர்பாக மஹேல தெரிவிக்கையில்,

பள்ளிப் பருவத்தில் இருந்தே கிரிக்கெட்டை வளர்க்க வேண்டும். அதை ஊக்குவிக்க பள்ளிப் பருவத்தில் உள்ள சிறந்த வீரர்களை இனங்கண்டு பயிற்சி வழங்கவேண்டும் என்ற சிறந்த ஒரு திட்டத்தை வழங்கியுள்ளேன். அதன்படி செயற்பட்டால் சிறந்த வீரர்களை தெரிவு செய்யலாம். தேசிய அணிக்கான வீரர்களையும் நாம் இனங்கண்டு கொள்ள முடியும்-என்றார். (த-ரி)

## சேலை கட்டிய டுமினி



ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணிக்கு எதிரான வெற்றியை டெல்லி அணித் தலைவர் டுமினி வித்தியாசமான முறையில் கொண்டாடியுள்ளார். டுமினி சேலையைக் கட்டிக்கொண்டு கலக்கியுள்ளார்.

சகவீரர். குரீந்தர் சாந்து, இந்த புகைப்படத்தை டுவிட்டர் வலைதளத்தில் பதிவேற்றி, 'டுமினியின் புதிய அவதாரத்தைப் பாருங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

டெல்லி அணியில் அணித் தலைவருக்கே சேலை கட்டிவிடும் அளவுக்கு குறும்புத்தனமான வீரர் என்றால் அது யுவராஜ் தான். அவர் தான் இது போன்று வித்தியாசமாக ஏதாவது செய்வார். அதனால் டுமினிக்குச் சேலை கட்டிவிட்டது யுவராஜ் சிங்காக இருக்கலாம் என்று ரசிகர்கள் கிண்டல் அடித்து வருகின்றனர். (த-ரி)

## ரெய்னாவின் பாணியில் ரோகித் விரைவில் தோழியுடன் திருமணம்



ரோகித் சர்மா தனது தோழி ரித்திகாவை விரைவில் திருமணம் செய்யவுள்ளார்.

இந்திய அணியின் தொடக்க வீரரான ரோகித் சர்மா தற்பொழுது மும்பை அணியின் தலைவராக செயற்படுகிறார். இவரது விளம்பர முகாமையாளராக ரித்திகா சஜ்தே பணியாற்றுகின்றார். இருவரும் 6 ஆண்டு கால நெருங்கிய நண்பர்கள். இவர்களின் நட்பு தற்போது காதலாக மாறியுள்ளது. விரைவில் ரோகித் - ரித்திகா திருமணம் நடக்க உள்ளது. இதனை ரோகித் தனது 'ருவிட்டர்' செய்தியில் உறுதி செய்துள்ளார். (ரி)

## தமிழை விரும்பும் பிராவோ



சென்னையில் அண்மையில் பிரபல நிறுவனம் ஒன்றினால் பாடல் வெளியீடு ஒன்று முன்னெடுக்கப்பட்டது. தமிழ் அணியான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடும் வீரர் பிராவோ இந்த நிகழ்வில் கலந்து நடனமாடியதுடன் தமிழ் பாடல்களை தான் அதிகம் ரசிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிராவோ தெரிவித்ததாவது:-

ஆடுகளத்தில் எனது பெயர் பிராவோ என்று எல்லோருக்கும் தெரியும். ஆடுகளத்துக்கு வெளியே டிஜே. பிராவோ என்று சொல்வதில் பெருமைப்படுகிறேன். உலகக்கிண்ண அணியில் இடம் கிடைக்காதபோது இசை ஆர்வத்தில் இருந்தேன். இந்திய இசையையும், சென்னையைச் சார்ந்த தமிழ் இசையையும் நான் மிகவும் விரும்புகிறேன். ரிங்கா...ரிங்கா.. மற்றும் லுங்கி டான்ஸ் பாடல்கள் எனக்கு மிகவும் பிடித்ததாகும். இங்குள்ள தெருக்களில் நடந்து சென்று மாம்பழங்களை வாங்கிச் சென்று இருக்கிறேன். எனது சொந்த ஊரான டிரினிடாட்டைச் சென்னை நகரம் நினைவுபடுத்துகிறது. இரண்டு இடங்களிலுமே இசையை விரும்பும் சாதாரண மக்கள் இருக்கிறார்கள். உலா என்ற தமிழ் படத்தில் நான் நடித்து இருக்கிறேன் - என்றார்.

இந்த நிகழ்ச்சியில் சென்னை சுப்பர் கிங்ஸ் தலைவர் டோனி தனது மனைவி சாக்ஷி மற்றும் குழந்தையுடன் பங்கேற்றார். (த-ரி)

## வெற்றிப்பாதைக்கு திரும்பினார் பெடரர்



சுவிற்சர்லாந்தின் வீரர் ரோஜர் பெடரர் இஸ்தான்புல் ரென்னிஸ் தொடரில் கிண்ணத்தை வென்று அசத்தியுள்ளார்.

இஸ்தான்புல் டென்னிஸ் தொடர் இந்த வருடமே முதல்முறையாக நடத்தப்படுகின்றது. இந்த தொடரின் இறுதியாட்டத்தில் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர், பாப்லோ சாவேசுடன் மோதினார். முதல் செட்டை 33 நிமிடங்களிலேயே கைப்பற்றிய பெடரருக்கு இரண்டாம் செட்டில் கடும் சவாலாகத் திகழ்ந்தார் சாவேஸ். முடிவில் பெடரர் 6-3, 7-6 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றினார். 2012ஆம் ஆண்டு மாட்ரிட் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் களிமண் தரையில் கிண்ணம் வென்றிருந்த ரோஜர் பெடரர், 3 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் முறையாக களிமண் தரையில் கிண்ணம் வென்றது இந்தத் தொடரிலேயாகும். (ரி)

## ஜோன்சன் வீசிய பந்தை திட்டமிட்டு விளாசினோம்



மெல்பேர்ன் டெஸ்டில் அணித் தலைவர் விராட் கோஹ்லியுடன் சேர்ந்து, மிட்செல் ஜோன்சன் பந்துவீச்சை எதிர்கொண்ட அனுபவம் பற்றி நடப்பு ஐ.பி.எல். தொடரில் ரஹானே மனம் திறந்து பேசியுள்ளார்.

இது தொடர்பாக ரஹானே தெரிவித்ததாவது:-

ஜோன்சனின் பந்துவீச்சை நிதானிக்கக் கூடாது. வேகமாக அடித்து ஆட வேண்டும். இதை நான் கோஹ்லியிடம் தெரிவித்தபொழுது கோஹ்லி என்னிடம் 'வேகமாக ஓட்டங்களை எடுப்பது முக்கியம், ஏனெனில் நாம் இங்கு டெஸ்ட் ஆட்டத்தை சம நிலையில் முடிக்க வரவில்லை. வெற்றி பெற வந்திருக்கிறோம் என்று தெரிவித்தார். இனிமேல் ஜோன்சன் பவுன்சர் வீசினாலும் நாம் அதை அடித்து ஆடுவதே சிறந்தது காத்திருக்க வேண்டாம் என்று திரும்பத் திரும்ப அறிவுறுத்தினார். அதற்கேற்ப ஆட ஆரம்பித்தோம். இந்த அனுபவம் மறக்க முடியாதது-என்றார். (த-ரி)

## சொதப்பலில் சேவாக் சாதனை



பஞ்சாப் அணியின் அதிரடி ஆட்டக்காரரான சேவாக், நடப்பு ஐ.பி.எல். தொடரில் தொடர்ச்சியாக சொதப்பி வருகிறார். சரியான தொடக்கம் அமையாததால் பஞ்சாப் அணியும், தொடர் தோல்வியைத் தழுவி வருகிறது. இந்த நிலையில் பஞ்சாப்பின் தோல்வியுடன் தொடர்புடைய மோசமான சாதனைக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார் சேவாக்.

சேவாக் கடந்த 4 இன்னிங்ஸில் மொத்தமாக சேர்த்து (1,1,1,2) 5 ஓட்டங்களே எடுத்துள்ளார். மேலும், முதல் பந்துப்பரிமாற்றத்தில் இதுவரை 13 முறை ஆட்டமிழந்துள்ளார். இதன்மூலம் ஐ.பி.எல். தொடரில் அதிகமுறை முதல் பந்துப்பரிமாற்றத்தில் ஆட்டமிழந்த முதல் வீரர் என்ற மோசமான சாதனையை படைத்திருக்கிறார் சேவாக். (ரி)

# வெற்றிப்பாதைக்கு திரும்பியது சென்னை



ரெய்னாவின் அரைச்சதமும் பந்து வீச்சாளர்களின் சிறப்பான செயற்பாடும் கட்டுக்கோப்பான களத் தடுப்பும் கைகொடுக்க 24 ஓட்டங்களால் பெங்களூரை வீழ்த்தி வெற்றிப் பாதைக்கு திரும்பியது சென்னை.

சென்னை எதிர் பெங்களூர் அணிகளுக்கிடையிலான ஆட்டம். அதிரடிப் பட்டாளங்கள் வரிசையாக இருந்தாலும் தொடர்ந்து சொதப்பி வரும் சென்னை. அதிரடி வீரர்களின் சொதப்பல் மட்டும் சென்னையின் தோல்விக்கு காரணம் இல்லை. நட்சத்திர வீரர் அஸ்வின் இல்லாதமையும் சென்னையின் தடுமாற்றத்துக்கு காரணம். அந்த வகையில் இந்த ஆட்டத்திலும் அஸ்வின் விளையாடவில்லை. பெங்களூர் அணியில் சகல வீரர்களும் சிறப்பான திறனில் (போர்மில்) நீடிக்கின்றார்கள். எனவே சவாலான பெங்களூரை எதிர்த்து ஹற்றிக் தோல்வியை தவிர்க்கும் முனைப்பில் சென்னை களமிறங்கியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டோனி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் மக்கலத்துடன் சிமித். முதல் பந்துப் பரிமாற்றத்தை வீசுவதற்காக உலகக் கிண்ண தொடராட்ட நாயகனும் பெங்களூரின் நட் சத்திர வீரருமான ஸ்ராக். முதல் பந்துப் பரிமாற்றத்தின் முதல் ஐந்து பந்துகளையும் வீணடித்துவிட்டு ஆறாவது பந்தில் போல்ட்டானார் சிமித். சென் னைக்கு சிக்கல் சிமித் வடிவில் ஆரம்பமானது. வழக்கமான அதிரடியில் மக்கலம், மக்கலத்துக்கு நேர் எதிராக நிதானித்தார் ரெய்னா. மக்கலத்தால் நிலைக்க முடியவில்லை. இணைந்தார் பிளாஸிஸ். பிளாஸிஸ் களமிறங்கி சிறிது நேரத்தில் ரெய்னா இமாலய சிக்சர் ஒன்றை விளாசினார். பிளா ஸிஸ் சார்பிலும் சிக்சர் இல்லாமல் இல்லை. சென்னையின் ஆட்டம் ஆரம்பமாகின்றது என்று எண்ணிய வேளையில் விடைபெற்றார் பிளாஸிஸ். தலைமை இன்னிங்ஸிற்காக களத்தில் டோனி. டோனி வந்ததும் அரைச்சதத்துடன் ரெய்னா ஆட்டமிழந்தார். மொத்தத்தில் சென்னை சார்பாக இணைப்பாட்டம் இல்லை. இறுதிக்கட்டத்தில் இரண்டு சிக்சர் களை விளாசினார் டோனி முடிவில் சென்னை 148–9.

120 பந்துகளில் 150 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலைமை. பெங்களூரின் துடுப்பாட்ட வரிசையில் இந்த இலக்கு நிச்சயம் எடுப டாது. ஆனால் 134 ஓட்டங்களை அடித்துவிட்டு நடப்புச் சம்பியன் கொல்கத்தாவை வீழ்த்திய சென்னையால் எதையும் சாதிக்கலாம். சென்னையை சென்னையில் வைத்தே வீழ்த்த வேண்டும் என்ற முனைப்பில் களத்தில் ஹோக்லியுடன் மடின்சன். பான்டேயின் பந்தில் போலட் முறையில் பவிலியன் திரும்பினார் மடின்சன். வில்லியர்ஸ் தனது வழக்கமான பாணியில் அதிரடியைத் தொடக்கினாலும் விட்டுவைக்க வில்லை பான்டே. மன்டீப் சிங் எந்தவொரு பந்துவீச்சையும் எதிர்கொள்ளாத நிலையில் ரண்அவுட் ஆக பெங்களூரின் கஸ்டகாலம் ஆரம்பமா னது. ஆனால் இந்தியாவின் எதிர்கால அணித் தலைவர் ஹோக்லி ஒருமுனையில் நிலைத்துநிற்க பக்க பலமாக நிதானித்தார் தமிழ் வீரர் டினேஸ் கார்த்திக். இருவரும் இணைந்து வெற்றியிலக்கை அடைவதில் முனைப்பாக ஈடுபட்டனர். வெற்றிக்காக 6 பந்துப் பரிமாற்றங்களில் 52 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஹோக்லியை பவிலியனுக்கு அனுப் பினார் பிராவோ. அடுத்த பந்துப் பரிமாற்றத்திலேயே டினேஸ் கார்த் திக்கும் ஆட்டமிழக்க ஆட்டத்தில் தமிழ்காற்று வீசத்தொடங்கியது. இறுதிப்பந்துப் பரிமாற்றத்தில் 25 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை அடுத்தடுத்து இரண்டு இலக்குகளை பிராவோ சாய்க்க பெங்களூர் 124 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 24 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ரி)

# பார்சிலோனா அசத்தல் வெற்றி

லா லிகா தொடரில் பார்சிலோனா அணி கோர்டோபா அணியுடன் மோதிய ஆட்டத்தில் லுயிஸ் சுராஸ் ஹற்றிக் கோல் மூலம் பார்சிலோனா 8–0 என கோர்டோபாவை வீழ்த்தியது.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் இரு அணி வீரர்களும் திறமையாக விளையாடியதால் 41 நிமிடங்கள் வரை கோல் பதியப்படவில்லை. 42ஆவது நிமிடத்தில் பார்சிலோனா வீரர் ராகிடிக் முதல் கோலை அடித்தார். பின்னர் முதல் பாதி நேரம் முடியும் கடைசி நிமிடத்தில் லுயிஸ் சுராஸ் மற்றொரு கோல் அடித்தார். மெஸ்சி கூடுதல் நேரத்தில் ஒரு கோல் அடித்தார். இதனால் முதல் பாதி நேரத்தில் பார்சிலோனா 3–0 என்ற அடிப் படையில் முன்னிலை பெற்றிருந்தது.

இரண்டாவது பாதியில் 53ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோல் அடித்த சுராஸ் 88ஆவது நிமிடத்தில் ஹற்றிக் கோல் அடித்து அசத்தினார். 80ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்து தனது கோல் எண்ணிக்கையை 2ஆக உயர்த்தினார் மெஸ்சி. 65ஆவது நிமிடத்தில் பிகு ஒரு கோலும், 85ஆவது நிமிடத்தில் நெய்மர் ஒரு கோலும் அடித்தனர். இதனால் பார்சிலோனா 8–0 என கோர்டோபாவை வீழ்த்தியது.

(த–ரி)



# ஸ்ரீபன்ஸ் எதிர் செரீனா இரண்டாவது சுற்றில் பலப்பரீட்சை



அமெரிக்க வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் மாட்ரிட் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்றில் வெற்றி பெற்றுள்ளார்.

ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட்டில் நடைபெற்று வரும் மாட்ரிட் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல்தர வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், சக நாட்டு வீராங்கனையான மேடிசன் பிரெங்கிளை எதிர் கொண்டார். அதிரடி ஆட்டத்தை வெளிப் படுத்திய செரீனா வில்லியம்ஸ் 6–0, 6–1 என்ற நேர் செட்களில் பிரெங்கிளை வீழ்த்தி இரண்டாம் சுற்றுக்கு முன்னேறினார். 55 நிமிடங்களே இந்த ஆட்டம் நீடித்தது. மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்டீபன்ஸ், பெத்தானி மேடக் சாண்ட்ஸை எதிர் கொண்டார். இந்த ஆட்டத்தில் ஸ்லோன் ஸ்ரீபன்ஸ் 3–6, 6–1, 6–4 என்ற செட்களில் வெற்றி பெற்றார். ஸ்ரீபன்ஸ் இரண்டாவது சுற்றில் செரீனா வில்லியம்ஸை எதிர் கொள்கிறார்.

ரென்னிஸ் வரலாற்றில் அதிக வாரங்கள் முதலிடத்தில் நீடித்த வீராங்கனைகள் வரிசையில் இரண்டாவது இடத்தில் இருக்கும் செரீனா நடப்புத் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றுவதன் மூலம் மேலும் சில வாரங்கள் முதலிடத்தில் நீடிக்கலாம்.

அடுத்த சில மாதங்களில் அமெரிக்க ரென்னிஸ் தொடர் தொடங்கவுள்ள நிலையில் சொந்த மண்ணில் செரீனாவின் ஆதிக்கம் அதிகரிக்கும் என்ற காரணத்தினால் குறித்த சாதனையை முறியடிக்கும் வாய்ப்பும் செரீனாவுக்கு உண்டு. (ரி)


உதயன் advt@uthayan.com 021 5671111

**காணி விற்பனை**

தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கொல்லில்லைப் பெருமானம் மறுபிரிவுகளும் நிலப்பரப்பு பத்து (10) உடைய காணி விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் பகுதியாகவும் பிரித்துத் தரப்படும்.

தொடர்பு: T.P:0779672690

**பணியாளர் தேவை**

சாவகச்சேரியில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு கொத்துறொட்டி, பராட்டா, சிற்றுண்டிகள், புரியாணி, பிறைட்றைஸ் தயாரிக்க தெரிந்த பணியாளர்களும், சமையல்வேலையில் அனுபவம் வாய்ந்தவர்களும், உணவு பரிமாறக் கூடிய பணியாளர்களும் உடன் தேவை.

T.P: 0776491027, 0779400963

SAAMSON
Experts in English Training
Diploma in English
தொலைக்கல்வி டிப்ளோமா

1. பாடசாலை மாணவர்களுக்கானது (NDES)
2. ஆசிரியர்களுக்கானது (NDET)
3. பல்கலை மாணவர்களுக்கானது (NDEU)
4. அலுவலர்களுக்கானது (NDEO)
5. வெளிநாடு செல்வோருக்கானது (NDEF)

இன்றும் நாளையும் பதிவுசெய்வோருக்கு பயிற்சிக்கட்டணம் ரூ. 1200 மட்டுமே.

அனுமதி பாடப்புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்!

SAAMSON
Experts in English Training.
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567


இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.